உ

ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் துணை

ஸ்ரீ :

இணுவில் — வட்டுவினி — தர்மஸாஸ்தா குருகுலம்

காயத்ரிபீடம்

ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள்

''ஸர்வசித்தி நல்கும்''

# ஸௌந்தர்யலஹரிக்கீர்த்தனாஸதகம்

(மூலம்: ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதர்)

இயற்றியவர்:


'' கலாரத்னா ''

'' கலாபூஷணம் ''

யாழ்ப்பாணம் (இணுவில)

பிரம்மஸ்ரீ

**மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்**

[விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்—
யாழ். பல்கலைக்கழகம்]


இஃது

ஸ்ரீமதி வீரமணி ஐயர் ருக்மணி அம்மாள் அவர்களின்
ஆத்மஸாந்தி மலராக இணுவில் -வட்டுவினி —
தர்மஸாஸ்தா குருகுலம்
காயத்ரிபீடம்
ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின்
பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பெறுகிறது.

29 – 4 – 1997

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் பிரதம குரு
'' சிவாகமஞானபானு '' '' பிரதிஷ்டாரத்ன ''
**சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

இசைக் கலைஞர்களும் இயற்றமிழ் வல்லுனர்களும் நிறைந்து விளங்கும் இணுவையம் பதிக்குக் கலசம் வைத்தாற் போல் திகழ்பவர் 'கவிமாமணி' வீரமணிஐயா அவர்கள். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் இயல்பாகவே இவருடன் இசைந்திருப்பதை அறியாதவர் எவரும் இல்லை என்பதை எல்லோரும் அறிவர்.

சமயம், கலை, இலக்கியம், சமூகம் எனப் பல துறை சார்ந்த மக்களுக்கும் அவர்களது துறைக்கு ஏற்றவாறு முறையாகக் கவி நிறைத்து, கையுறை எதையும் எதிர்பார்க்காது குறைவறப் பணிபுரியும் ஐயா அவர்கள், எம் மத்தியில் உறைவது எமக்குக் கிடைத்த இறை வரமாகும்.

அண்மையில் எமது பரராஜசேகரப் பிள்ளையார் மீது ஓர் அந்தாதியை இயற்றித்தந்து எமது சிந்தையைக் குளிர வைததவர். இன்று ''சௌந்தர்யலகரி'' என்ற அருட்பொலிவு நிறைந்த பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்து எமது இருட்பொலிவை நீக்க வந்துள்ளார்.

''சௌந்தர்யலகரி'' தெய்வத்திடம் இருந்து தெய்வ மனிதனாகிய ஆதிசங்கரருக்குக் கிடைத்தது. அம்பாளின் அருளழகு, ஆட்சிஅழகு, மாட்சிஅழகு, காட்சியழகு, கருணையழகு, கடைக்கண்ணழகு, கழலழகு, பேச்சழகு எனப் பல அழகின் அலைகள் இன்ப வெள்ளமாகப் பெருகும் பாடல்களாக இவை விளங்குகின்றன. அம்பாளின் உடல் அழகை வர்ணித்து எமது உள்ளத்தின் அழகைப் பெருக்கும் கவிகள் அவை.

அம்மூலக் கவியின் கருத்தம்சம், கவி அம்சம் மாறாமல் அப்படியே மொழிபெயர்த்து வேதங்களும் கீதங்களும் பாதங்களாக விளங்கும் வட்டுவினிக் கண்ணகா பரமேஸ்வரி அம்மன்

மீது இவர் கொண்ட மட்டிலா அன்பின் காரணமாக அவ் அம் மனை முத்திரையாக வைத்து கீர்த்தனையாக வெளியிட்டமை இவர் ஏற்படுத்திய புதுமை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கீர்த்தனைகள் ஒவ்வொன்றும் தமிழும் வடமொழியும் கலந் திருந்தாலும் படிப்பவர் எவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இலகுமுறையில் எழுதியிருப்பது இவரது தனித்திறமையை எடுத் துக்காட்டுகிறது. கீர்த்தனைகள் கூறும் கருத்துக்கள் புலப்படும் வண்ணம் ராகங்களை அமைத்திருப்பதை இவரது சங்கீதப் புலமையை கோடிட்டுக் காட்டுகிறது.

எனவே இப்பாடல்கள் சைவமக்கள் யாவரும் படித்துப் பலன்பெற வேண்டியவை. அப்பாடல்கள் ஒவ்வொன்றும் பிணி யகல, கல்வி பெற, செல்வம் வளர, வீரம் திகழ, நீண்ட ஆயு ளுடன் வாழ, பேச்சு வன்மை பெற எனப் பல தலைப்புகளில் விளங்கியுள்ளன. இவற்றை எமக்கு உருவாக்கித்தந்த அண்ணா அவர்கள் தமது மனைவியின் ஆத்மா, அம்பாளின் பாதத்தை அடைய வேண்டி அவரின் நினைவாக அர்ப்பணம் செய்கிறார்.

இவர் புவியில் குவிந்திருக்கும் கவிகளுக்குள் கவியாக மிளிர் கிறார். அதாவது "புவிகுவிகவிரவி" என இவரை நாம் பாராட்டுவது மிகவும் பொருத்தமாகும். இவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து கவிப்பணியையும் கலைப்பணியையும் வளர்க்க பரராஜ சேகரப் பெருமான் பாதகமலங்களை வேண்டுகிறேன்.

இணுவில் — சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
3-1-97 — ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்



இணுவில்—வட்டுவினி தர்மசாஸ்தா குருகுல அதிபரும்
காயத்ரிபீடம், ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள்
தேவஸ்தான பிரதம குருக்களுமான
''வேதாகம ஞானபாஸ்கரன்''
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்கள்
வழங்கிய

# ஆசியுரை

கானவாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களுடைய நெஞ்சிலுறைபவள் அவருடைய சகதர்மிணி ருக்மணி அம்மா. இதயத்தைத் தனதாக்கிக்கொண்டு அவர் அன்போடு அழைக்கும் ருக்கு, அவரின் சிநதனையில் உறைய இணுவில் காயத்ரிபீடம் கண்ணகா பரமேஸ்வரிக்கு இடமளித்தார். எப்போது கண்ணகா பரமேஸ்வரியின் திருஊஞ்சல் பாட்டில் ''சௌந்தர்யலகரி நீயே அம்மா'' என்று பாடினாரோ அப்பொழுதே கண்ணகா பரமேஸ்வரி தன்மேல் சௌந்தர்யலகரிக் கீர்த்தனைகளைப் பாட ஆக்ஞாபித்துவிட்டாள். நெஞ்சிலுறையும் அவரின் உயிரோவியம் ருக்மணி அம்மா, இந்தியாவிலிருந்து சௌந்தர்யலகரி ஸ்லோகப் புத்தகத்தைக் கொண்டுவந்து தான் முதலில் அவற்றை அப்யசித்து, பின் தனது பர்த்தாவிடம் அவற்றைக் கீர்த்தனை மாலைகளாகத் தொடுத்து அவருடைய சிந்தனையில் வீற்றிருக்கும் கண்ணகா பரமேஸ்வரிக்குச் சாத்தும்படி வேண்டுகோள் விடுத்தார். ருக்கு! ருக்கு! என்று வாழ்நாள் முழுவதும் வாய்நிறைய அழைத்து அவருடன் இரண்டறக் கலந்து வாழ்ந்த வீரமணிஐயர் ருக்குவின் ஆசையை நிறைவேற்றியிருக்கிறார்.

ஆதிசங்கரரின் சௌந்தர்யலகரி ஸ்லோகங்கள் வீரமணி ஐயாவின் சிந்தனையில் நின்று அருள் நர்த்தனம் புரியும் இணுவில் காயத்ரிபீட கண்ணகா பரமேஸ்வரிக்கு கீர்த்தனா சதகமாகத் தொடுக்கப்பட்டு சாத்தப்பட்டிருக்கிறது.

அதில்தான் என்ன அற்புதங்கள்! எதிர்பாராதவையெல்லாம் நடந்தேறின! இந்தியாவிற்கு காஞ்சிப்பெரியவாள் சமூகத்திற்கே இக் கீர்த்தனாசதகம் எடுத்துச் செல்லப்பட்டது ஆசிபெறுவதற்கு. ஆனால் காஞ்சிப் பெரியவாளோ அதன் பெருமையை வியந்து அதைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டு ஆசி நல்கியிருக்கிறார்.

அமிர்தவர்ஷிணி என்ன! ஆனந்த பைரவி என்ன! இப்படியாக எல்லா ராகங்களிலும் சிருஷ்டிகர்த்தா வீரமணி ஐயர். உள்ளமுருக சிந்தனைகளைப் பரப்பியிருக்கிறார். இணுவில் வட்டுவினிப்பதியுறை காயத்ரிபீட கண்ணகா பரமேஸ்வரியின் திருவருள் ஆசி அவருக்குக் கிடைப்பதாகுக.

மேலும் இக் கீர்த்தனைகளைப் பாடச் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் மிகமிக அரிய பாக்கியசாலிகள். அவர்கட்கும் அம்பிகையின் திருவருளாசி கிடைப்பதாகுக.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

● ● ●

'நியாயசிரோன்மணி'

## சிவஸ்ரீ கி. சுப்ரம்மண்ய ஸாஸ்திரிகள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

**சௌ**ந்தர்யலகரி என்னும் சமஸ்கிருத ஸ்தோத்திரம் ஆதிசங்கரர் அவர்களால் இயற்றப்பட்டது. அம்பிகையின் மகிமையை பரிபூரணமாக உணர்த்தக்கூடியது. தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளும், கடலங்குடி நடேச சாஸ்திரிகளும், அண்ணா அவர்களும் இதற்கு உரை எழுதியுள்ளார்கள்.

இதில் ஒவ்வோர் ஸ்லோகத்துக்கும் தனித்தனி இயந்திரங்களும் அதனை உபாசிக்கவேண்டிய முறையையும அதன் பலன்கள் என்பனபற்றி சொலலப்பட்டுள்ளன. இதன் கருத்தை மனதில் கொண்டு முத்தமிழ்க் கலைமாமணி வீரமணி ஐயர் அவர்கள் இதன் கருததை கீர்த்தனைகளாக இயற்றி வெளியிட்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

இவர் சங்கீதத்துறைக்குச் செய்துவருகின்ற மாபெரும் பணியதை இசைப்பிரியர்கள் போற்றவேண்டும். இன்னும் பல விடயங்களையும் கீர்த்தனைகளையும் (கற்பகவல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்) என்ற கீர்த்தனையை இயற்றி சங்கீத உலகில் பெரும் புகழ் பெற்ற இயல் இசை நாடகக் கலைமாமணி அவர்களின் தொண்டு மென்மேலும சங்கீதத்துறையில் வளர்ச்சிபெற வேண்டும் என அமபிகையின் அருளும் பெரியோர்களின் ஆசியும் இவருக்குக் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
நியாயசிரோமணி

3-1-97

உ

சிவமயம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

இரண்டாவது குருமஹாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

அவர்களின்

# ஆசிச்செய்தி

சிவநேயச் செல்வர்களே !

இணுவில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் இணுவை ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளுக்குச் சமர்ப்பணமாக சௌந்தர்யலஹரி எனும் நூலை இலகு தமிழில் கீர்த்தனை வடிவில் மொழிபெயர்த்துத் தந்தமை போற்றுதற்குரிய விடயமாகும். அம்பிகையினுடைய அருளை பூரணமாக வேண்டி ஆதிசங்கரரினால் உருவாக்கப்பட்ட சௌந்தர்யலஹரியை யாரொருவர் மனத்தெளிவோடு ஓதுவார்களோ அவர்களுக்கு வேண்டிய சகல சித்திகளையும் கொடுக்கவல்ல தோத்திர நூல் ஆகும். எங்கள் நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்துகொண்டிருக்கின்ற 'இயல் இசை வாரிதி', 'கவிமாமணி' வீரமணி ஐயர் அவர்கள் கீர்த்தனா வடிவில் அம்பிகையை இசை மூலமாக வழிபடுவதற்கு இன்நூலை பக்திபூர்வமாக அமைத்துள்ளார்.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் நீண்டகாலமாக இயலுக்கும், இசைக்கும் முத்தமிழுக்கும் தொண்டுசெய்து வருவது யாவரும் அறிந்ததே. அவருடைய பணி மேலும் வளர்ந்தோங்க ஆலவாயுறை அண்ணல் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்

1997-03-20

உ

"கிரியா கலாப முக்தாமணி"

**சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்**

(ஆதீனகுரு– ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் நயினாதீவு)

(பிரதம குரு–ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் சுதுமலை)

வழங்கிய

# ஆசியுரை

உலகளாவிய சாக்த வழிபாட்டில், அனைத்து இந்துக்களினாலும் அம்பிகையின் "சௌந்தர்யலஹரி" எனும் தேவீ தோத்திர நூல், உயர்ந்த சிறப்பான மந்திர சாஸ்திர நூலாகவும், நித்திய பாராயண நூலாகவும் நன்கு போற்றப்பட்டு வருகின்றது. "சௌந்தர்யலஹரி" என்பது "அழகு அலை" எனப் பொருள்படும். எல்லா உலகிற்கும் தாயாக விளங்கும் அம்பிகையை பேரழகியாக கேசாதி பாதாந்த வர்ணனையாக நூறு சுலோகங்களில் ஜகத்குருவான ஆதிசங்கர பரமாச்சார்யாள் வருணித்து இயற்றியருளியிருக்கின்றார். ஆசிரியர் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வரும் "சிதக்னி-குண்ட-ஸம்பூதா (அறிவாகிய அக்னிகுண்டத்திலிருந்து தோன்றிய பரப்ரம்ம ஸ்வரூபிணி) என்னும் ஸ்ரீ மாதாவின் அவதாரத்தை மனத்தில் நன்கு பதித்து அம்பிகையை கிரீடாதிபாதாந்தமாக வர்ணித்துக் கூறுவது மிகவும் பொருத்தமாக அமைகின்றது.

"சௌந்தர்யலஹரி" தேவீ தோத்திரங்களுள் தலைசிறந்ததாகவும், ஸ்தோத்திரங்கள் வரிசையில் முதன்மையானதாகவும் சிறப்பிக்கப்படுகின்றது. சம்ஸ்கிருத மரபிலுள்ள ஸ்தோத்திர லக்ஷணங்கள் அனைத்தையும் பெற்று, சாக்த ஆகமங்களின் சமயாசார தத்துவத்தின் சாராம்சமாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சங்கர பரமாச்சார்யாள் உபநிஷதங்கள் கூறுகின்ற "பிரம்ம வித்தையையும்", இதனையறிந்து அதை அநுபவத்திற்கு கொண்டு வருவதற்கு மிகவும் சிறப்பாக வழிகாட்டுகின்ற "ஸ்ரீ வித்தையும்" இணைந்து சக்தி வழிபாட்டில் மிகவும் உயர்ந்த நிலையாக விளங்குகின்ற மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற மூன்றையும் சௌந்தர்யலஹரியில் தனது ஆழ்ந்த பக்தி வழிபாட்டின் அநுபவத்தினூடாக வெளிக்கொண்டு வருகின்றார். இங்கு சக்தி வழிபாட்டில் மந்திரம், தந்திரம், யந்திரம் என்ற மூன்றையும் ஸ்ரீ சக்கரத்தின் மூன்று மூலைகளாகக் கருத இடமுண்டு.

"மந்திரம்" என்பதில் உள்ள உள்ளார்த்தத்தைக் காட்டுவது யந்திரம். "யந்திரம்" என்பதில் அதிமுக்கியமானது சக்திக்குரிய ஸ்ரீ சக்ர யந்திரமாகும். தந்திரம் என்பதில் மனத்தை நிறுத்துவதற்குப் பயன்படும் பாஹ்ய பூஜையும், மானஸீக பூஜையும், குண்டலினி யோகமும் மற்றைய அநுபவ ஸாதனங்களும் அடங்கும்.

சாக்த வழிபாட்டில் மிகச்சிறந்த அறிவாகி விளங்குவது "ஸ்ரீ வித்தையாகும்". ஸ்ரீ வித்தையில் கோடிக்கணக்கான மந்திரங்களுள் மிகவும் முக்கியமான மந்திரமாகக் கொள்ளப்படுவது "பஞ்சதசாக்ஷரீ" என்னும் மந்திரமாகும். முக்கியமான யந்திரம் ஸ்ரீ சக்ரம். முக்கியமான தந்திரம் ஐக்கியானுசந்தானம். இவை மூன்றையும் சங்கரர் சௌந்தர்யலஹரியிலே முறையே முப்பத்திரெண்டாம் சுலோகத்திலும், பதினோராம் சுலோகத்திலும், முப்பத்திநான்காம் சுலோகத்திலும் நன்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். சக்தி வழிபாட்டில் சிறப்பாக மந்திர சித்திற்கு யந்திரமும், தந்திரமும் பக்கத்துணைகள் என்பதை பரமாச்சார்யாள் உணர்த்துகின்றார். எனவே எல்லா ஜனங்களுக்கும் அழிவற்ற தாயாரான பராசக்தியினிடத்து மேலான பக்தி ஏற்பட வேண்டிய அவசியத்தை உத்தேசித்து தேவியின் அனைத்து மஹிமைகளையும் பிரகாசம் செய்யவேண்டி ஆதிசங்கரர் இந்த ஸ்தோத்திர நூலை சமய தத்துவச் சிறப்புடனும், இலக்கியச் சிறப்புடனும் இயற்றினார் எனலாம்.

எல்லா உலகிற்கும் அனைத்துமாக விளங்குகின்ற ஸ்ரீ மாதாவை, உள்ளன்புடன் வழிபட்டால், எல்லாவற்றிற்கும் காரணபூதாவாக விளங்கும் ஸர்வ தேவ தேவீ ஸ்வரூபிணியாகிய ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியே தன்னிடம் எல்லாத் தேவதைகளையும் கூட்டியருள்வாள். எல்லாக் கொள்கைகளும், கோட்பாடுகளும் அங்கே சமரசத்துவமடைகின்றன. அம்பிகையை வழிபடுவோர்க்கு நிர்க்குணமும், ஸகுணமும், கருமமும் பக்தியும், யோகமும், ஞானமும், அத்வைதமும், துவைதமும், இல்லறமும், துறவறமும், மார்க்கங்களும், காட்சிகளும் நன்கு சிந்திக்கப் பெறுகின்றன.

"அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்" என்ற வாக்கியத்திற்கேற்ப முற்கால தேவீபக்தர்களான மஹா கவி காளிதாசர், மூகசுவி, வித்யாரண்யர் ஆகியோரும், தற்கால பக்தர்களான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர், ஞானப்பிரகாசர் ஆகியோரும் சக்தி வழிபாட்டில் மேம்பட்டு விளங்கியவர்கள்.

வடமொழி மரபிலே நூறு பாடல்களைக் கொண்டமைந்த பிரபந்த வகையை ''சதகம்'' என்று அழைக்கப்படும். குறிப்பாக நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்கிய சதகம், சூரிய சதகம் விளங்குவனபோல, தமிழிலும் குமரேச சதகம், தண்டலையார் சதகம், ஈழமண்டல சதகம் முதலிய சதக நூல்கள் உள்ளன. அத்துடன் தமிழில் அபிராமி அந்தாதி போன்ற நூல்களும் உள்ளன.

இதே வரிசையிலே இன்று யாழ்ப்பாணம் — இணுவையூர், 'இயலிசை வாரிதி' 'கவிமாமணி' 'ஆசுகவி' பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள் வடமொழியிலுள்ள அம்பிகையின் சௌந்தர்யலஹரியை தனது ஒப்பற்ற கவிதா சாமர்த்தியத்தினால் தமிழிலே பாடல்களாக இயற்றி ''சௌந்தர்யலஹரிக் கீர்த்தனா சதகம்'' எனும் சிறப்பான நூலைப் படைத்துள்ளார். இந்நூலும் தமது சகதர்மிணி ஸ்ரீமதி ருக்மணி அம்மாவின் ஆத்மசாந்தி மலராக இணுவில் - வட்டுவினி தர்மஸாஸ்தா குருகுல காயத்ரிபீட ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பெறுவது மிகவும் பொருத்தமான சக்தி கைங்கரியமாகும். இச்செயல் ''ஞான யாகம்'' என்று போற்றப்படத்தக்க அம்சமாகும்.

''ஸப்தரிஷி'' என்னும் இயற்பெயர் கொண்டமைந்த வீரமணி ஐயர் அவர்களின் அனைத்து ஆக்கங்களிலும், இம் முயற்சி ஒப்பற்ற தனிநிகரான நூற்படைப்பாக அமைவது சிறப்பான அம்சமாகும். தாய்நாட்டையும் சேய்நாட்டையும் பொறுத்தவரையில் இவ்வாறான முயற்சிகள் புதுப்படைப்புக்களாகவும், முதற்தரமான படைப்புக்களாகவும் அமைவது குறிப்பிடத்தக்கன. ''ஸப்தரிஷி'' அவர்கள் அம்பிகைமீது வைத்த அளப்பரிய பக்தியையும், வழிபாட்டில் கொண்ட ஈடுபாட்டையும் அவரின் ஒவ்வொரு பாடல்களும் தொனிப்படுத்துகின்றன.

கோவிற்பாடல்களையும், திருவூஞ்சற் பாடல்களையும், திருமண வாழ்த்துப் பாக்களையும், அறிஞர்கள் பாராட்டுப் பாக்களையும் ஆசுகவியாக இயற்றும் வீரமணி ஐயர் அவர்கள் அம்பிகையின் சௌந்தர்யலஹரிப் பாடல்களையும் தமிழிலே இயற்றி ஓர் உயர்ந்த கவிதா சாமர்த்தியமான ''பிரதிபா'' என்னும் ஓர் கவிஞனுக்கு கட்டாயம் வேண்டிய அம்சத்தையும் பெற்றுள்ளார் என்பது நன்கு புலனாகின்றது.

அகில இந்திய, இலங்கை அரசுகளினதும் இன்னும் பல அறிஞர்களினதும் பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்று, கவிதா சாமர்த்திய இசை உலகிற்குத் தொண்டாற்றி வரும்

''ஸப்தரிஷி'' என்னும் வீரமணி ஐயா அவர்களின் பணிகள் மென் மேலும் வளர்ந்து உன்னதமான உயர்வுபெற ஜகன்மாதாவாகிய ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியை நினைத்து, நயினை நாக பூஷணியம்மையினதும், சுதுமலை புவனேஸ்வரி அம்மையினதும் பாதகமலங்களில் ஸ்பர்சித்து, பிரார்த்தித்து ஆசிகள் பல கூறி அமைகின்றேன்.

''சுபமஸ்து''

●  ●  ●

உ

''பிரதிஷ்டா கலாநிதி''

**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள்**

(ஆதீன குரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் – நயினை)

வழங்கிய

# பாராட்டு உரை

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயா அவர்கள் எமது உறவினரும், பலரது பாராட்டுக்களையும், மதிப்பையும் பெற்றுக்கொண்டு வாழ்பவர். இளமைக்காலம் தொடக்கம் அயராது கல்வி கற்றுத் தேறியவர். இவர்களின் தந்தை பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் (சின்னத்துரை ஐயா) ஒரு தலைசிறந்த வயலின் வித்வான். இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இணுவிலோ இசைக் கலைஞர்களும், நாதஸ்வர வித்வான்களும், தவில் மேதைகளும், கல்விமான்களும் நிறைந்த ஊர். அதிகாலையிலேயே இசையும் வழிபாடுகளும் தொடங்கிவிடும். வேதவியாசர் கர்ப்பத்திலே கேட்டு அறிந்ததுபோல நமது வீரமணி அவர்களும் அந்தப் பேற் றைப் பெற்றவர். சப்தரிஷி என்ற பேரும் இவருக்கு உண்டு. இந்தியா சென்று நடனக் கலையும் சங்கீதமும் பயின்றவர். அந்தக் காலத் தில்தான் ''கற்பகவல்லி'' என்ற பாட்டைப் பாடினார். இப் பாடல் உலகப் பிரசித்தி ஆயிற்று. இந்தியாவில் மயிலாப்பூர் தேவஸ்தானத்தில் கருங்கல்லில் பொறிக்கப்பட்டு, ''இயற்றிய வர் யாழ்ப்பாணம் வீரமணி ஐயர்'' என்றும் பொறிக்கப்பட் டுள்ளது. அந்தக்காலம் தொடக்கம் அதற்கு முன்னும் லலிதா திரிபுரசுந்தரியின் அருள், காளிதாசன் போன்று கவிபாடும் அருள் கிடைத்தது.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பாஷையில் திறமை மிக்கவர். உள்ளத்தில் ஊற்றுப்போல் சொல்லும் பொருளும் நிறைந்த பாக்களைப் பாடும் கவித்திறமை உண்டு. எத்தனையோ

கோயில்களில் ஊஞ்சற்பாக்களை யாத்த பெருமை உண்டு. பல கோயில்களுக்கு திருவூஞ்சல் பிரபந்தங்கள் பாடி நூலாக அரங்கேற்றியுள்ளார்.

கர்நாடக சங்கீத வளர்ச்சிக்கும் பரதநாட்டிய வளர்ச்சிக்கும் வீரமணி ஐயர் அவர்கள் அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். இவர் இயற்றிய பல கீர்த்தனைகள் தென்னிந்திய பிரபல சங்கீத வித்துவான்களான மஹாராஜபுரம் சந்தானம், சீர்காழி கோவிந்தராஜன், ரி.எம். சௌந்தரராஜன் போன்றவர்களால் பாடப்பட்டு இசைத்தட்டு உருவமாக வெளிவந்து பிரபல்யம் பெற்றுள்ளன.

ஆசிரிய கலாசாலைகளில் கோப்பாய்—பலாலியில் பேராசிரியராக இருந்தார். அங்கு இவரது நாட்டிய நாடக அரங்கேற்றம் பல நடந்து புகழைப் பெற்றுக்கொடுத்தது. ஆத்ம திருப்தியை பலருக்கு அளித்தது. பரராஜசேகரரை காலை வணங்கும் பேறு பெற்றதோடு அங்கு கோபாலகிருஷ்ணருக்கு ஆலயமமைத்து பிரதிஷ்டைசெய்து பகவானை வேண்டுதல் செய்தார். ஐயா அவர்கள் இந்தியாவுக்குச் சென்று காஞ்சிமா முனிவரையும் தரிசித்தார்.

இவரின் இல்லறத்திற்கு இனியவளாக, உறுதுணையாக, கவிஞருக்கு ஏற்ற நங்கையாக ஸ்ரீ ருக்மணி அம்மாள் இருந்த காலத்தை யாவரும் மறக்க முடியாது. பார்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக, வசிஷ்டரும் அருந்ததியும், வள்ளுவனும் வாசுகியும் போல வாழ்ந்தது உலகப் பிரசித்தமே. ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் சர்வசித்தி தரும் சௌந்தர்யலஹரியை ஆசார்யசுவாமிகள் பாதங்களில் சமர்ப்பித்து ஆசிபெற்று, நிறைவான திருப்தியுடன் இதனை தமிழ்க் கீர்த்தனையாக மொழிபெயர்த்து வெளியிடவேண்டும் என தனது அன்புக்குரிய கலைக்களஞ்சியமாம் கணவரிடம் அன்பாக வேண்டுகோள் விடுத்தார்.

> ''செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி
> எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து''

இவ்வேண்டுகோளை நிறைவேற்றப் பாடல்களை இயற்றத் தொடங்கினார். காலம் போதவில்லை. அன்னை பாதம் சேர்ந்துவிட்டாள் ருக்மணி அம்மாள். அவரின் நினைவு மலராக வருகிறது ஸௌந்தர்யலஹரியில் நூறு சுலோகங்கள். அதன் கருத்து அமைய இனிய சொற்கள் தொடர நூறு இராகங்களில் கீர்த்தனையாகப் பாடிவிட்டார். அன்னை அருள் அவர் நாவில் இருந்ததால் இனிதே முடிந்தது. கீர்த்தனைகள் அமைக்கும் திறன் ஸ்ரீ முத்துத்தாண்டவர், பாபநாசம்சிவன் போன்று அமைந்ததோடு நில்லாது ஸ்லோகத்தின் பிரார்த்தனைக்கேற்ற ராக

தாளங்களில் அமைத்தது வியப்பன்றோ! ஆழ்ந்த சாஸ்திரிய சங்கீதமும் லயஞானமும் பெற்றதே சிறப்பாகும். இந்நூல் ஆத்ம திருப்திக்காகச் செய்யப்பட்டதே. இணுவில் கண்ணகா பரமேஸ் வரி அம்பாளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பெறுகிறது.

''கலாபூஷணம்'' விருதுபெற்ற பிரம்மஸ்ரீ மா. த. ந. வீர மணி ஐயா அவர்கள் கலையைப் பூஷணமாகப் பெற்றவர். அன் னைக்கு ''சதுஷ்ஷஷ்டி உபசாராத்தியா'' என்றவாறு அன்னைக் குச் சமர்ப்பித்துவிட்டார். அன்னையோ ''அவ்லியாஜ கருணா மூர்த்தி'' கேட்காமல் அவள் முன்னின்று வணங்கினால் யாவும் கொடுக்கும் கருணாமூர்த்தி, பாமாலை சூடியவர்க்கு எதைஎதை யெல்லாம் அளிக்கவேண்டுமோ அதைக் கொடுப்பாள். நாம் வேண்டுவது இன்னும் பல்லாண்டு வாழ்ந்து உலகம் அறிந்து போற்றும் கவிஞனாக, சொல்லேர் உழவராக 'சிவானந்தலஹரி' யையும் தமிழ்க் கீர்த்தனையாக ஆக்கவேண்டும் என அன்னை யைப் பிரார்த்திப்போம். அன்னாரின் பிரிய பத்தினி ஸ்ரீ ருக் மணி அம்மாளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையாகவே வெளிவருகிறது. அன்னையின் பாதாரவிந்தத்தில் சமர்ப்பித்த சௌந்தர்யலஹரிக் கீர்த்தனை கள், அன்னை அடிக்கமலத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ருக்மணி அம் மாள் அவர்களும் பாமாலையாகச் சூடிக்கொள்வார். இதுவே ஆத்ம சமர்ப்பணம். வாழ்க கலாபூஷணம் வீரமணி ஐயா! வளர்க அவர்களது பாமாலைகள்! பெறுக வையகம்! அனை வரும் அன்னை திருவடிகளைப் பணிந்து ஏத்துவோம்.

''தான்ஆற்றித் தந்தபொருள் எல்லாம் — தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.''

இங்ஙனம்

சிவஸ்ரீ ஸ்வாமிநாதபரமேஸ்வரக் குருக்கள்

உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர்
**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரின் ''ஸௌந்தர்ய லஹரிக் கீர்த்தனா ஸதகம்' என்ற பெயர்கொண்ட இப்படைப்பு, ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதரின் ஸௌந்தர்யலஹரியை மூலமாகக் கொண்டது. இணுவில் வட்டுவினி தர்மஸாஸ்தா குருகுல காயத்ரிபீடம் என்னும் இடத்தில் கோயில் கொண்டு அருள்மழை பொழியும் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பிகையின் தெய்வீகப் பெருமைகளை ஸௌந்தர்யலஹரி பாடல் மரபின் அடிப்படையிற் போற்றுவதே இப்படைப்பின் சிறப்பம்சமாகும், பரப்பிரம்மஸ்வரூபிணியாகப் போற்றப்படும் அம்பிகையின் அருளாற்றல்களை ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளுக்குரியவையாகக் கொண்டு கீர்த்தனா சதகமாக கவிமாமணி அவர்கள் இதனை உருவாக்கியுள்ளார். சமய மரபும் இசை மரபும் சங்கமமாகும் ஓர் அற்புதப் படைப்பாக இது அமைகின்றது.

இப்படைப்புக்கு மூலமாக அமையும் ஸௌந்தர்யலஹரியின் சிறப்புகளையும் இங்கு குறிப்பிடுவது இன்றியமையாததாகும். இது சிறந்ததொரு மந்திர சாஸ்திரம். ஸ்ரீமத் ஆதிசங்கரரால் இயற்றப்பட்டதாகப் போற்றப்படும் இந்நூல் நூறு சுலோகங்களையுடையது. இந்நூல் ஸௌந்தர்யலஹரி என அழைக்கப் படினும் இரு பகுதிகளாகப் பிரித்துக் கூறப்படுகின்றது. 1 முதல் 41 வரையுள்ள சுலோகங்களைக் கொண்ட பகுதி 'ஆனந்தலஹரி' என்றும் 42 முதல் 100 வரையுள்ள சுலோகங்களைக் கொண்ட பகுதி ''ஸௌந்தர்யலஹரி'' என்றும், மரபாக வழங்கப்பட்டு வருகின்றது. 'லஹரி' என்றால் 'அலை' எனப் பொருள்படும். எனவே இவ்விரு பகுதிகளையும் முறையே 'ஆனந்த அலை' 'அழகின் அலை' என்றும் கூறலாம். இரண்டாம் பகுதியில் தேவியினது அழகிய தோற்றப்பொலிவு கேசம் முதல் பாதம் வரை வர்ணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. தேவியின் ஸௌந்தர்யத்தைக் கூறுவதனால் ஸௌந்தர்யலஹரி எனப்படலாயிற்று.

சங்கரருக்கு கௌடபாதர் வழியே உபதேசம் செய்யப்பட்டது ஸௌந்தர்யலஹரி என்ற கருத்தும் உள்ளது. சங்கரருக்குக் கிடைத்தது ஆனந்தலஹரி எனப் பெயர்பெற்ற 41 பாடல்கள் கொண்ட பகுதி என்றும், பிற்பகுதியில் உள்ள 59 பாடல்களையும் சங்கரர் தாமே எழுதி நிறைவுசெய்தார் என்ற கருத்தும் உள்ளது. எவ்வாறாயினும் ஸௌந்தர்யலஹரி என்ற இந்நூலின் பெரும்பகுதி சங்கரராலேயே ஆக்கப்பட்டது என்பதிலும் இவ்வுலகுக்கு அவராலேயே முதன்முதலாக அளிக்கப்பட்டது என்பதிலும் ஐயமில்லை.

அம்பிகையின் திருவுருவச் சிறப்பு, அருள்நலங்கள், அம்பிகையைப் போற்றி வழிபடுவதற்குரிய மந்திரங்கள், சக்கரங்கள் ஆகியவற்றை விளக்குவது ஸௌந்தர்யலஹரியின் சிறப்பம்சங்களாகும். இதன் முக்கியத்துவம் கருதி இந்திய நாட்டின் பல பகுதியில் பல்வேறு காலங்களில் வாழ்ந்த சமயப் பெரியார்கள் பலர் இதற்கு சிறந்த உரை எழுதியுள்ளனர். அவற்றுள் ஏறக்குறைய 35 உரை நூல்கள் குறிப்பிடத்தக்கன. இலட்சுமீதரர், பாற்கரராயர், கைவல்யாச்சிரமர், காமேசுவரர், அச்சுதாநந்தர் முதலிய புகழ் பூத்த அறிஞர்கள் இந்நூலுக்கு உரை எழுதி பெருமைப்படுத்தியுள்ளனர். இவற்றுள் இலட்சுமீதரரது உரை விரிவானதென்றும் அதிக அளவு பயன்படுவதாகவும் குறிப்பிடுவர். இலட்சுமீதர பாஷ்யத்தை அடியொற்றி 'அணணா' அவர்கள் ஸௌந்தர்யலஹரிக்குத் தமிழில் சிறந்த உரை நூலொன்றினை வகுத்துள்ளார். இத்தோத்திர நூலுக்கு கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் சிறந்தெதாரு கருத்துரையைத் தமிழில் வழங்கியுள்ளார். சாஸ்திர ரத்னாகரய தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஸௌந்தர்யலஹரிக்குச் சிறந்ததொரு விளக்கவுரை (1944) எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்விளக்கவுரையின் சிறப்பினால் 1989ஆம் ஆண்டில பத்தாவது பதிப்பும் வெளிவந்துள்ளது.

ஆதிசங்கரரது இவ்வரிய படைப்பைத் தமிழ்மொழியில் சிறந்த பாடல்களாக வீரை கவிராஜ பண்டிதர் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் மொழிபெயர்த்தியற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆழ்வார் குறிச்சியைச் சேர்ந்த கிருஷ்ணய்யர் அவர்களது துணைவியார் விசாலாட்சி அம்மாள் ''ஸௌந்தர்யலஹரி கீர்த்தனைகள் பாமாலை'' என்னும் நூலை (1975) தமிழில் மொழிபெயர்த்தியற்றியுள்ளார். பாராயணமாகப் பயன்படுத்துவதற்கேற்ப நூறு சுலோகங்களையும் பல ராகங்களில் அவற்றுக்கேற்ற தாளங்களுடன் பாடியுள்ளார். பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய ஒழுங்கில் இக்கீர்த்தனைகள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்து ஆவரங்காலைச் சேர்ந்த பண்டிதர் ச. சுப்பிரமணியம், சொல்

நயம், பொருள்நயம் குன்றாது தமிழில் சுவைமிகுந்த பாடல்களாக அழகுற இந்நூலை மொழிபெயர்த்தியற்றியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (1986). ''அம்பிகையின் அழகு அலை—ஸௌந்தர்யலஹரி'' என்ற தலைப்பில் டாக்டர் நஜன் ஒரு விளக்க நூலொன்றினை எழுதி வெளியிட்டுள்ளார் (1992).

ஸ்தோத்திரம், கீர்த்தனை என்ற பெயர்கள் இறைவன் அல்லது இறைவியைப் போற்றும் பாடல்களைக் குறிப்பன. ஸ்தோத்திரத்திற்குரிய லட்சணத்தில் நமஸ்கரித்தல், ஆசிகூறுதல், சித்தாந்தத்தை எடுத்துரைத்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் ஆகிய ஆறு அம்சங்கள் கூறப்படுகின்றன.

நமஸ்காரஸ் — ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: |
விபூதி: பிரார்த்தனா சேதி ஷட்விதம் ஸ்தோத்ர லக்ஷணம் ||

இத்தகைய ஸ்தோத்திரப் பண்புகளைக் கொண்ட நூல் ஸௌந்தர்யலஹரி. அதனை மூலமாகக்கொண்ட கீர்த்தனா சதகமும் அதே பண்புகளைக் கொண்டவை என்பது சொல்லாமலே விளங்கும். சதகம் என்றால் நூறு பாடல்களைக்கொண்ட இலக்கிய ஆக்கமாகும். தோத்திரப் பாடல்கள் இந்த இலக்கிய வடிவிலேயே அமைவது வழக்கம். எனவே ஸௌந்தர்யலஹரியின் நூறு பாடல்களும் இக் கீர்த்தனா சதகத்தில் இடம்பெற்றுள்ளன.

கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் இசைத்துறையிலும் நடனத்துறையிலும் சிறந்த அனுபவம் உடையவர். பக்திரசம் ததும்பும் பாடல்களை இயற்றுவதிலும் வல்லவர். தென்னகத்தில் மயிலையில் கபாலீஸ்வரரோடு இணைந்து கற்பக வல்லி அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளி, அருள்மழை பொழிந்து அடியார்களின் துயர்தீர்க்கும் தெய்விக அற்புதத்தைப் பாடிய பெருமைக்குரியவர் கவிமாமணி, பக்திச்சுவை நனிசொட்டும் இசையோடு பின்னிப்பிணைந்த தமது அருமையான பாடலினால் கற்பகவல்லி அம்பிகையை மானஸீகமாகவேனும் நாமெல்லோரும் வழிபடக்கூடிய வகையில் எம்மை ஆற்றுப்படுத்திய பெருமை பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களையே சாரும். ''கற்பகவல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதியருள்வாய் அம்மா'' என்ற அம்பிகையின் அருள் வேண்டும் அப்பாடல், தென்னகத்தின் புகழ்பெற்ற பாடகர் திரு. டி எம். சௌந்தரராஜனின் இனிமையான குரல்வளத்தால் மெருகூட்டப்பட்ட பெருமைக்குரியது. அப்பாடலைக் கேட்கும்பொழுதெல்லாம்

கேட்போர் உள்ளங்களில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடும். அதுமாத்திரமன்றி கோண்டாவிலில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள்மீது கவிமாமணியால் பாடப்பெற்ற திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சற் பாடல்களும் திரு. டி. எம். சௌந்தரராஜனால் பாடப்பெற்று, அவற்றின் ஒலிப்பதிவு நாடாவினை அண்மையில் நான் வெளியிட்டு வைத்த நிகழ்வினையும் நினைவுகூர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கவிநயத்துடனும் தெய்வீக உணர்வுடனும் பக்தி ரஸத்துடனும் அம்பிகைமீது கவிமாமணியால் பாடப்பெற்ற இப்பாடல்கள் இசை உலகில் சிறந்த வரவேற்பைப் பெற்றன. எமது நாட்டில் மட்டுமன்றி, உலகெங்கணும் இந்துக்கள் வாழும் இல்லங்கள் தோறும் இப்பாடல்கள் இனிமையாக ஒலித்தவண்ணம் அவர்கள உள்ளங்களில் பக்தி உணர்வை வளம்படுத்தி வருகின்றன.

கவிமாமணி, காரைநகர் திக்கரை முருகமூர்த்திமீது பக்தியுணர்வுடன் அவனது தெய்விகப் பெருமைகளைப் போற்றும் வண்ணம் பாடிய "திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள்" என்ற பாடற்றொகுப்பை 1990ஆம் ஆண்டு நடந்த குடமுழுக்கு விழாவினையொட்டி வெளியிடப்பட்ட மலரில் அம்மலராசிரியர் என்ற நிலையில் யான் பதிப்பித்து வெளியிட்டு வைத்ததையும் இங்கு நினைவுகூர்தல் பொருத்தமாகும். பலவேறு ராகங்களில் அமைந்த அப்பாடல்கள் முருகனடியார்கள் பாடிப் பரவசமடையத்தக்கதான சிறந்த இசைக் கருவூலம் எனில் மிகையில்லை. ஒவ்வொரு பாடல்களுக்கும் கவிமாமணி வழங்கியுள்ள தலைப்புக்களே உள்ளத்தில் உவகையூட்டுவன. சமயம். கவிதை, இசை, ஆகிய துறைகளில் அவருக்கு இருக்கும் புலமைக்கு இவை உரைகல்லாக அமைகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள பலவேறு ஆலயங்களில் கோயில்கொண்டு அருளபாலிக்கும் தெய்வங்களுக்கு திருவூஞ்சல் பாடிய பெருமைக்கும் இவர் உரியவர். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கோயில்கொண்டுள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானுக்குப் பாடியுள்ள திருவூஞ்சலைக் குறிப்பிடலாம். இவ்வாறு இசைத்துறையிலும் நடனத்துறையிலும் தனக்கென முத்திரை பதித்த கவிமாமணி, சிறந்த சாகித்ய கர்த்தா என்பதற்கு அவருக்குக் கிடைத்த பல்வேறு பட்டங்கள் சான்றுபகர்வன. இயலிசைவாரிதி என்ற சிறப்புப் பட்டத்தோடு ஸாகித்ய சாகரம், ஸாகித்யமாமணி, ஸாகித்ய சிரோமணி, முத்தமிழ் வாரிதி ஆகிய பட்டங்கள் அவர் இசைப்பாடல்கள் புனைவதில் பெற்றிருக்கும் புலமைக்குச் சான்றாக உள்ளன.

கவிமாமணியின் கீர்த்தனா சதகத்தில் நாம் காணும் சிறப்பம்சங்கள் பலவுள. ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரியைப் போற்றித் துதிக்கும் வகையில் ஆசிரியரின் கவிதைகளும் இழையோடி நிற்கின்றன. சாகித்ய அர்த்த பாவத்திற்கேற்ப ராகங்கள் தேர்ந்து அமைக்கப்பட்டுள்ளன. சூழ்நிலைக்கேற்ற ராகங்கள் ஆசிரியரின் கைவண்ணத்தைக் காட்டுவன. ஒவ்வொரு சம்ஸ்கிருத சுலோகத்தின் தமிழ் வடிவிலான கவிதையாக்கம் அவரது மொழியாற்றலைக் காட்டுகின்றன. எதுகை, மோனை ஆகியவற்றுடன் கூடிய பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய ஒழுங்கில் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுலோகத்திலும் அம்பிகையின் தெய்விகப் பெருமை, அப்பாடலினால் ஏற்படும் பயன்கள், அதற்குரிய ராகம், தாளம் ஆகிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. இவை யாவற்றுக்கும் மேலாக மூலப்பாடலின் அர்த்த பாவத்தோடு ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரியின் பெருமைகளும் சிறப்பாக இணைத்துப் பாடப்பட்டுள்ளன. ஸௌந்தர்யலஹரியின் பெருமைக்கேற்ற வகையில் எமது பிரதேசத்தில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரிமீது கீர்த்தனா சதகம் பாடிய வகையால் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் கவிதா விலாசம் மேன்மையடைகின்றது. இவை ராகத்தோடு பாடிப் பரவசமடையக்கூடிய வகையில் சிறந்த பாராயண நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை. தர்மஸாஸ்தா குருகுலத்தில் அந்தணரின் வேத பாராயணத்திற்கு என்றுமே குறைவில்லை. அக்குருகுலத்தின் அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்களின் தெய்விக உபாசனையில் சிறப்படைந்த காயத்ரிபீடததில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரி, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களது கைவண்ணத்தில் போற்றப்படுகின்றமை அவருக்குக் கிடைத்த ஒரு திருவருட்பேறே ஆகும். காயத்ரிபீடவாஸினி, தர்மசாஸ்தா குருகுலதேவி, வட்டுவினி க்ஷேத்ரவாஸினி, நற்பீட காயத்ரி நாயகி, இணுவைத் தீனதயாபரி ஆகிய திருநாமங்களின் வழியாக இணுவையம்பதியையும் தர்மஸாஸ்தா குருகுலத்தையும் வட்டுவினி தலத்தையும் காயத்ரிபீடத்தையும் ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரியையும் பாடல் ஒவ்வொன்றிலும் கவிமாமணி போற்றித் துதிக்கத் தவறவில்லை. அவர் உள்ளமுருகி இப் பாடல்களைப் பாடியுள்ளமைக்கு இவை தக்க சான்றுகள். இவர் ஒரு சிறந்த சாகித்யகர்த்தா. எனவே பாடல்களில் உயர்ந்த சமயக் கருத்துக்களும் பொதிந்துள்ளன. அம்பிகையின் அருளைப்பெற இவை அடியார்களை ஆற்றுப்படுத்தவல்லன.

கவிமாமணியின் இப்படைப்புக்கு ஒரு முக்கிய நோக்கம் பின்னணியில் உள்ளது. தமது இல்லாளுடன் இனிதே வாழும்

காலத்தில் முன்னர் கூறப்பட்ட படைப்புகள் இடம்பெற, ஸௌந்தர்யலஹரி கிர்த்தனா சதகம் பாடும் அவரது முயற்சி அவரது அன்புக்கினிய துணைவியார் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் அமரத்துவம் அடைந்தபின்னரே இடம்பெற்றுள்ளது. பிரிவுத்துயரினால் உள்ளம் நெகிழும் கவிமாமணிக்கு இப்படைப்பு நல்ல மனோபலத்தையும் ஆத்மிக உணர்வையும் மனச்சாந்தியையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஸ்ரீமதி ருக்மணி அம்மாளின் ஆத்ம சாந்திக்காக கவிமாமணி இதனைப் பாடி, அம்பிகையின் திருவடிகளில் அர்ப்பணித்துள்ளார். தமது அன்புக்குரியவருக்காக இவர் மேற்கொண்ட இப்புனித கைங்கரியம் அமரத்துவம் அடைந்த அம்மையாருக்கு நிரந்தர பேரின்பத்தை அமபிகை நிச்சயம் அருள்வாள் என்ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்துகின்றது. அவரது துணைவியார் வாழும்போதே ஸௌந்தர்யலஹரியைக் கிர்த்தனையாகப் பாடும்படி விடுத்த வேண்டுகோளைத் தவறாது நிறைவேற்றும் நோக்கில் கவிமாமணி இதனைப் படைத்துள்ளார்.

அவரது இப்புனித முயற்சியினால் சமயத்துறையும் இசைத்துறையும் வளம்பெற்றுள்ளன. இத்துறை சார்ந்தோருக்கு இந்நூல் அருமையான வரப்பிரசாதம். இந்துக்கள் வாழும் இல்லங்களில் புனிதமாகப் பாராயணம் செய்யத்தக்க இந்நூலை அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. அன்னையை வழிபடுவதற்கு ஸௌந்தர்யலஹரி கீர்த்தனா சதகம் நன்கு துணைபுரிய வல்லது.

இம்முயற்சி கைகூட உதவிய சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்களுக்கும் இத்தகைய புனிதப்பணியில் மேன்மேலும் சிறப்புறும் வண்ணம், பிரம்மஸ்ரீ வீரமணி ஐயருக்கும், காயத்ரிபீட நிவாஸினி ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரியின் திருவருள் பொலிவதாகுக. ஸ்ரீமதி ருக்மணி அம்மாளின் ஆத்மசாந்திக்கு அம்பிகையின் திருவருள் துணைநிற்பதாகுக.

ப. கோபாலகிருஷ்ணன்
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
15-01-1997.

கலாநிதி சபா. ஜெயராசா
(தலைவர், இராமநாதன் நுண்கலை, நாட்டியத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின்

# முன்னுரை

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா அவர்கள் புனைந்த இந்த இசைப் பாடல்கள் இந்துசமய அழகியலின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டும் ஆக்கக்கோலமாக அமைகின்றன. பொதுவாக இரண்டு அடிப்படைகளில் இருந்து இந்துசமய அழகியல் முகிழ்த்தெழுகின்றது. அவையாவன: ஒன்று அழகியலின் உலகியற் பரிமாணம்—மற்றையது அழகியலின் வழியாக முன்மொழியப்படும் விழுமியங்களும் தெய்வீகக் கோலங்களும் — மிகவுயர்ந்த நிலையில் அழகை வெளிப்படுத்தும் பண்பாகிய "அதீத அழகியல்" (Meta-Aesthetics) ஐயாவின் ஆக்கங்களின் ஆதார சுருதியாகவுள்ளது, அதாவது தெய்வீகப் பொருண்மையின் உட்பொதிவு அவரது ஆக்கங்களை வளம்படுத்துகின்றது.

யாதாயினும் ஒரு தனிமத்தினால் மட்டும் அழகு தோன்றுவதில்லை. தனிமங்கள் பொருத்தமான நிலையில் பொருத்தமான பொருளில் ஒன்றிணைக்கப்படும் பொழுதுதான் அழகின் மிளிரல் தோன்றும். இந்த அணுகுமுறையினை ஒட்டியே "சௌந்தர்யம்" என்ற எண்ணக்கரு இந்து அழகியலிலே உருவாக்கப்பட்டது. இந்த ஒன்றிணைப்பு அல்லது இசைவாக்கம் எமது பாரம்பரிய அழகியலில் "சம்யோக" எனப்பட்டது. அதாவது தனிமங்களின் இசைவுபட்ட ஒன்றிணைப்பின் முக்கியத்துவத்தை "சம்யோக" என்பது குறித்துநின்றது.

அழகிய அநுபவத்தை அழகற்ற அனுபவத்திலிருந்து வேறுபடுத்திக்காணும் புலக்காட்சி (Perception) இந்துசமய அழகியலில் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. தனியாளிடத்துக் காணப்படும் புலக்காட்சி வேறுபாடுகளை உள்ளடக்கிய செயற்பாடு "காமம்" என அழைக்கப்படும். காமம் என்பதை கர்மத்துக்கு இட்டுச்செல்லாது தடுத்தல் இந்து அழகியலின் உள்ளடக்கமாகின்றது. காமத்தைத் தெய்வீகப்படுத்தும் செயற்பாடுகளை

இந்து மரபில் அநுபூதிச் செல்வர்கள் மேற்கொண்டனர். அதாவது அழகியல் அநுபவத்தை சுயநலத்திலிருந்து சுயநல மறுப்புக்கு மாற்றும் உபாயம் இந்துசமய அழகியலிலே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான அழகியற் பாரம்பரியம் அழகின் தெய்வீக அலையாக விளங்கும் சௌந்தர்ய லகரியிலே தெளிவாக முன்மொழியப்பட்டுள்ளது. சௌந்தர்ய லகரி என்பதன் பொருள் அழகின் தெய்வீக அலையாகும்.

அழகு பற்றிய தேடலை முன்னெடுத்த மெய்யியலாளர்கள் இரு நிலைகளிலே துருவப்பட்டு நின்றனர். ஒரு சாரார் முற்றிலும் புறவயமாக (Objective) அழகை அணுகினர். இன்னொரு சாரார் புறவயத்தை நிராகரித்து அகவயமாக (Subjective) அழகை அணுகினர். ஆனால் இந்துப் பாரம்பரியத்தில் அழகு என்பது புறவயத்தையும், அகவயத்தையும் இணைத்து முழுமையாகக் காட்டப்பட்டுள்ளது.

அழகு என்பது பார்க்கும்தோறும் மனதுக்குப் புதிதுபுதிதாய் மலர்ச்சி தரவேண்டும் என்பது அதன் அகவயப் பண்பாகிறது. அழகை வெளிப்படுத்தும் அலங்கார இலக்கணங்கள் அழகியலின் புறவயப் பண்புகளாகின்றன. இந்த இரண்டு உபாயங்களின் வழியாகவும் மீநிலை அகில (Supra Mundane) மகிழ்ச்சியை வழங்கும் செயற்பாடாக இந்நூலாக்கம் விளங்குகின்றது.

வாழ்க்கையிற் காண்பவற்றை நேரடியாகப் பிரதிபண்ணல் அழகியற் கூறுகளாகக் கருதப்படுவதில்லை. வாழ்க்கைக் காட்சிகளை உள அமைப்பின் வழியாகப் புத்தாக்கச் சிறப்பாக்கி ''நிலைமாற்றம்'' செய்யும்பொழுதுதான் தெய்விக அழகு தூண்டப்படும். இதன் காரணமாக இந்து அழகியலில் இம்மையானது பிரித்து இனங்காணப்பட்டது. இம்மையில் துறப்பு ''அல்லௌகிகம்'' என்ற எண்ணக்கருவினால் விளக்கப்பெற்றது.

'' உலகுபற்றிய இருப்பு ''சத்'' என்றும், உணர்வானது ''சித்'' என்றும், உன்னதமான இருப்பு சிவமும் சக்தியுமாகி நிற்கும் ''ஆனந்தம்'' என்றும் பிரபஞ்சத்தின் இயக்கத் தொடர்புகள் விளக்கப்படலாயின. அனைத்து அழகும் சக்தியாகிய அன்னையை அடிப்படையாகக் கொண்டது என்பது சௌந்தர்ய லகரியின் உட்பொருள். அழகானது உருவ நிலையிலும் அருவ நிலையிலும் வெளிப்படும் சௌந்தர்யலஹரியின் உள்ளடக்கத்தை இசைக் கட்டுமானத்திலுள்ளும், தாளக் கட்டுக்கோப்பினுள்ளும் கொண்டுவந்து இணுவிற் பழம்பதியிலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வட்டுவினி, தர்மஸாஸ்தா குருகுலம் காயத்திரி

பீடம் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள்மீது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை நடனவியல் இடைவரவு விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள் பாடியுள்ளார்கள்.

ஐயா அவர்களின் கீர்த்தனா சதகம் மரபுவழிவந்த இலட்சிய வியல் (Idealism) தழுவிய இந்து அழகியலை இசைக் கோலங் களாகக் காட்டுகின்றது. இயற்கையின் அனைத்துக் கூறுகளை யும் தெய்வீகப்படுத்தல் மரபுவழி இந்து இலட்சியவியலின் உள் ளடக்கமாகும். அநுபூதிச் செல்வர்களின் ஆக்கங்கள் மேலும் ஒரு படி முன்னேற்றமடைந்து "அநுபூதி இலட்சியவியல்" (Mystical Idealism) என்ற மேலுயர்ச்சியைப் பெற்றன. ஐயா அவர்களின் இந்த ஆக்கம் அநுபூதி உணர்வுகளையும், உயர்ந்த இலட்சியங்களையும், மேம்பட்ட விழுமியங்களையும் உள்ளடக்கிய அகல்விரி (Comprehensive) படைப்பாக அமைந்துள்ளது.

இந்நூலைப் படிக்கும்பொழுதும், கீர்த்தனைகளைக் கேட்கும் பொழுதும் சுய உள்ளொளித் தூண்டலை (Self Illumination) ஒவ்வொருவராலும் அனுபவிக்கக்கூடியதாகவுள்ளது. இசையும் கலையும் மிளிரும் இணுவைக் கிராமத்தின் தெய்விக அழகை யும், அதன் அயற்கிராமங்களின் ஆன்மிக வளப் பொலிவையும் முன்னெடுப்பதற்கு இந்த ஆக்கம் என்றும் துணைசெய்யும்.

கலாநிதி சபா. ஜெயராசா
தலைவர்,
இராமநாதன் நுண்கலை நாட்டியத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத்துறைத் தலைவர்

பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்

வழங்கியுள்ள

# பாராட்டுரை

இறைவனை வழிபடுவதற்கான சிறந்த சாதனங்களில் இசையும் ஒன்றாகும். தமிழிசைக்குரிய உருப்படிகளிலே கீர்த்தனையுமொன்று. கீர்த்தனையெனில் புகழ்மாலையாகும். இது சாதாரண புகழ்மாலையாக அல்லாது குறிப்பிட்ட ராக தாளக் கட்டமைப்புக்குள் அமைந்திருக்கும் புகழ்மாலையாகும். பெரும்பாலான கீர்த்தனைகள் இறைவனைப் பற்றியவையே. மலர் மாலையெனில், அது எவ்வளவு புதிதாகவும், அழகாகவும் இருந்தாலும் குறிப்பிட்ட ஒருசில மணித்தியாலங்களில் வாடிவிடும்; வெளியே எடுத்து வீசப்படும். ஆனால் ஒரு மொழியிலுள்ள இசைப் புகழ்மாலை அப்பேர்ப்பட்டதன்று; என்றும் வாடாது அன்றலர்ந்த மலர்மாலைபோல மிளிர்ந்து கொண்டேயிருக்கும். என்றுமுள்ள இறைவனை வாடாத இசைமாலையாலே புகழ்ந்தேத்தும்போது அப்புகழ்மாலை என்றென்றும் பக்தி மணமும், இசை மணமும், இலக்கிய மணமும் கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

குறிப்பாகத் தமிழகத்திலும், ஈழத்திருநாட்டிலும் தமிழிசை மரபுகள் நீண்டகாலமாக நிலவி வந்துள்ளன. கடந்த இரு நூற்றாண்டுகளிலே ஈழத் திருநாட்டிலே வாழ்ந்த வாக்கேயகாரர்களில் (இசைப்பாடலியற்றுவோர்களிலே) கந்தப்பிள்ளை, ஆறுமுகநாவலர், புத்துவாட்டி நா. சோமசுந்தரம், சிவயோக சுவாமிகள் முதலியோர் குறிப்பிடற்பாலர். சைவத்திற்கும், தமிழிற்கும் புத்துயிரளித்த நாவலர் பெருமான் தமிழிசைக்கும் அடிகோலினார் எனும் கருத்திலே கவியோகி சுத்தானந்தபாரதியார் "தமிழிசைக்கு விதை போட்டவர் நமது நாவலரே" யென்று கூறியிருப்பது குறிப்பிடற்பாலது. கதிர்காமக் கந்தனைப்பற்றி அவர் இயற்றியுள்ள சில கீர்த்தனைகள் ஈண்டு நோக்கற்பாலன. மேற்குறிப்பிட்டோரைத் தொடர்ந்து வந்துள்ள இலங்கைத் தமிழ் வாக்கேய காரர்களில் இன்றும் எம்மத்தியிலே புகழுடன் வாழ்ந்துகொண்டிருப்பவரும் "இயலிசைவாரிதி" "கவிமாமணி" "ஸாஹித்ய சிரோமணி" எனப் பல விருதுப் பெயர்கள் சூட்டப்பட்டு விளங்குபவருமான இணுவில் ந. வீரமணி ஐயர் நன்கு குறிப்பிடற்பாலர்.

இவருடைய பல்வேறு இசைப்பணிகள் (சாஸ்திரம், வாய்ப் பாட்டு, சாஹித்தியங்கள் முதலியன உட்பட) உற்று நோக்கும் போது, இந்த நூற்றாண்டிலே தமிழகத்திலே தமிழிசையை நன்கு வளம்படுத்திய பாபநாசம் சிவன்போன்று, இவரை ''ஈழத்திரு நாட்டின் பாபநாசம்சிவன்'' எனக் குறிப்பிடுதல் சாலவும் பொருத்தமாகும். ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. பாபநாசம் சிவம் அவர்களைத் தமிழக வெகுஜனத் தொடர்பு சாதனங்களும், சமய, பண்பாட்டு நிறுவனங்களும் அரசும் மதித்து மேன்மையடையச் செய்தன. அத்தகைய வாய்ப்புக்கள் வீரமணி அவர்களுக்கு இந்நாட்டிலே போதிய அளவு கிடைக்கவில்லை.

இவர் அண்மையிலே காலமாகிவிட்ட தம் அருமைச் சகதர்ம தாரிணி(மனைவி)யின் ஆத்மசாந்தி மலராக ஆதிசங்கரர் சமஸ்கிருதத்தில் எழுதியுள்ள சிறந்த தோத்திரங்களிலொன்றாக விளங்குவதும் அம்பாள் பற்றிய நூறு பாடல்களைக் கொண்டதுமான சௌந்தர்யலஹரியினைத் தழுவி, தாம் வழிபடும் இணுவில் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் பேரிலே ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாஸதகம் எனும் இசையாக்கத்தினை நன்கு செய்துள்ளார். மூலநூலின் கருத்துக்களையே பெரிதும் தழுவி எழுதப்பட்டதாயினும், புதிய ஆக்கமாகவே இஃது விளங்குகின்றது. சதகம் எனில் 100 எனப் பொருள்படும்.

ஏற்கெனவே கி. பி. 16-ம் நூற்றாண்டு தொடக்கம் சௌந்தர்யலஹரியினைப் பலர் செய்யுள் வடிவிலே தமிழிலே மொழி பெயர்த்தோ, தழுவியோ எழுதியுள்ளனர். யாழ்ப்பாணத்திலே சில ஆண்டுகளின் முன்னர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் இதனைத் தமிழ்ப்பாவிலே மொழிபெயர்த்துள்ளார். பழைய காப்பியங்களைத் தழுவி அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை, கோபாலகிருஷ்ணபாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்ற இசை நாடகங்கள் 19-ம் நூற்றாண்டிலே வெளி வந்துள்ளன. ஆனால் இவரின் ஆக்கம் இசைநாடகமாகவன்றிக் கீர்த்தனை வடிவிலான தோத்திரமாகவே அமைந்துள்ளது.

''சௌந்தர்யலஹரி'' எனில் அழகின் அலையெனப் பொருள்படும். மூலநூலிலே குறிப்பாக அம்பாளின் பேரழகு, பேராற்றல், ஆன்மாக்களிடத்து அவள் கொண்டுள்ள பேரன்பு, கழிவிரக்கம் முதலியன நன்கு புலப்படுகின்றன. இவ்வாசிரியரும் இதே சிறப்பியல்புகள் குன்றாது இசைநயம் பொதிந்திருக்கும் வகையில் கீர்த்தனைகள் எழுதியுள்ளார். இவருடைய இறை அன்பு (இங்கு தேவிமீதுள்ள பேரன்பு) தமிழ், வடமொழிப்

புலமை. இசைத்திறன், சமய தத்துவஞானம், கற்பனைவளம் சிறப்பாக பக்தி முதலியன இவ்வாக்கத்திலே நன்கு பிரதிபலிக்கின்றன. மூலநூலினைத் தழுவிக் கீர்த்தனை வடிவில் ஆசிரியர் எழுதியுள்ளமை இந்நூலிலுள்ள சிறப்பான புதுமைகளில் ஒன்றாகும். இதுவரை எவராவது மூலநூலுக்கேற்றவாறு இசை வடிவிலிதனைப் பிறிதொரு மொழியில் எழுதியதாகத் தெரியவில்லை.

இக்கீர்த்தனைகளில் வரும் சில சிறப்பியல்புகளைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் குறிப்பிடலாம். அம்பாளின் பரத்துவத்தைக் கூறும் முதலாம் கீர்த்தனையிலே மூலநூலிற்போலவே ''அம்பிகையே நீயின்றேல் அரன் (சிவன்) அசைந்திடுவானோ'' எனக் குறிப்பிடப்படுகின்றது. ''சக்தியின்றிச் சிவமில்லை'' யெனும் மெய்கண்டசாஸ்திரக் கருத்தும் ஈண்டு ஒப்பிடற்பாலது. அம்பாளுக்குரிய ஸ்ரீசக்கர அமைப்பினையும், தத்துவத்தினையும் ரத்தினச்சுருக்கமாக 11-வது கீர்த்தனை கூறுகின்றது. மூலாதாரச் சக்கர மஹிமை கூறும் 41-வது கீர்த்தனை, அம்பாளின் திருநெற்றியினை வருணிக்கும் 46-வது கீர்த்தனை, திருக்கண்கள் பற்றிய 48—57 வரையுள்ள கீர்த்தனைகள், திருமுகம் பற்றிய 58-வது கீர்த்தனை, இனிய பேச்சுப்பற்றிய 60-வது கீர்த்தனை, திருக்கழுத்து மடிப்புகள் பற்றிய 67-வது கீர்த்தனை, அம்பாளின் முழுமையான திருவுருவம் பற்றிய 92-வது கீர்த்தனை, தேவி உபாஸனையின் பயன்கூறும் 99-வது கீர்த்தனை, முடிவிலே ஆசிரியர் தான் இயற்றியவை தன் திறமையாலன்றி அம்பாள் திருவருளாலேயே எனக்கூறும் 100-வது கீர்த்தனை போன்றவை குறிப்பிடற்பாலன. ஒவ்வொரு கீர்த்தனையும் இசைநயம், இலக்கியநயம், சிறப்பாகப் பக்திரசம் சொட்டிக்கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு கீர்த்தனையும் வெவ்வேறு ராகங்களிலே பொருத்தமாக அமைந்துள்ளது. ஆதிதாளத்தினையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். சில கீர்த்தனைகளிலே ராக முத்திரையும் உள்ளது. எடுத்துக்காட்டாக அம்பாளின் இனிய பேச்சினைக்கூறும் ''அமிர்தவர்ஷணியோ இனிமை'' எனத் தொடங்கும் 60-வது கீர்த்தனை அமிர்தவர்ஷணி ராகத்தில் அமைந்துள்ளது. கீர்த்தனைகள் போற்றும் ''கன்னகா பரமேஸ்வரிம்ய'' முத்திரையாக மிளிர்கிறது. வாக்கேயகாரர் தம் இஷ்ட தெய்வத்தின் திருநாமத்தினை முத்திரையாகக் கையாளுவது இசைமரபிலுள்ளது.

அம்பாளின் (தேவியின்) திருவழகினைக்கூறும் இக்கீர்த்தனைகளிலே அழகின் சிறப்பு பல இடங்களிலே குறிப்பிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக

'' திருமேனி அழகே அழகு — தேவி
பிரமாவும் கவிதையிலே ஒருகாலமும் எழுதாத (12)
என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

ஆசிரியர் அம்பாளைத் தாயாகவே விளித்துத் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்துகின்றார். தாய்த்தெய்வம் பற்றிய கீர்த்தனைகளாதலாலே தாயிடம் அச்சமின்றிப் பிள்ளை தனது விருப்பங்கள், கஷ்டங்கள் முதலியனவற்றைக் கூசாமல் பயமின்றி எடுத்துக்கூறல் இயல்பானதொன்றே. எனவே, ''தாயே! அன்னையே!'' எனப் பலதடவை கூறியுள்ளார்.

இவர் இசை, நடனமாகியவற்றிலே மிக்க ஈடுபாடும் திறமையும், செயற்பாடும் உடையவர். எனவே, இவைபற்றிய குறிப்புகள் வரும் கீர்த்தனைகளில் இவரின் குதூகலத்தினைக் கூடுதலாகக் காணலாம். எடுத்துக்காட்டாக 41-வது கீர்த்தனையிலே சிவன் தாண்டவமும், சக்திலாஸ்யமும் தொடர்ந்து ஆடிக்கொண்டிருப்பதாலேதான் உலகம் தோன்றி இயங்கிக்கொண்டிருக்கிறது. இவர்கள் ஆடுவதை நிறுத்தினால் உலகம் அழிந்துவிடும் என்கின்றார். தேவியின் திருக்கழுத்திலுள்ள மும்மடிப்புகள் பற்றிக் கூறும் 69-வது கீர்த்தனையிலே ''ஸங்கீதக்கதி, கமகம், கிதவித்யா வல்லவளே'' எனக் கூறப்படுவது கவனித்தற்பாலது. இசை, குறிப்பாக — நடனத்திலே வரும் பாவரஸங்கள், நவரஸங்கள் போன்ற சொற்கள் கீர்த்தனைகளிலே விரவி வந்துள்ளன 'அம்பாளை நவரஸநாயகி'' (41) என ஆசிரியர் சில இடங்களிலே குறிப்பிட்டுள்ளார். 19-வது கீர்த்தனையிலே ''நம்தமிழ் இணுவில்'' என்பதில் இவரின் தமிழ்ப் பற்றும் புலப்படுகின்றது.

இவ்வாறு பல சிறப்பியல்புகளைக் கொண்டிலங்கும் கீர்த்தனைகளை இயற்றியுள்ள ஆசிரியருக்குத் தமிழிசையுலகம் குறிப்பாகச் சைவத் தமிழிசையுலகம் கடமைப்பட்டுள்ளது. தமிழ், சைவம், இசை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அனைவரும் இவ்வாக்கத்தினை நன்கு பயன்படுத்தி இம்மை, மறுமை நற்பலன்களைத் தரும் அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாகலாம். தியாகராஜசுவாமிகள் கிருஷ்ணபகவானைப் பற்றிய கீர்த்தனையிலே ''ஸாமஜவரகமன'' எனத் தொடங்கும் ''ஸாமநிகமஜ ஸுதாமயகான விசக்ஷண'' (சாமவேதத்திலிருந்து தோன்றிய அமுதமயமான இசைவிற்பன்னரே) என அவரைப் போற்றியுள்ளதுபோல அன்பர்கள் வீரமணி அவர்களின் இசைத்திறனையும் போற்றுவார்களாக. அவர் தொடர்ந்து நீண்டகாலம் வாழ்ந்து இசைப்பணியும், ஆன்மீகப்பணியும், தமிழ்ப்பணியும் செய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

'' எந்தரோ மஹாபாவலு அந்தரிக்கு வந்தனமு''.

அன்பன்

25-12-1996 வி. சிவசாமி

திரு. சி. பத்மலிங்கம்

(இசைத்துறைத் தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அவர்களின்

## ஆசிச்செய்தி

கல்வியின் நோக்கம் கடவுளை அடைதல். கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல். மனிதன் தன் உள்ளத்தில் எழும் ஆழ்ந்த உணர்ச்சிகளை பரம்பொருளாகிய இறைவனுக்கு வெளிப்படுத்த இசை ஒன்றினாலேயே முடியும். பாடுவதைவிட மேலான பூஜை வேறெதுவும் இல்லை. நாதப்பிரம்மம் எனப் போற்றப்படும் மும்மூர்த்திகளில் முதன்மையானவரான தியாக ராஜ சுவாமிகள் நூற்றுக்கணக்கான ராமநாமக் கீர்த்தனைகளை இயற்றிப் பாடியதால் உலகம் உள்ளவரை அந்த நாதயோகியின் நாமம் நிலைத்துநிற்கின்றது. இதுபோன்று தென்னிந்தியாவிலே காலத்திற்குக்காலம் எத்தனையோ வாக்கேயகாரர்கள் தோன்றி னார்கள்—தோன்றிக்கொண்டே இருக்கின்றனர். ஆனால் ஈழத் திருநாட்டைப் பொறுத்தவரை வாக்கேயகாரர்கள் மிகமிக அரி தாகவே தோன்றியுள்ளனர். வெறும் பாடல்களை மட்டும் இயற்று பவர்கள் வாக்கேயகாரர்கள் ஆகிவிடமுடியாது. இயல், இசை ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றவர்களே கீர்த்தனை வடிவங்களாகப் பாடல்களை இயற்றி வாக்கேயகாரர்களாக முடியும். இயல், இசை, நாட்டியம் போன்றவற்றில் மிகுந்த பாண்டித்தியம் பெற்ற நம்நாட்டு வாக்கேயகாரரான யாழ்ப் பாணம் பிரம்மஸ்ரீ N. வீரமணி ஐயா அவர்கள் ஏராளமான கீர்த்தனைகளை இயற்றி தென்னாட்டு வாக்கேயகாரர்களுக்கு ஈடாக விளங்குகின்றார்.

அவரது பணியின் தொடர்ச்சியாக ஸ்ரீமத். ஆதிசங்கர பகவத் பாதர் சமஸ்கிருத மொழியில் அருளிய ''சௌந்தர்யலகரி'' ஸ்லோகங்கள் நூறினையும் தமிழிலே கீர்த்தனைகளாக இயற்றி யிருக்கின்றார். இந்த நூறு சமஸ்கிருத ஸ்லோகங்களின் தெய் வீகக் கருத்துக்கள் மிக ஆழமானவை, சக்திதத்துவம் நிறைந் தவை, சர்வசித்தி தரவல்லவை. அந்தந்த ஸ்லோகங்களின் ரஸ பாவங்களுக்கேற்ப ராகபாவம், சாகித்ய பாவம் ததும்ப ஸ்லோ கங்களின் கருத்துக்களை தத்ரூபமாக தமிழில் கீர்த்தனைகளாக

தந்துள்ளார்கள். ஒவ்வொரு கீர்த்தனையிலும் அந்தந்த ஸ்லோகங்களுக்குரிய ஆழமான கருத்துக்களும் வர்ணனைகளும் தேவிபால் கொண்டிருக்கும் அபரிமிதமான பக்திரஸங்களையும் நூல் முழுவதும் பரக்கக் காணலாம். லோக க்ஷேமத்திற்காக ஸ்ரீமத். ஆதிசங்கர பகவத் பாதர் சமஸ்கிருத மொழியில் ஆக்கியதால் அந்த மொழியில் பரிச்சயமில்லாதவர்களுக்கு ஆழமான கருத்துக்களைப் புரியமுடியாமல் இருந்தது. ஆனால் ஐயா அவர்கள் தமிழில் இசை உருவில் அக்கருத்துக்களை தமிழ்மக்கள் புரிந்து கொண்டு பக்தியுடனும் இசை மரபுடனும் பாடி தேவியை ஆராதிக்கக்கூடிய வகையில் இந்நூலை ஆக்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

வளர்க அவர்தம் பணி.

அன்பன்
சி. பத்மலிங்கம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயா அவர்கள் தன்னுடைய துணைவியார் ருக்மணி அம்மாள் நினைவாக ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாசதகம் என்னும் நூலை வெளியிடுகிறார். காஞ்சிப்பெரியார் சங்கராச்சார்ய சுவாமிகளிலே மிகவும் ஈடுபாடு கொண்டவரும் கர்நாடக இசையிலே ஈடுபாடுடையவருமாகிய ருக்மணி அம்மாள் நினைவாக இந்நூலை வீரமணி ஐயர் அவர்கள் வெளியிடுவது மிகப் பொருத்தமானதாகும். அன்பு, அருள், அழகு உணர்வுடைய அந்த அம்மாளுடைய ஆன்மா மிகமிக உவப்படையும்.

கர்நாடக இசையுலகில் சாகித்திய கர்த்தாக்கள் எனக் குறிப்பிடப்படுபவர்களுள் வீரமணி ஐயா அவர்களும் ஒருவராவர். நூறு கீர்த்தனைகளை இந்நூல்மூலமாகத் தருகிறார். அம்பாளுடைய அருட்கோலமும், அழகுக்கோலமும் இசைச்சொற்களாலே படைக்கப்படுகின்றன. கடவுளர்களைப் பாடும்போது பாதத்திலிருந்து கேசம்வரை பாடுவதே மரபு. ஆனால் இந்நூலிலோ ஸ்ரீதேவியின் கிரீட வர்ணனை 42-வது பாடலிலே,

"மாணிக்கக் ரீடகாந்தி மயக்கந் தந்திடுதடி"
என்று தொடங்கி அமைகின்றது. தொடர்ந்து படிப்படியாக வர்ணனை செல்கின்றது. 88-வது பாடலில்

"கவிஞருக் கேனிந்தத் தடுமாற்றம் — தேவியுன்
அவிழ்பூம் பதநுனிக்கு ஆமைஒடு உவமையோ?"

என்று அம்பாளின் பாதநுனி பாடப்படுகின்றது. அம்பாளை மனித உருவிலே வீரமணி ஐயா அவர்கள் நோக்குகிறார். இதன் விளைவுதான் கேசாதிபாத வர்ணனை என்றுதான் நான் எண்ணுகிறேன்.

இசையுடன் இப்பாடல்களைக் கேட்கும்போது அம்பாளுடைய கோல எழிலும் அருட்சிறப்பும் எம்மனக்கண்ணிலே நிறைந்திடும் என்பதில் ஐயமில்லை. இந்நூலுக்கு இச்சிறிய அணிந்துரையை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அ. சண்முகதாஸ்

பிரம்மஸ்ரீ து. சந்திரசேகர சர்மா
அவர்களின்

## பிரார்த்தனை உரை

பழம்பெருமையும் சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயங்களையும், புகழ் ஓங்கிய கலைஞர்களையும், பெருமைமிக்க ப்ராம்மணோத்தமர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள 'இணுவையூரில்' அந்தணகுலத்தினூடாக 'வீரமணி ஐயர்' என்னும் நாம தேயத்துடன் கலைஞன் ரூபத்தில் இன்னுமோர் நன்முகத்தைத் தந்ததோடல்லாமல், நினைத்தவுடன் அற்புதமான இராகங்களோடு ஸாகித்யங்களை மழையெனப் பொழியும் ஆற்றலையும், இவ்வாற்றலின் சாரணமாகவே 'இயல் இசை வாரிதி', 'ஸாகித்ய சிரோமணி' போன்ற பல விருதுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஊக்கத்தைக் கொடுத்தும், சகியாக 'ருக்மணி' அவர்களைத் தேர்ந்தெடுத்து ஐயா அவர்களுக்கு இணையாக்கியும் இவ்வூர் தனது பெயரை உயர்த்திக்கொண்டது கண்கூடு.

நினைவு நிழல்களில் 'சப்தரிஷி' என்ற பெயரும், காதுகளில் அம்பிகை கற்பகாம்பாளின் அருட்பெருமைகளை ரீ. எம். எஸ்.

அவர்களின் தேன்குரலால் வழங்கிய ' கற்பகவல்லிநின் பொற் பதங்கள் " என்ற பாடல் ரீங்காரமிட்டவண்ணம் இருக்கின்றது. இதேபோன்ற பாடல்கள் பலப்பல.

'ருக்மணி' என்ற சகி, திருமணத்தால் ஒன்றிணைந்த இவரின் ஆற்றல்களைத் தூண்டும் சக்தியாக மாறியது அம்பிகை யின் அனுக்கிரஹமே. தன் சகியை 'ருக்கு' என்று அழைப்பதே இவரது வழமை. 'ருக்கு' என்ற சக்தி 'உருக்காக' இருந்தால் இவரை உருக்கி உருக்கி பல்லோராலும் பாராட்டப்படும் 'ஸாகித் யங்களை' நாம் பெற்றிருக்க முடியாது. அத்தோடல்லாமல் இவ் வரிய பொக்கிஷமான 'ஸௌந்தர்யலஹரி' சுலோகங்கள் அனைத் தும் அற்புதமான இசைவடிவில் ஏற்ற இராகங்களோடு கருத்தோ அன்றி சொற்சுவையோ குன்றாவண்ணம் எமக்குக் கிடைப்ப தற்குக் காரணியாக இருந்தவரும் இவரது சகியே. துணைதேடி இணையானவரின் பல்லாண்டுகாலக் கோரிக்கை அவரது மறை வின்பின் ஈடேறினாலும் அம்பிகையின் பாதாரவிந்தங்களில் ஐக் கியமாகியிருக்கும் அம்மையாரின் ஆத்மா பூரிப்புடன் சாந்தி பெறும் என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை. மேலும் தான் பக்தியோடு ஏற்றுக்கொண்ட கண்ணகா பரமேஸ்வரிக்கே இவ் வாக்கம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஒவ்வொரு பாடல்களிலும் முத்திரையாக்கப்பட்டதிலிருந்தே நன்கு உணரக் கூடியதாகத் தெரிகின்றது.

இவ்வரிய சாதனையை எமக்குத்தந்த அண்ணா 'வீரமணி ஐயர்' அவர்களிற்கு மென்மேலும் பற்பல கைங்கரியங்களைச் செய்வதற்கான ஆற்றல், மன உறுதி, ஆயுள் ஆகியவற்றை தடங்கலேதுமின்றிக் கிடைக்கவேண்டும் என்றும் 'அம்மை ருக் மணி' அவர்களின் ஆத்மா சாந்திபெற வேண்டும் என்றும் சொர்ணாம்பிகா சமேத பொன்னம்பலவாணேஸ்வரனையும், அம்பிகை லலிதா திரிபுரசுந்தரியையும் மனம் இறைஞ்சிப் பிரார்த் திக்கின்றேன்.

பொன்னம்பலவாணேஸ்வரன் ஆலயம்
264, ஆஸ்பத்திரி வீதி, த. சந்திரசேகர சர்மா
யாழ்ப்பாணம்.

முன்னைநாள் அம்பிகைபாக வித்தியாசாலை அதிபர்

''சைவசித்தாந்த ஸாகரம்''

மூதறிஞர் இணுவை அ. க. வை. கதிர்காமநாதன்

அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனையுரை

அகண்ட நித்யா வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவ பெருமான் சகளமாயும், சகள நிஷ்களமாயும், நிஷ்களமாகவும் மூவகைத் திருமேனிகளையும் கொண்டுள்ள ஆலயங்கள் பலவுள. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களினின்று சோபான முறையால் வழிபடற்குரியன. இறைவன் சக்தியின் துணைகொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறான். சக்தியின் வடிவம் தடையிலா ஞானமாகும். திருவருட் சக்தியின் பரத்து வத்தை ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் " ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ " என வடமொழியில் நூறு ஸ்லோகங்கள் ஆக்கியுள்ளார். இந் நூலை ஆதாரமாகக்கொண்டு பொருள் வழுவாது கீர்த்தனைகள் ஆக்கியுள்ளார், இணுவை ''இயலிசைவாரிதி'' ப்ரம்மஸ்ரீ வீர மணி ஐயா அவர்கள். இரு மரபும் சிறந்ததூஉம், மூத்தமிழும் வல்லதூஉம், ஆசார அனுஷ்டானத்தில் சிறந்ததூஉம் ஆகிய அந்தணர் குலத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்தவர். இவருடைய முன்னோர் பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர், பிரம்மஸ்ரீ தம்பையர் அவர்கள் வீரமணி ஐயர் அவர்களது பூட்ட னும் பேரனுமாவர். பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர், கணஸ் வாமி ஐயர் ஆகியோர் இவரது பெரியதந்தையார் ஆவர். ஐயா அவர்களை ஈன்றெடுத்த அன்னை சுந்தராம்பாள் ஆவர். ஐயா அவர்களின் பெரியதந்தையார் பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர் அவர்கள் மனைவி செல்வநாயகி அம்மாளோடும் குழந்தை மீனாக்ஷி சுந்தரஐயர் அவர்களோடும் கதிர்காமம்சென்று அங்கப்பிரதக்ஷணம் செய்து கதிர்காமக்கந்தனின் சந்நிதியில் சமாதியடைந்தார். வைராக்ய பக்தியில் சிறந்தவரான இவர் சிவபதமடையுமுன்பு புங்குடுதீவில் சிவன்கோவிலை ஸ்தாபித்து காசியிலிருந்து சிவ லிங்கம் கொணர்ந்து பிரதிஷ்டைசெய்து வழிபட்டுவந்தார். மீனாக்ஷிசுந்தரேஸ்வரன் எனத் தன் குழந்தைக்கு நாமமிட்டார். மார்க்கண்டேயர் அவர்களது சகோதரன் பிரம்மஸ்ரீ கணஸ்வாமி ஐயர் அவர்கள் ஸங்கீதக்கலையில் சிறந்து விளங்கினார். தமிழ்ப்

புலமையும் புராணங்களுக்குப் பொருள்சொல்லும் வல்லமையும் பெற்றிருந்தார். அம்பிகைபாக வித்யாசாலையில் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றிய உத்தமர். புவனேஸ்வரி அம்மாள் என்ற சகோதரியும் உளர். இவர் பின்வந்தவர்தான் பிரம்மஸ்ரீ மா. த. நடராஜ ஐயர் அவர்கள். சிறந்த ஸங்கீத விற்பன்னர். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சரளமாகக் கவிதைபுனையும் வல்லமையும் பெற்றிருந்தார். வயலின் வாசிப் பதில் வல்லவர். தியாகராஜ கீர்த்தனைகளைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவர் இரு குழந்தைக்குத் தந்தை. முன் னவர் பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர் அவர்கள். பின்னவர் சப்த ரிஷி எனும் நாமம் சூட்டப்பெற்ற பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள். இவருக்கு தமியேன் வித்தியாரம்பம் செய்துவைத் தேன். பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் தமது தந்தையாரைப்போன்று சகலகலாவல்லுனராய் விளங்குகிறார். இந்தியாசென்று சென்னை யில் ஸங்கீதம், நாட்டியம் கற்று அங்கு ஸ்ரீ கற்பகாம்பிகா ஸமேத கபாலீஸ்வரப்பெருமானுக்கு "திருமயிலைக் குறவஞ்சி" என்ற பிரபந்தநூலை இயற்றிப் பல பிரபலமான தமிழ் மூதறிஞரிடமும் ஸங்கீத வித்வான்களிடமும் பாராட்டுக்களைப் பெற்றார். சென் னைப் பல்கலைக்கழகம் இசைத்துறைப் பேராசிரியர் பிரம்மஸ்ரீ P. சாம்பமூர்த்தி அவர்களின் பாராட்டுக்களையும், விருதுகளை யும் பெற்றார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் ஆசி யையும் வருதையும் பெற்றார். இலங்கையில் பலநூறு ஆலயங் களுக்கு திருவூஞ்சல் பிரபந்தம் பாடிக் கொடுத்துள்ளார். ஸ்ரீ வீர மணி ஐயரவர்களின் பாமாலையைப்பெறாத ஆலயங்களே இல்லை எனலாம்.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா அவர்கள மஹாவித்துவான் சி கணேசையர் அவர்களின் உறவினரான புன்னாலைக்கட்டுவன் முதலியார் பிரம்மஸ்ரீ S. சோமசுந்தர ஐயர், லக்ஷ்மி அம்மாள் தம்பதிகளின் செல்வப்புதல்வி ருக்மணி அம்மாள் அவர்களை 1959-ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். ருக்மணி அம்மை யாரோ தர்மபத்னி நாயகன் சொல் தவறாதவர். விரதானுஷ் டானங்களிலும், பூஜை புனஸ்காரங்களிலும் தலைசிறந்தவர். தெய்வபக்தி நிறைந்தவர். லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்த தேஜஸ்வ ரூபமானவர் குரலில் தெய்வீகம் கமழும். பரோபகாரி. ஸ்ரீ பர ராஜசேகரப் பிள்ளையார் கோவில் பரிவாரமூர்த்தி ஸ்ரீ காளிங்க நர்த்தன விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்வதற்கு மூலகாரிணி. கண்ணன்மீது அபார பக்தியுள்ளவர். இத்தகைய புண்யவதி, கட்டிய கணவனின் மடியில் பூவோடும் பொட்டோடும் திருமாங் கல்யத்தோடும் சிவபதப் பேறெய்தினார். அன்னாரின் ஆத்ம சாந்தி மலராக பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயரவர்கள்

ஸ்ரீ ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனா ஸதகத்தைப் பாடியுள்ளார். அம்மாளின் இஷ்டதெய்வமாக இணுவில் தர்மஸாஸ்தா குரு குலம் காயத்ரிபீடம் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களிலே இம்மலர் சமர்ப்பிக்கப்பெறுகிறது. ஸ்ரீமதி ருக்மணி அம்மாளின் புனிதமான ஆத்மா சாந்தியடையுமெனப் பிரார்த்திக்கிறேன். அன்பிற்குரிய பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் பாடியருளிய இந்நூலுக்கு எனது 88ஆவது வயதில் இவ்வுரையை எழுதிக்கொடுக்க என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!

இங்ஙனம்

ஆ. க. வை. நாதன்

ஸ்கந்தவுரோதயக் கல்லூரி ஆசிரியர்

ஸ்ரீ ஆறுதிருமுருகன் B. A. அவர்கள்

வழங்கிய

# பிரார்த்தனை உரை

## ஆனந்தமான ருக்மணி அம்மா!

உலகத் தமிழர் அறிந்த உன்னதக் கவிஞர்களில் கவிமாமணி வீரமணி ஐயாவும் ஒருவர். இப்பெருங் கலைஞரின் பேராற்ற லுக்குப் பெரும் துணையாயிருந்து ஆறுதல் கொடுத்த ஆனந்த ருக்மணியம்மா அமைதியுற்ற செய்தி, அவரை அறிந்தவர்கள் அனைவருக்கும் பெரும் வேதனைக்குரியது. இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் திருவீதியில் சந்தனமும் ஜவ்வாதும் சங்கீதமும் ஒன்றாகச் சுவாசிக்கும் இல்லம் வீரமணி ஐயாவின் இல்லம். நித்த மும் வாசலிலே கோலமிட்டு துளசிமாடத்துக்குத் தூங்காத விளக்கு ஏற்றி பக்தியோடும் பண்போடும் வாழ்ந்தவர் ருக்மணி அம்மா. வீரமணி ஐயாவின் வீடே கலைக்கோயில். இவ்வில்லத்தில் எந் நேரமும் கலைஞர்கள், சுவைஞர்கள் கூடி இயலிசை வாரிதியின் இனிய சம்பாஷணைகளை ரசிப்பர். விருதுகளாலும், நூல்களா லும், வாத்தியங்களாலும் நிறைந்த இவ்வீட்டைப் புனிதமாகப் பேணிய அம்மாவின் அன்புருக்கமான உபசரிப்பை மைந்தனாக அனுபவிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. திருமுருகா! வா ஐயா! என்று வரவேற்று என் பேச்சில் ரசித்தவற்றைக் கூறி வாழ்த்துவதோடு என் பேச்சுக்கு உதவும் நன் நூல்கள் பல தெரிந்து எடுத்துத் தரும் அம்மாவின் பெரும் பண்புகளை மறக்க இயலாது.

பல பழைய சஞ்சிகைகளில் இருந்து தான் ரசித்த நல்ல கருத்துக் களை எடுத்து அதன் பொருளை அகல விளக்கும் அம்மாவின் ஆற்றல் வித்துவசிரோன்மணி ஐயாவின் பூர்வீகத்தில் வந்தவர் என்பதை நிரூபித்தன. தினமும் பல நூல்களை வாசிப்பது மட்டு மல்ல வீரமணி ஐயாவின் முதல் ரசிகராகவும் விமர்சகராகவும் அம்மா விளங்கினார். ஐயாவின் எத்தகைய படைப்பையும் அம்மாவின் அபிப்பிராயத்துக்கும் ரசனைக்கும் அர்ப்பணமாக்கு வது வழமை. எனவே ஐயாவின் ஆக்கங்களின் நுட்பங்களை அம்மா ரசித்துச்சொல்லும பாணி மிக இனிமையாக இருக்கும். சமையலறையில் நிற்கும் அம்மாவை சங்கீதச் சங்கதிகளாலேயே அழைக்கும் வீரமணி ஐயாவின் நகைச்சுவைக்கு நாடகப்பாணி யில் அம்மா பதில் சொல்வதும்கூட பெரும் சுவையாக இருக்கும். ஒருசமயம் வீரமணி ஐயா இயற்றிய பொன்னாலை வரதராஜப் பெருமான்மேல் ''யாத்த கலயாண வசந்த மண்டபத்தில்'' என்ற பாடலின் கருததுக்கள் பறறி ஐயா அம்மாவுடன் அளவளாவிய போது அபபாடலில் ஐயா செய்த நகைச்சுவை நுட்பத்தை அம்மா விளக்கிச சிரித்த காட்சி இன்னும் நிழலாக நிறகிறது. அப்பாடலின் ஒரடியில் "ஒமப் புகை நடுவே கண்ணன் ஒரக் கண்ணால் பார்த்தானடி" என்ற அடியை வைத்துக்கொண்டே அம்மாவின் விளக்கவுரை இருந்தது. மணவறையில் உட்கார்ந்த மாப்பிள்ளை மணமகளை நேரே பார்ககான், மணமக்களுக்கு வளர்க்கும் ஓமத்தீ புகை கிளம்புகின்றபோது சபைக்குத் தெரியா மல மணமகன் மணமகளைப் பார்ப்பானாம். இச்சங்கதியை ஐயா இப்பாட்டில புகுததிய அற்புதத்தை அம்மா விளக்கிய போதே இவ் அபாரமான கலைஞனின் கலைத்துவத்தை ஆழ ரசிக்க முடிந்தது. இதுபோல ஐயாவின் நாட்டிய நாடக நுட் பங்கள் தெளிவுபடுத்தும் திறன் அம்மாவிற்கு நிறைய இருந்தது நோய்கள் பல அவரைச் சூழ்ந்துவந்த போதெல்லாம் ஐயாவின் நெருக்கமான கவனிப்பும், இசையும் கலையும் அம்மாவை நோயில நோக விடவில்லை. இடர்சூழ்ந்த இடப்பெயர்வு அம்மாவிற்குத் தீராத நோயாகியது. மந்திகை வைத்தியசாலையில் மௌன மாகிக் கொண்டிருந்த அம்மாவை நினைத்து ஐயா பல கோவில் களதோறும் சென்று அம்மாவை மீட்க மன்றாடிய காட்சி மறக்க இயலாது. ''ஏனிந்த மௌனமம்மா ஏழை எனக்கருள ஆனந்த பைரவியே ஆதரித் தாளுமம்மா'' என்று என்றோ இறைவனைச் சிக்கெனப்பிடித்த ஐயா, அம்மாவின் நிலைகண்டு சும்மா இருந்திருப்பாரா? காலனோடு போராடி கவிமாமணி அம்மாவை இருப்பிடமான இணுவிலை நோக்கிக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். நித்தமும் கோலமிட்டு, நித்தியமும் பூஜை, விருந்தோம்பல் நடத்திய அவரது இணுவைப் புனித இல்லத்தில்

அம்மா நிரந்தர அமைதி பெற்றார். அழுது புலப்பிய ஐயா நிமிர்ந்து எழுந்து அம்மாவின் ஆத்ம அர்ச்சனைக்காக சௌந்தர்யலஹரியைக் கீர்த்தனைகளாய்ப் பாடி முடித்துள்ளார். ஆருயிரின் நினைவாக அற்புதமான நூறு கீர்த்தனைகளை அம்மாவின் பெயரால் ஐயா ஆன்மீக உலகிற்குச் சமர்ப்பணம் செய்திருப்பது மெச்சத்தக்கது. இறைமகளோடு இரண்டறக் கலந்த இனிய ருக்மணி அம்மா இனிய வீரமணி ஐயாவிற்கு ஆறுதல் தாரும் என்று பிரார்த்தனை செய்து, சௌந்தர்யலஹரியை தமிழ்கூறும் நல்லுலகிற்கு கீர்த்தனைகளாகத் தரும் வீரமணி ஐயாவைப் போற்றி அமைகிறேன்.

''பாலாவி''
மருதனார்மடம், ஆறு. திருமுருகன்
இணுவில்.

● ● ●

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்

'' துர்க்காதுரந்தரி ''

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

யாழ் என்ற இசைக்கருவியைத் தனது நாமத்தோடு இணைத்து நிற்கும் யாழ்குடாநாட்டிலே முத்தமிழும் நடமிடும் பதியாக விளங்குவது இணுவில் ஊராகும். இங்கு வாழ்ந்த, வாழ்கின்ற, வாழும் முத்தமிழ்த்துறை விற்பன்னர்கள் பலரை நான் நன்கறிவேன். இவர்களில் பலர் அருள்மணம் கமழும் அறிஞர்களாக விளங்கியமை கண்கூடு. இன்று இப்பதியில் இசைத் துறையிலும், நாட்டியத்துறையிலும் பெரும் புகழ் பெற்று இவற்றை வளர்ப்பதிலே மிக ஈடுபாடோடு விளங்குபவர் சாகித்யசிரோமணி ந. வீரமணி ஐயா அவர்கள். இயலிசை வாரிதி, கவிமாமணி என்ற பல விருதுகள் இவரைத் தேடிப் பெருமை பெற்றுள்ளன. இப்பெரியாரின் பல்வேறு இசைப்பணிகளை இந்நாட்டு அறிஞர்கள் காலத்துக்குக்காலம் பாராட்டத் தவறவில்லை. இப்பாராட்டுதல்களின் பயனாகவே இசைத்துறையில் பல நூலகள் இப்பெரியாரால் எழுதப்பட்டு அரங்கேற்றம் பெற்றிருக்கின்றன.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்குகின்ற அம்பாளின் பேரழகை அழகு ஒழுக வர்ணிப்பது சௌந்தர்யலகரித் தோத்திரம் ஆகும். இதனை நன்கு கற்று உள்ளத்திருத்தி இசை நயம், பொருள்நயம் குன்றாது கீர்த்தனைகளாக்கி வெளியிடுகின்றார் ஐயா அவர்கள். ஆசிரியரின் இசைத்திறன், தமிழ்ப் புலமை, பக்தி மேம்பாடு, கற்பனை ஊற்று ஆகியவை இக் கீர்த்தனைகளில் நன்கு புலப்படுகின்றது. இணுவில் கண்ணகா பரமேஸ்வரியை பாட்டுடைத் தெய்வமாகக் கொண்டு கீர்த்தனைகளைப் பொருத்தமான முறையில் ஆக்கியுள்ளார். ஆதிசங்கரர் வடமொழியில் எழுதியுள்ள அம்பாள் தோத்திர நூலாக விளங்கும் சௌந்தர்யலகரியினை நாம் நன்கு அனுபவிப்பதற்கு இக் கீர்த்தனைப் பாடல்கள் மிகவும் சாதகமாக அமைந்துள்ளன.


நூலாசிரியர் வீரமணி ஐயாவின் வாழ்க்கைத் துணையாகவும், தற்காத்துத் தற்கொண்டார் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலா மனையாளாகவும் விளங்கியவர் ஸ்ரீ ருக்மணி அம்மா அவர்கள். அம்மையாரின் மறைவை முன்னிட்டு நிறைவாக தன் மனையாளின் விருப்பத்திற்கேற்ப இந்நூலை வெளியிடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. ருக்மணி அம்மாளின் நினைவு மலராகவே சௌந்தர்யலகரியின் நூறு சுலோகங்களுக்குரிய கீர்த்தனைகள் வெளிவருகிறது. அத்துடன் தனது கண்கண்ட தெய்வமாக விளங்கும் இணுவில் கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின் திருவடியில் சமர்ப்பிக்கப்படுவது பெருஞ் சிறப்பாகும். எனவே அருள் நிறைந்த ஆத்மீகத் திருப்தியுடன் வெளிவரும் இப் பாமாலையை அனைவரும் ஏற்றிப் போற்றுவார்கள் என்பது திண்ணம். இயலிசைவாரிதி வீரமணி ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து முத்தமிழ்ப் பணியையும் ஆன்மீகப் பணியோடு இணைத்து ஆற்றவேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

தங்கம்மா அப்பாக்குட்டி

## ஆய்வுலகப் பார்வையிலே . . .

# இந்நூலாசிரியர்பற்றி



★ ★

# தொகுப்பு

பிரம்மஸ்ரீ *M*. பாலகைலாசநாத சர்மா
விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

அருளாளர்களாலும், புலவர்களாலும் பாடப்பெற்ற பல பிரபந்தங்களும், பாடல்களும் கொண்ட இம்மயிலைக்குப் பிரபந்த வகைகளுள் ஒன்றான "குறவஞ்சி" எனும் பிரபந்தம் ஒன்று மட்டும் குறைவாகி இருந்தது. அந்தக்குறையை நிறைவாக்கு கிறார் அன்பர் ஸ்ரீ வீரமணி அவர்கள். குறவஞ்சி நாடகத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் கட்டங்களை அன்பர் வீரமணி அவர் கள் மிகவும் நயம்பட அமைத்துள்ளார். சொற்சுவையும் பொருட் சுவையும் இசைச்சுவையும் நூல் முழுவதும் பரக்கக்காணலாம்.

கு. அய்யா சுப்பிரமணிய முதலியார்
க. சோமசுந்தர முதலியார்
[திருமயிலைக் குறவஞ்சி (இசை நாடகம்) அணிந்துரையில்]

திருமயிலைக் கபாலீஸ்வரர்
தேவஸ்தானம்
சென்னை. 24-03-1957

❋ ❋

அபார சக்தி யருளும் ஜோதி
கபாலி சிவனின் கான ரசத்தால்
அன்புசெய் கலைஞன் ஆம் வீரமணியன்
பண்புகழ் ஓங்குக பாரில் புறவே.

சுத்தானந்தபாரதி

❋ ❋

மயிலைக் குறவஞ்சி மன்னுதமிழ்ப் பாடல்
அயிலார் குமரனரு ளன்பு — பயிலுமெழில்
ஈழ நாடுள்ள எழிலாரும் வீரமணி
ஆழ முடன் சொன்னான் அமைந்து.

சென்னை. 16-08-1959 அன்பன் கிருபானந்தவாரி

❋ ❋

உன்னுடைய மயிலைக் குறவஞ்சியை மயிலாப்பூர் கோவி லில் ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் வாசித்து அரங்கேற்றி னாராம். புஸ்தகமாகப் பிரசுரித்ததாகக் கேள்வி. மயிலைக் குறவஞ்சி அழகாக அமைந்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன், ஆனால் என்னிடம் பிரதி ஒன்றும் இல்லை. நீ கதாகால க்ஷேபம் செய்துகொண்டிருக்கிறாய் என்பதைப் படித்ததும் சந் தோஷப்பட்டேன்.

அடையார்,
சென்னை-20
12-09-1957

ருக்மணிதேவி
இயக்குநர்
கலாக்ஷேத்ரா

இசைமலியும் யாழ்ப்பாணத் தினுவில் என்னும்
எழில்நகரான் வீரமணி என்னும் பேரான்
நசைமலியும் நாடகமும் இசையும் தேர்ந்தான்
நளினமலர்ப் பிராட்டிகலை மகளும் வாழ்த்த
அசைமயிலாம் மயிலைநகர்க் கற்பகத் தாய்
ஆர்வமிகு கபாலியண்ணல் பாற்கொள் காதல்
பசையதனை நயமாக அமைத்துப் பாடிப்
பகர்ந்தகுற வஞ்சிகண்டு மகிழ்ந்தேன் இன்றே.

கலைமகள்
மயிலாப்பூர், சென்னை
17-08-1956

கி. வா. ஜகந்நாதன்

முத்தமிழும் வல்லோன் முதுமறையோன் வீரமணி
அத்திமுக னுக்கூஞ்ச லாதியன் — தித்தித்துத்
தேனொழுகு தீந்தமிழிற் செய்தளித்தான் கீர்த்தனநற்
கானமெழு நாவனிவன் காண்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
29-05-1962

(பண்டிதமணி) சி. கணபதிப்பிள்ளை

திருமயிலைக் குறவஞ்சி என்னும் இந்நாடகம், நாடக இலக்கணமெல்லாம் அமைந்துள்ளது. இதில் மெய்ப்பாட்டுச் சுவைகளும், கற்பனைகளும், தாள அமைதியும் மிக நயமாக அமைந்து விளங்குகின்றன. ஆதலால் இஃது யாவராலும் புகழத்தக்கதாகும். இதனை நோக்குவார்க்கு ஐயரவர்களுடைய நுண்மாணுழைபுலம் எத்துணைத்தென்பது அறியத்தக்கதாகும்.

வறுத்தலைவிளான்

(மகாவித்துவான்) சி. கணேசையர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ N. வீரமணி என்பவர் தனது 25-வது வயதில் கலையின் தேர்ச்சி அடைந்து கலாதேவியின் அருளால் கவிதா சக்தியும் வாய்ந்து எழுதியிருக்கும் திருமயிலைக் குறவஞ்சி என்னும் நாட்டிய நாடகமும், சிருங்கார பதங்களும், பக்திபூர்வமான கீர்த்தனங்களும் பார்த்தேன். பாடவும் கேட்டேன். மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. எதுகை, மோனை முதலிய கவிதை இலக்கணங்களெல்லாம் இவர் பாடல்களில் விசேடமாக அமைந்துள்ளது.

சென்னை-4.
15-12-1956.

'நாட்டிய கலாகேசரி'
வழுவூர் B. ராமையாபிள்ளை

'மயிலைக் குறவஞ்சி' என்னும் இசைநூலை அவர் பாடிக் காண்பிக்கக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். நல்லொழுக்கம், அடக்கம் எல்லாம் அமைந்துள்ள அவருடைய ஸாகித்யங்கள் நன்றாக அமைந்து இயற்கையாக இருப்பது போற்றத்தக்கது.

142, ராமகிருஷ்ணாமடத் தெரு. B. ராஜம் ஐயர்
சென்னை-4. 14-12-1956. சங்கீத வித்வான்

தித்திக்கும் தேன் தமிழில் நவரஸமுடன் பக்திரஸமும் ததும்ப இலக்கணச்சுவை குன்றாது மயிலைக் குறவஞ்சி என்ற சிறிய-அரிய நூலிழைத்துக் கூடுகட்டியிருக்கும் அற்புதச் சிலந்தி நமது திரு. ந. வீரமணி என்னும் அடையார் கலாக்ஷேத்ர மாணவர். இவர் திருக்குறளை ஆதாரமாக்கி பலநூறு பாட்டுக்களும் இயற்றியுள்ளார். இவரது பா இயற்றும் ஆர்வமும், பணிவுக் குணமும் வியக்கத்தக்கனவாகும். இத்தகைய தமிழ்த்தொண்டு செய்யும் மணிகள் எங்கோ சிதறிக்கிடப்பதை ஊன்றிநோக்கி ஆதரிக்கும் நாளை விரும்பி எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ஏமாற்றமின்றித் தமிழ்நாட்டு வள்ளல்கள் கலைக்கோயில் கட்டுகிறவர்களுக்குக் கைகொடுக்க வேண்டுகோள்.

மயிலாப்பூர், சென்னை. 04-04-1957. பாபநாசம் சிவன்

திருமயிலைக் குறவஞ்சி, திருமயிலைக் கீர்த்தனைகள், திருக்குறள் கீர்த்தனைகள் முதலியவை செய்திருக்கிறார் ஸாகித்யங்கள் எளிய அழகான தமிழ் வார்த்தைகளில் கோர்த்து உணர்ச்சி பாவத்துடன் அமைந்திருக்கின்றன. இச் ஸாஹித்யங்களை கலையுலகம் வெகுவாக ஆதரித்து இந்த இளைய கலைஞருக்கு ஊக்கமளிக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

மயிலாப்பூர், சென்னை G. N. பாலசுப்பிரமணியம்
04-04-1957

N. வீரமணி என்பவருடைய சில கவித்துவமாகிற திருமயிலைக் குறவஞ்சி, திருமயிலைக் கீர்த்தனங்கள் இவைகளைப் பார்வையிட்டேன். சிறிது பாடியும் கேட்டேன். தமிழில் திறமையும், சுலபமான மொழியாகவும், சொற்திறமையும் அவைகளில் விளங்குகின்றன. இச் சிறுவயதில் இம்மாதிரியான ஆர்வம் ஏற்பட்டு பாட்டுக்களை இயற்றிவருவது போற்றத்தக்கதே.

மியூசிக் அகாடெமி, 'ஸங்கீத கலாநிதி'
சென்னை-14 முடிகொண்டான் வெங்கட்ராம ஐயர்
15-12-1956.

திரு. ந. வீரமணி தமிழறிவோடு இசை ஞானமும் உடையவர். வெகு லளிதமாகச் சொற்சுவை, பொருட்சுவைகளோடு சாகித்தியம் புனையும் ஆற்றலுடையவர். நாட்டியக் கலையின் அடிப்படை விதிகளையறிந்து முத்திரைகளுடன் நடிக்கும் இயல்புடையவர். தமிழ்நாட்டிற்குத் தக்காங்கு இவர் பயன்பட வேண்டும் என்பது என் அவா.

2, றொபேட்சன் லேன்,
சென்னை-28.
04-08-1956

ச. கு. கணபதி ஐயர்

❋ ❋

## APPRECIATIONS

I listened to 'Mailai Kuravanji' composed by Sri Veeramani of Ceylon. Though it is his maiden attempt, the young composer has shown masterly craftsmanship in this piece, which deserves full encouragement at the hands of music lovers. He has also composed some Keertanas in Tamil. May the Lord bless young Veeramani with brilliant success in the world of art.

*Mysore Vasudevacharya*

Kalakshetra
Adyar, Madras 20
21 December 1956.

❋ ❋

I heard some of his kirtanas in Tamil and also his Dance Drama of Tamil entitled Tirumayilai Kuravanji. The music of the songs is good and the Sahitya of the verses and songs has a natural flow. The young composer shows great promise.

*Prof. P. Sambamoorthy*
B. A., B. L.
Head of the Department
of Indian Music

University of Madras
06th October 1956.

❋ ❋

He has composed hundreds of songs in various Talas and ragas, including 175 Talas and 72 Mela Ragas. It is God's Gift that a person could have such a spontaneous

flow of poems and music with pure devotion on Lord Muruga. The songs are really worthy and appreciable. I am sure that his compositions will be recognised and popularised by the Public and the Government also.

*Dr. Mangalampalli*
*Balamurali Krishna*
Sangeetha Mahopadyaya (USA)

22, Kanakasri Nagar
Madras-600086
19-01-1980.

❋ ❋

He is a Dance Teacher of great merit and a well-qualified musician, endowed with the rare distinction of being an able composer of songs, especially kirtanas in Tamil, set to music by himself with remarkable speed and technical skill. His compositions are simple, lyrical in quality and infused with emotion and religious fervour.

*Sri Chittor Subramaniyam*
Principal
Ramanathan Music Academy

Chunnakam
Ceylon
22-03-1977

❋ ❋

He sang a few songs composed by him and I am not hesitating to say that it is special gift He showed me some songs composed by him in Thirumayilai Kuravanji, Thirumayilai kirtanas, Thirukkural krities and I admire his talents in this field. He has a fine knowledge in Dance.

*T R. Mahalingam*

'Sukumara Bavanam'
129, Rayapette High Road,
Madras 04
Jan. 3rd 1957

❋ ❋

My dear Sir Veeramani Iyar,

I have already started to sing your praise here!

Your song compositions in Tamil are all really wonderful and erelong, they are found to become popular throughout the length and breadth of our country...... and abroad too.

Wherever there are Tamilians, wherever there are true devotees, your songs are verily become a part of their prayers. The art of composing is indeed a 'born gift' to you and it is only "Divinity" that guides your writing hand. The easy flow of your words in your grasp is again only a divine "Boon" and you have been purposely blessed thus only to sing His praise.

31, Sullivan garden Rd,
Mylapore – Madras.
11-4-71.

*S. Balachander*

❋ ❋

His talents and composings Tamil verses and songs, are quick and spontaneous, and has the power of attracting the attention of both the learned and the lay alike His "Maylai Kuravanchi" a dance Drama, I believe, is characterised with originality of expression of rasabhava in its various minutes shades and subtle situations. As such it stands on the same level with the existing Kuravanchis.

Kalakshetra,
Adyar, Madras-20.
03-10-1956

'Sangeetha Siromani'
*M. P. Ramanathan*
Lecturer in Music

❋ ❋

I find the words containing the compositions simple, understandable, full of Bhakthi and ideas are not wanting. Composing of songs is an inborn trait of an individual which he has, coupled with the musical training he has in Kalakshetra.

18, Oliver Road,
Mylapore,
Madras-04
17th December 1956.

*Musiri Subramania Iyer*

❋ ❋

I have found them enjoyable and of good quality. He is young man of notable talents, a trained musician, a

student of dancing and composer of no mean order. As such he deserves all encouragement.

*E. Krishna Iyer*, B. A., B. L.
Hony. Secretary
Madras State
Sangita Nataka Sangam

Madras
10th December 1956

* *

I am glad to know of your work and how you are getting on Indeed, I am surprised that have been able to compose so many songs, etc. and I hope it is all a good success.

*Rukmini Devi Arundale*

Kalakshetra
Thiruvanmiyur,
Madras-41
7 Jan. 1971

* *

Sri N Veeramay, a student of Kalakshetra has rendered to me his dramatic composition 'Thirumailai Kuravanchi' as also some other compositions in Tamil. He impressed me as a youth of great promise. His compositions are of a high order.

*T. M. Krishnaswamy Iyar*

Bala Vikas
Mylapore, Madras
1-12-1956

# நன்றியுரை

இணுவில் — வட்டுவினி — தர்மசாஸ்தா குருகுலம் காயத்ரி பீடம் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களுக்கு என் அநந்தகோடி ஸாஷ்டாங்க நமஸ்காரங்கள்.

''அற்புதமான தெய்விகப் படைப்பு. இதேபோன்று இசைப் பணிகளைத் தொடர்ந்து செய்யுங்கள்'' என எனக்கு ஆசிர்வாதம் தந்து, காஞ்சிப் பெரியவர்களின் படங்களுடன் விபூதிப் பிரஸாதமும் அருளிய காஞ்சிப் பெரியவாள் அவர்களின் பாதாரவிந்தங்களுக்கு அடியேனின் அநந்த கோடானுகோடி நமஸ்காரங்களுடன் எனது ஹ்ருதய பூர்வமான நன்றியையும் முதற்கண் மிகுந்த பக்தியோடு ஸமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை ஆக்கும்போது எனக்கு ஊக்கமும் உத்ஸாகமும் தந்து, ஆசி உரைகளையும் அழகுற எழுதித்தந்து எனை அன்புடன் ஆதரித்த சிவஸ்ரீ வை. ஸோமாஸ்கந்தக் குருக்கள் தம்பதிகளுக்கும், சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் தம்பதிகளுக்கும் எனது உளப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரைகள், பாராட்டுரைகள், வாழ்த்துரைகள், அணிந்துரைகள், பிரார்த்தனையுரைகள் அன்போடு வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் அவர்கள், 'நியாயசிரோன்மணி' சிவஸ்ரீ சுப்ரம்மண்ய சாஸ்திரிகள் அவர்கள், அகில இலங்கை ப்ராம்ஹ்மண ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள் அவர்கள், பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ ஸ்வாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள், ஸம்ஸ்கிருதத்துறைத் தலைவர் திரு. வி. சிவசாமி அவர்கள், கலைப்பீடாதிபதி திரு. அ. சண்முகதாஸ் அவர்கள், இராமநாதன் நுண்கலைக்கழகம்-நாட்டியத்துறைத் தலைவர் திரு. சபா. ஜெயராசா அவர்கள், இசைத்துறைத் தலைவர் திரு. S பத்மலிங்கம் அவர்கள், 'சைவசித்தாந்தஸாகரம்' திரு. அ. க. வைத்தியநாதன் அவர்கள், பிரம்மஸ்ரீ சந்திரசேகரசர்மா அவர்கள், ஆசிரியர் திரு. திருமுருகன் அவர்கள், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆகிய யாவருக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூலை நான் ஆக்குங்கால், ஸௌந்தர்யலஹரி ஸ்லோகங்களின் கருத்துக்கள், ஒவ்வொரு கீர்த்தனையிலும் பொதிந்துள்ளதா என

ஆய்ந்து என்னைப் பாராட்டி, ஊக்கமும் உத்ஸாகமும் தந்த சிவஸ்ரீ பா. வஸந்தக்குருக்கள் ஸ்ரீவித்யா தம்பதிகளுக்கு என் மனமார்ந்த நன்றியும், ஆசிர்வாதங்களும் உரித்தாகட்டும். இந்நூலின் அட்டைப்படமாக ஸ்ரீ சக்கரத்தை அழகுறத் தீட்டித் தந்த ஓவியர் "வண்ணக்கலையரசு" ஸ்ரீ சுந்தரலிங்கம் அவர்களுக்கும், கொழும்பு AICO PRINER அச்சக உரிமையாளர் திரு. ந. கண்ணன், திரு. வி. பாபு ஆகியோருக்கு இந்நூல் மேலட்டையை அழகுற அச்சேற்றித் தந்தமைக்காகவும் என் உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன். இந்நூலை அச்சேற்றித்தந்த இணுவில் ஸ்ரீ சாயி அச்சக உரிமையாளர் திரு. பா. நித்தியானந்தம் அவர்களுக்கும், இந்நூலை அச்சுக்கோர்த்தும், ஒப்புநோக்கியும் உதவிய திரு வீ. ஜெயரத்தினம் அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூல் அச்சேறுவதற்கான நிதியை எனக்கு தந்துதவிய எனது பரதநாட்டியக்கலை ஏகசிஷ்யையான ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் அவர்களுக்கும், எனது மருமகன் பிரம்ம ஸ்ரீ ஸ்ரீ ஹரி சந்திரசேகர ஐயர் அவர்களுக்கும், என்னுடைய உளங்கனிந்த நன்றியையும் ஆசிர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூல் ஆசிரியரைப்பற்றிய தொகுப்புரை ஆக்கித்தந்த பிரம்மஸ்ரீ பாலகைலாசநாதசர்மா அவர்களுக்கும் எனது நன்றியையும் ஆசிர்வாதங்களையும் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம்
"கலாரத்னா" "கலாபூஷணம்"
ந. வீரமணி ஐயர்.

பதிப்புரிமை நூலாசிரியருக்கே

ஸ்ரீ சாயி அச்சகம், இணுவில்.

உ

ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரி அம்பாள் துணை.

ஸ்ரீ:

இணுவில் – வட்டுவினி – தர்மஸாஸ்தா குருகுலம்

காயத்ரிபீடம்

ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள்

" ஸர்வசித்தி நல்கும் "

# ஸௌந்தர்யலஹரிக்கீர்த்தனாஸதகம்

(மூலம்: ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதர்)

இயற்றியவர்:

" இயலிசைவாரிதி " " கவிமாமணி "
" ஸாஹித்யசிரோமணி " " ஸாஹித்யஸாகரம் "
" ஸாஹித்யமாமணி " " முத்தமிழ்வாரிதி "
" முத்தமிழ்வித்தகர் " " சிருஷ்டிஞாயிறு "
" அருட்கலைவாரிதி " " கலாரத்னம் "

யாழ்ப்பாணம் (இணுவில்)

பிரம்மஸ்ரீ.

## மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்.

[விரிவுரையாளர். இராமநாதன் நுண்கலைக்கழகம் — யாழ். பல்கலைக்கழகம்.]

இஃது

ஸ்ரீமதி வீரமணி ஐயர் ருக்மணி அம்மாள் அவர்களின் ஆத்மஸாந்தி மலராக இணுவில் – வட்டுவினி – தர்மஸாஸ்தா குருகுலம் காயத்ரிபீடம் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பெறுகிறது.

29 – 4 – 1997.

உ
ஸ்ரீ :
ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்பாள் துணை.

**இணுவில் — வட்டுவினி — தர்மஸாஸ்தா குருகுலம்**
**காயத்ரிபீடம்**

ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்பாள்
" ஸர்வசித்தி நல்கும் "

# ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாஸதகம்

**1**

ஸ்ரீ பராசக்த்யை நம :

(ஸகல நன்மைகளும் பெற)

## பராசக்தியின் பெருமை.

1. ராகம்: **ஹம்ஸாநந்தி** தாளம்: **ரூபகம்**

**பல்லவி**

**காயத்ரிபீட** வாஸினி — ஸ்ரீ
**கன்னகாபர** மேஸ்வரி விலாஸினி

**அநுபல்லவி**

சேஷாத்ரி ஹரிஹர ப்ரம்ம
ஸேவிதபரா சக்தி பரப்ரம்ம

**சரணம்**

சக்தியுனைச் சேர்ந்தே ஸாம்பன் பரமனும்
முத்தொழில் ஸ்ருஷ்டிஸ்தி திசங்கா ரஞ்செய்வான்
அத்தொழில் செய்திட ஆதிகா ரணியே!
முத்தன் ஹரிப்ரம்மன் நித்தம் துதிசெய்யும்

அம்பிகே நீயின்றேல் அரன் அசைந்திடுவானோ?
கும்பிட்டே ஹரிஹரன் பிரம்மன் நினைப்போற்றல்
தம்பிறவிப் புண்ய தவப்பயனே அன்றோ!
அம்புவித் தர்மஸாஸ் தாகுரு குலத்தேவீ!

2

ஸ்ரீ தேவ்யை நம :

(பஞ்சபூதங்களை வெற்றிகொள்ள)

# ஸ்ரீ தேவியின் பாததூளி மஹிமை.

ராகம்: கல்யாணி                    தாளம்: ஆதி

பல்லவி

எண்ணிலடங்கா மஹிமை நண்ணிடுமே — தேவீ!
கண்ணகா பரமேஸ்வரி கஞ்சமலர்ப் பாதத்தூளி

அநுபல்லவி

வண்ண இணுவைப் புரத்தில்
வட்டுவினி க்ஷேத்திரத்தில்
பண்ணமுதக் காயத்ரி
பீடத்தேவி பாதத்தூளி

சரணம்

தாமரைப் பதத்தூளித்
தயவினால் பிரம்மதேவன்
க்ஷேமமுறப் பதினான்கு
லோகங்களைப் படைத்தான்
ஆதிசேஷனானவிஷ்ணு
ஆயிரம் சிரங்களினால்
பாதத்தூளி சுமந்து நின்றான்
பரமன் நீறாய் அணிந்தான்.

ஸ்ரீ சிந்தாமணயே நம :

( வேதங்களின் பொருளை விளங்க )

# விரும்பியதைக் கொடுக்கும் பாததூளி.

3 ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

அம்பா நின் பதத்தூளி அஞ்ஞானம் அகற்றிடும்
ஆதவன் உதித்திடும் அழகிய த்வீபமன்றோ!

அநுபல்லவி

வெம்பாப வினையகற்ற விரியும் தேன்பிரவாஹம்
எந்தாயே நின் பதத்தூளி ஏழைகட்குச் சிந்தாமணி

சரணம்

முன்னம் அசுரன் கடலில் மூழ்கவைத்த வையகத்தை
வன்னக்கோரப் பற்களால்வராகமூர்த்தி கொணர்ந்தார்
இன்னல் பிறவிக்கடலில் இடர் அழுந்தியவர்க்கே
அன்னவராக பற்களாய் அல்லல் நீக்கித் தூக்கிவரும்

நல் இனுவைப் புரத்தினிலே நளினகா யத்ரிபீடம்
வல்லவட்டு வினிக்ஷேத்ர வாஸினி சுலோசனி
தொல்லையிரும் பிறவிக்கடல் துயர்களை நீக்கிட
எல்லாம்வல்ல ஸ்ரீகன்னகா பரமேஸ்வரியே தேவீ!

ஸ்ரீ லோகசரண்யாயை நம :

( ஸகல வியாதிகளும் நீங்க )

# ஸ்ரீ தேவியின் திருவடி மஹிமை.

4. ராகம்: கரஹரப்ரிய தாளம்: ஆதி

பல்லவி

தேவியின் திருவடி மஹிமை — தெய்வீகம்
ஆவியுருகும் அடியர் அருள்பெற அள்ளிநல்கும்

அநுபல்லவி

தேவர்கள் அருளைஈயும் அபயவரத ஹஸ்தம்
தேவிநின் பதத்தாளி திருவருள்பொழியும் நித்தம்

சரணம்

அபயவரத ஹஸ்தம் அபிநயம் தேவர்நல்கும்
கவலைகள் தீர்த்திடும் கருணையருள் தருவார்
நவரஸ நாயகி உபயபதத் தாளி
பவபயம் நீக்கியருள் பாலித்துப் பொழியுமே !

நீலோற்பல ஹஸ்தம் நிறைமதிமுகக் கருணை
மாலேத்தும் சோதரியே மஹிமை இணுவைநகர்
கோலாகல வட்டுவினி க்ஷேத்ர காயத்ரி
கோலோச்சும் பீடம்வளர் கண்ணகாப ரமேஸ்வரி.

—※—

ஸ்ரீ ஸௌபாக்யஜநந்யை நம :

( யாவரையும் வசீகரிக்க )

# ஸ்ரீ தேவி பூஜை மஹிமை.

5. ராகம்: காபி தாளம்: ஆதி

பல்லவி

பூஜித் திடுவார்க் கருள்புரிவாய் — தேவீ !
தேஜஉடன் வசீகரத் தெய்வசம்பத் தருள்வாய்

அநுபல்லவி

மாயவன் விஷ்ணு உந்தன் மலரடி பூஜைசெய்தான்
மோஹினியாய் ஆக்கிச்சிவ மோஹம்மாலுக் கருளினாய்

சரணம்

காமன் நினைப் பூஜித்தே கட்டழகுத் தேஜஸ்பெற்றான்
மாமுனிவர் தமைமயக்கும் வசீகரமும் உற்றான்
நாமஇனுவைப் புரத்தில் நற்பீடக் காயத்ரி
நாயகியே ஸ்ரீகன்னகா பரமேஸ்வரி பூஜித்தேன்.

ஸ்ரீ ஹிமகிரிஸுதாயை நம :

( ப்ரேமை தம்பதிகளுக்குள் ஏற்பட )

# ஸ்ரீ தேவியின் கடைக்கண் கருணை.

6. ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

கருணைக்ரு பாகடாக்ஷக் கண்ணழகி ! — தேவியுன்
கடைக்கண் ணருளினாலே காமன்ஜெய மும்கொண்டான்

அநுபல்லவி

திருவருட் திருஷ்டியினால் திகழ்ந்திடும் வெற்றியினால்
ஒருவனாய் நின்றுமதன் ஒளிபெறுகிறா னன்றோ !

சரணம்

மலரம்பு ப்ரமரநாண் மந்தமா ருதரதம்
பலமான மந்திரியும் பருவ வஸந்தருது
நிலைவலி வில்லாத படைகளுடனே மதன்
தலைமைபெ றுவதெல்லாம் தாயேநின் கண்ணருளே !

கலைத் தர்மஸாஸ்தா குருகுல நிவாஸம்
தலவட்டு வினியினுவை காயத்ரி பீடம்
பலம்தரும் கண்ணகா பரமேஸ் வரிநாமம்
தலைவணங் கினேன்தாயே மலையரசன் மகளே.

ஸ்ரீ ஆஹோபுருஷிகாயை நம :

( பகைவரை ஜெயிக்க )

# ஸ்ரீ தேவியின் திவ்ய ரூபம்.

7. ராகம்: ஸ்ரீரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

திருக்காட்சி தருவாய் அம்மா ! — தேவி !
அருட்கோலக் கண்ணகா
பரமேஸ்வரியே உந்தன்

அநுபல்லவி

திருக்கோயில் கொள் இணுவைத்
தினத யாபரி
கலைக்காயத்ரி பீடக்
கண்ணகா பரமேஸ்வரி

சரணம்

மணிகொஞ்சும் ஒட்டியாணம்
மத்தகஜ ஸ்தனங்கள்
அணி நூலிடை அழகும்
அம்புலிப் பூர்ணமுகம்
கணைவில்லும் பாசம் ஈட்டி
கரங்களில் ஏந்தும் தேவீ !
பணிந்தேன் பாதாரவிந்தம்
பரப்ரம்ம ஸ்வரூபிணி.

ஸ்ரீ சிதானந்தலஹர்யை நம :

( ஸம்ஸாரபந்த விமோசனம் )

# ஸ்ரீ தேவியின் வாஸஸ்தானம்.

8. ராகம்: நாதநாமக்ரிய தாளம்: ஆதி

பல்லவி

ஞானாநந்தலஹரி நீயே! — தேவீ!
மோனாநந்த த்யானமதில்
மூழ்கிட நீ அருள்வாய்

அநுபல்லவி

தேனாமிர்த இணையை லட்டு
விளிக் காயத்ரி பீடம்
கானாமிர்த கீதம் மாந்தும்
கண்ணகா பரமேஸ்வரி

சரணம்

அமுதக் கடல் நடுவே
அழகுக் கற்பகதரு
கமழும் ரத்னத்தீவில்
கதம்பமலர்ச் சோலையில்
திகழ்சிந்தா மணிபுனைந்த
தேவஅரண் மனையிலே
திரிகோணக் கட்டிலிலே
சிவாசனம் அமர்பவளே!

ஸகஸ்ரார பத்ம விஹாரிண்யை நம :

( ஐம்பூதங்கள் ஸ்வாதீனமாக )

# ஸ்ரீ தேவி ஸஞ்சரிக்கும் இடம்.

9. ராகம்: **கல்யாணவஸந்தம்** தாளம்: **ஆதி**

**பல்லவி**

ஸகஸ்ராரத் தாமரையில் பரப்ரம்ம னோடிணைந்து
ஸுகமேவு ஆனந்த ஸ்வரூபிணி நமஸ்காரம்

**அநுபல்லவி**

இகமேவு வட்டுவினி இணுணைக் காயத்ரிபீடக்
கமலி **கண்ணகாபர** மேஸ்வரி நமஸ்காரம்

**சரணம்**

மூலாதாரப் பூமி தத்துவமும் மணிபூரக
நீரஜலத் தத்துவமும் ஸ்வாதிஷ்டான அக்கினி
சேரும்தத்து வத்தினையும் ஹ்ருதய ஆகாஷ
மேவும்அநா கதசக்ர வாயுதத்து வத்தினையும்

**மத்யம காலம்**

அருட்சக்தி விசுக்தி ஆகாச தத்துவமும்
புருவஇடையில் தோன்றும் ஆஜ்ஞா சக்கரத்தின்
பருவமான மனஸ் தத்துவங்க ளைப்பிளந்து
அருகணைத்தே களித்து ஆயிரமிதழ்விரிக்கும்.

ஸ்ரீ குலகுண்டகுஹரிணிஸ்ரபிந்யானை நம :

( தேக ஆரோக்யம் பெற )

# ஆதார சக்ர வாஸிநீ தேவீ !

**10.** ராகம்: **கானடா** தாளம்: ஆதி

**பல்லவி**

மூலாதாரச் சக்கரத்தில் யோகநித்தி ரையிலாழ்ந்து
கோலாகலப் பாதத்தூளிப் பாலமுதம் பொழியும்தேவ!

**அநுபல்லவி**

சேலாடும்வி **ழிக்கண்ணகா**
பரமேஸ்வ ரியேஅருள்
மாலேத்தும் இணைவைவட்டு
விளிக்காயத் ரிபீடத்தில்

**சரணம்**

அமுதம் பொழிந்தே எங்கள்
உடலிலுள்ள நாடி
எழுபத்தி ரண்டாயிரம்
என்றும் நனைத்தருள்வாய் !
அழகுச் சந்த்ர மண்டல
ஆதாரச்சக் ரத்தில்நீயே
வளையும்ஸர்ப் பமுமானாய்
வனஜக் கிழங்குபோல.

ஸ்ரீ மூலப்ரக்ருதயே நம:

(புத்ரபாக்யம் பெற)

# ஸ்ரீ சக்ர வர்ணனை.

11. ராகம்: ரீதிகௌள                    தாளம்: ஆதி

**பல்லவி**

சக்ரஸ்வரூபிணி ஸகலலோகேஸ்வரி
தத்வநாற் பத்திநான்கு சரணக்கோ ணேஸ்வரி

**அநுபல்லவி**

திக்கு புகழ்இணுவை வட்டுவினிக் காயத்ரி
மிக்கஅருளின் பீடம் மிளிர் பரமேஸ்வரி

சரணம்

சிவஸ்வ ரூபமான சக்கரங்கள் நான்கினொடு
தவசக்தி ரூபமாகித் திகழ்ஐந்து சக்கரங்கள்
நவமூல தாதுக்களும் நல்லபிந்துஸ்தான மந்த்ரத்
திரிகோணங்கள் எட்டுத் தளங்களுடனே இன்னும்

மத்யம காலம்

பதினாறு தளங்கள் மூன்று மேகலைகள்
துதிமுப்ர காரங்கள் தொகைநாற்பத்தி னான்கு
மதிநிறை தத்துவங்கள் மாதாநின் ரூபமன்றோ!
கதியுன் பாதாரவிந்தம் கண்ணகா பரமேஸ்வரி.

ஸ்ரீ துஹிநகிரி கந்யாயை நம :

( கவித்வம் பெற )

# ஸ்ரீ தேவியின் அழகு.

12. ராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

பல்லவி

திருமேனி அழகே அழகு — தேவீ!
பிரமாவும் கவிதையிலே ஒருகால மும்எழுதாத்

அநுபல்லவி

திருவாழும் இணுவையூர்
திகழ்காயத்ரி பீடப்
பெருமாட்டி ஸ்ரீகண்ணகா
பரமேஸ்வரி உனது

சரணம்

பனிமலை அரசனின் பருவமிகு கன்னியே!
நனியெழில் பெறவேண்டி நாரியர்ரம் பையூர்வசி
கனியும் சிவாயுஜ்ஜம் கபாலியை வேண்டிநின்றார்
இனியவுன் அழகெல்லாம் இறைசிவன் அறிவானே!

—❀—

ஸ்ரீ தேவ்வை நம:

( ஸ்திரீ வச்யம் பெற )

# ஸ்ரீ தேவியின் கடைக்கண் பார்வை.

13. ராகம்: காமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

கடைக்கண் பார்த்துநீ அருளாயோ? — தேவீ !
அடைக்கலமாக உந்தன் அடிமலர் நான்பிடித்தேன்

அநுபல்லவி

கொடையருள் நிறைஇணைவக்
காயத்ரி பீடத்தில்
புடைசூழும் கண்ணகா
பரமேஸ்வ ரியேஉந்தன்

சரணம்

விருத்தனும் குரூபியும்
வல்லமை அற்றவனும்
விரித்தவுன் கண்ணருளால்
வீரியம் பெறுவாரன்றோ!
சிரித்தே இளம் மங்கையர்
சேரநாணம் விட்டன்னாரைப்
பெருத்தநல் லாசையோடு
பின்தொடர்ந்தே வருவர்.

ஸ்ரீ பகவத்யை நம :

( துர்பிக்ஷம் நீங்க. )

# ஆதார சக்ரத்தின் மேலுள்ள தேவி.

14. ராகம்: பூபாளம் தாளம்: ஆதி

பல்லவி

சரண கமலவருள் பெருகும் — தேவி!
கிரணங்கள் உச்சியிலே
ஸகஸ்ரார மத்தியிலுன்

அநுபல்லவி

புரஇனுவைக் காயத்ரி
பீடம் அமரும் தாயே!
கரக்கம லக்கண்ணகா
பரமேஸ்வ ரியேஉந்தன்

சரணம்

பிருதுவி தத்வமூலா தாரஐம் பத்தானை
கிரணங்க ளும்ஜல தத்வமணி பூரகத்தில்
வருமேஐம் பத்திரண்டு கிரணங்கள் அக்னிதத்வ
வளர்ஸ்வா திஷ்டானத்தில் அறுபத்தி நான்காக

மத்யம காலம்

கிரணங்கள் வாயுதத்வ கிளர்அநா கதத்தினில்
வரும்ஐம்பத் திநான்கு கிரணங்கள் ஆகாச
விசுக்திஏழ் பத்திரண்டு மனஸ்தத்வ ஆஜ்ஞாசக்
கரம்அறு பத்திநான்காய்க் கணிதஸாஸ் திரம்கூறும்.

ஸ்ரீ ஸரஜ்ஜயோத்ஸ்தாசுத்தாயை நம :

( கவிதை புனையும் வல்லமை ஏற்பட )

# கவிதை அளிப்பவன்.

15. ராகம்: ஹம்ஸாநந்தி தாளம்: ஆதி

பல்லவி

தேனும் பாலும் திராக்ஷையின் இனிமை
தெவிட்டாக் கவிதையில் தேவி அருள்வாள்

அநுபல்லவி

ஞாலம் திகழ்ந்திடும் ஞானஇ ஞுவைப்பதி
மோன காயத்ரி பீடப் பராசக்தி

சரணம்

சரத்சந்த்ர நிறமேனி
சந்த்ரகலா நவரத்னச்
சிரத்தழகு மகுடம்
சேர்வரத அபயமுத்ரை
கரத்தில் ஸ்படிகமாலை
கலைகல்வி ஏடுதாங்கும்
பரப்ரம்ம ஸ்ரீகண்ணகா
பரமேஸ்வ ரியைப்பாட.

ஸ்ரீ ஸ்ருங்காரலஹர்யை நம :

( சபையோரை மகிழ்விக்க )

# கல்வி அளிப்பவள்.

14. ராகம்: ஸரஸ்வதி தாளம்: ஆதி

பல்லவி

பாமலர் தொடுக்கும் கவிப்
பாவலரின் நல்லிதயத்
தாமரை மலரச் செய்யும்
தாயே நீயோர் இளம்வெய்யில்

அநுபல்லவி

ஸாமகானப் ரியைநீயே !
ஸாம்பவி இணையைப்புரக்
கோமளக்கா யத்ரிபீடக்
கன்னகா பரமேஸ்வரி

சரணம்

நின்னை நிதம் பணிவோர்க்கு
நாமகள் ஸரஸ்வதியின்
வன்னச் ஸ்ருங்கார ரஸ
யௌவனப்ர வாஹமும்சேர்
சொன்னயமும் பொருள்நயமும்
சோபிக்கச் சபைநடுவே
அன்னவரை மகிழ்விக்கும்
ஆசி அருள்பவளே.

ஸ்ரீ ஜநந்யை நம :

(ஸகல கலைகளிலும் வல்லமை உண்டாக)

# கலைகளை அளிப்பவள்.

17. ராகம்: பிருந்தாவனஸாரங்கா தாளம்: ஆதி

பல்லவி

காவியம் அள்ளிஅள்ளித் தருவாய் — வட்டுவினி
தேவிகண்ணகாபர மேஸ்வரியே நின்னருளால்

அநுபல்லவி

நீவசினி முதலாய தேவிசக்தி எண்மரொடு
பாவரஸங்கள் பொங்கிடும் பாடல்நயங்கள் ததும்ப

சரணம்

நவரஸங்கள் நிறைந்த நாவல்லமை நல்கிடுவார்
கவினுறச் சந்த்ரகாந்தக் கற்பிளவின் வெண்நிறத்தார்
புவியில் காயத்ரிபீடப் பரையே எண்சக்தியையும்
கவிஉபாஸனை செய்யக் காவியங்கள்தான் படைப்பார்

சொல்நயம் பொருள்நயம் தொடைநயங்கள் குலுங்க
நன்னயம் நிறைகவி நாவன்மையும் பெறுவர்
கன்னல் சரஸ்வதியின் கமலவதன கந்தம்
வன்னக் காவியம்தரும் வாசம் கமழ்ந்திடுமே.

18

ஸ்ரீ சசியுதஜடாஜூடமகுடாயை நம:

( வசீகரணம் )

# ஸ்திரீ வசீகரண காரணமாதல்.

18. ராகம்: ஆபேரி தாளம்: ஆதி

**பல்லவி**

செக்கச் சிவந்தவுன் மேனிவண்ணம் — தாயே!
எக்கணமும் விண்ணும் மண்ணும்
எழில்பெறும் விந்தை காண்பேன்

**அநுபல்லவி**

மிக்கிடு புகழ்இனுவை
மிளிர்வட்டு வினித்தலத்தில்
தக்க காயத்ரி பீடக்
கண்ணகா பரமேஸ்வரி

**சரணம்**

இளஞ்சூரிய வெயிலின்
இங்கிதவுன் செவ்வண்ணத்தை
வளந்திகழ் விண்ணும் மண்ணும்
வாய்த்ததென த்யானிப்பேன்
உளந்தனில் மான்விழியார்
ஊர்வசி முதலாம்நாரி
வளைந்தே தேவகன்னியர்
வசீகர மாவரன்றோ!

ஸ்ரீ ஹரமகிஷ்யை நம :

( ஸ்திரீ மோகனம் )

# மூவுலக வசியம் தருபவள்.

19. ராகம்: த்வஜாவந்தி தாளம்: ஆதி

பல்லவி

பிந்துஸ்தான வதனமும் இந்துரவிஸ் தனங்களின்
சுந்தரி கண்ணகாபர மேஸ்வரியை த்யானம்செய்வாய்

அநுபல்லவி

நந்தமிழ் இணுவையூரில்
நாமக்காயத் திரிபீடம்
வந்தமர்ந்தே வட்டுனினி
க்ஷேத்திரத்தில் உறைபவளே!

சரணம்

பெண்மை சக்திஸ்வரூபமும்
பின்மதன கலைகளும்
வண்ணமுற த்யானம்செய்தால்
வசீகரம் அருளுவாள்
தண்ணிலவு சூரியரைத்
தனபார மாக்கொண்ட
எண்ணரிய மூவுலகாம்
எழில்ஸ்திரீகள் மோஹம்தோன்றும்.

ஸ்ரீ ஹிமகர சிவாமூர்த்தையே நம :

( விஷபயம் நீங்க )

# விஷபயம் நீக்கும் சக்தி.

20. ராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

**பல்லவி**

அமிர்த ரஸப்ரவாஹத் திருமேனி — தாயே!
அழகுச் சந்த்ரகாந்தச் சிலையோ நின்வடிவம்?

**அநுபல்லவி**

கமழ்இணு வைக்கண்ணகா பரமேஸ் வரிதேவீ!
காயத்ரிபீ டவாஸினி கழல்தொழு தேன்அம்மா!

**சரணம்**

கடும்விட வரவதன்
கர்வமதை அடக்கும்
கருடனைப் போலவே
கழல்துதிக்கும் பக்தன்
கொடும்விடத் தால்வருந்தும்
கடும்பிணி யாளரை
விடம்நீக்கிக் குணமடையச்
செய்திடுவான் நின்னருளால்.

ஸ்ரீ பரமாஹ்லாதலஹர்யை நம :

(மக்களிடம் கௌரவம் பெற)

# பரமானந்தம் அளிப்பவள்.

21. ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

பரமானந் தமளிக்கும் தேவீ! — கண்ணகா
பரமேஸ்வரியே உந்தன் கழலே த்யானம்செய்வேன்

அநுபல்லவி

வளமேவும் இணுவைநகர் வட்டுவினி காயத்ரித்
தலமேவும் தாயேஉந்தன் தாமரைப்பதம் சரணம்

சரணம்

ஆறுகம லங்களில் மேலுள்ளஸ கஸ்ராரமாம்
பூவில் அமர்ந்ததாயே பூம்பத மேதுணையே
சூரியன்சந் திரன்அக்னி ரூபமான மின்னல்கொடி
போன்றஉந் தன்கலையைப் பூஜிப்ப வர்க்கேநிதம்

மத்யம காலம்

காமாதி மலங்கள் மாயை இவைநீக்கி
கோமளப் பதமலர் நாளும்நல் குவாய்தேவி!
தேனமுதப் பேரா நந்த அலைகளுள்ளே
மாமக னியர்உன்னை த்யானம்செய்திட என்றும்.

ஸ்ரீ பவாந்யை நம :

( இஹலோக ஸுகம் பெற )

# ஸ்ரீ தேவியைத் துதிப்பதன் பலன்.

22. ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

அம்மா பவானிஎன்றே நின்னை அழைத்தபோது
நின்ஸாயுஜ்ஜ பதவி நெகிழ்ந்துடன் அருள்பவளே!

அநுபல்லவி

இம்மாநிலத் தில்இணுவை
இலங்குகா யத்ரிபீடம்
நம்மாதல வட்டுவினிக்
கண்ணகா பரமேஸ்வரி

சரணம்

ஸுந்தரிநின் அடிமையெனை
உந்தன்கடைக் கண்பாராயோ?
இந்திரன் பிரம்மா விஷ்ணு
இலங்கிடு கிரீடங்களால்
மங்களஹா ரதிசெய்யும்
மலரடிநின் ஸாயுஜ்ஜம்
தந்தருள் பவளேதாயே!
தாமரைப் பதம்சரணம்.

ஸ்ரீ சம்புசரீரார்த்தயை நம:

(ஸர்வ வியாதித் தொல்லைகள் நீங்க)

# ஸ்ரீ தேவியின் திவ்ய ரூபம்.

23. ராகம்: ஆரபி                                        தாளம்: ஆதி

பல்லவி

செந்நிறத் திருமேனி சேர்ந்த திரிநயனம்
என்னிதயத் தில்நின் உரு தோன்றுதே பராசக்தி!

அநுபல்லவி

வன்னத் தனபாரமும்
வளர்சந்த்ர கலைசேரும்
சென்னிமுடி தோன்றுதம்மா!
கன்னிகா பரமேஸ்வரி

சரணம்

தவநிறை சிவனிடப்
பாகமதைக் கொண்டனை!
சிவனின்பா தியுருவைச்
சேர்த்தப கரித்தனை!
புவனியில் இணுவையின்
வட்டுவினி தலத்தினில்
அவனிக்கா யத்ரிபீடம்
அமர்பவளே தாயே!

ஸ்ரீ ஸ்படிககடிகா கராஸ்ய நம :

(பேய் பிசாச தோஷம் நீங்க)

# ஸ்ரீ தேவியின் புருவ அசைவு.

24. ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

புருவங்களைச் சற்றேநீ அசைத்தால் — தேவீ!
பரப்ரம்மமான சிவன் படைக்கின்றான் நால்தத்துவம்

அநுபல்லவி

பிரம்மனும் விஷ்ணுருத்ரன் ஈஸ்வரனாம் நால்தத்துவம்
பரப்ரம்மம் படைக்கநின் புருவ அசைவாதாரம்

சரணம்

பிரம்மனும் உலகினைப் படைக்கின்றான் மகாவிஷ்ணு
கருணையால் காக்கிறான் ருத்திரன் அழிக்கிறான்
பரமேஸ்வரன் மூவரைப் பாலித்து மறைக்கிறான்
அரன்தன்னை மறைக்கிறான் அன்னைபராசக்திஉந்தன்

பூங்கொடி யின்அசைவு போலப்புருவம் கொண்ட
காந்தக்கண் ணகாபர மேஸ்வரி இணையின்
சாந்தவட்டு வினித்தலச் சாரும்காயத் திரிபீடம்
பூந்தளிர்ச் கொடிப்புருவப் பூரணி பராசக்தி.

ஸ்ரீ சிவாயை நம:

(உயர் பதவி கிடைக்க)

# ஸ்ரீ தேவி பூஜையே மும்மூர்த்தி பூஜை.

25. ராகம்: தன்யாஸி தாளம்: ஆதி

பல்லவி

தேவியின் திருவடித் தாமரையைப் பூஜித்தால்
மூவரயன் அரிஅரன் முகிழ்த்த அருள்பெருகும்

அநுபல்லவி

ஆவியுரு கிப்பிரமன் அநந்தன்ருத் திரமூர்த்தி
தேவீயுனைக் கைகூப்பி சிரமுடிமேல் குவிப்பர்

சரணம்

ஸத்வரஜஸ் தமஸெனும் முக்குண மூர்த்தியவர்
ஸத்யலோகப் ரம்மாஹரி ருத்திரன் மூவாதிமூவர்
நித்தியமூன் பீடம்தாங்கும் ரத்னபீடத்தின் அருகில்
பக்தியுட னேபூஜிப்பர் பரைபூஜைக் கருள்தருவர்

அன்னையேஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரித் தாயே!
வன்னஇனு வைவட்டு விளிக்காயத் திரிபீட
நின்னைப்பூ சனைசெய்தால் நிறைமும் மூர்த்திகளும்
நன்னயம்சேர் அருள்தருவர் நின்மலரடி பூஜித்தேன்.

ஸ்ரீ சதிதேவ்யை நம :

(பகையை வெல்ல)

# ஸ்ரீ ஸதாசிவனின் மஹிமை.

*26. ராகம்:* **அடாணா** *தாளம்:* **ஆதி**

பல்லவி

*ஸதா சிவன் தர்மபத்னி அன்னே! — உந்தன்*
*பதார விந்தத்தாளி பாலிக்கும் மகிமைஎன்னே?*

அநுபல்லவி

*உதாரவாதாரத் தேவீ! உன்பாதிவ்ரத் யத்தால்*
*நிதாநந்தம் ஸதாசிவன் நீடூழி பெறுகின்றான்!*

சரணம்

*பிரம்மாவிஷ்ணு யமன்குபேரன் இந்திராதி தேவர்*
*ப்ரம்மாண்டப்ர ளயகாலம் பேரழி வெய்திடுவர்*
*ஸதாநீ அணைக்கும்அரன் ஸதாசிவன் அழியாமல்*
*உதாரண புருஷனாய் உன்னோடு க்ரீடைசெய்வான்*

*கண்அவன் என்றுபதி தன்னையே அரவணைக்கும்*
**கண்ணகா பரமேஸ்வரி** *கமலட்பதத் தூளி*
*வண்ணமுறும் ஸதாசிவனை வாய்த்தசிரஞ்ஜீவி யாக்கும்*
*பண்இனுவை வட்டுவினிக் காயத்திரி பீடத்தேவீ!*

ஸ்ரீ புஸ்தகஹஸ்தாயை நம:

(ஆன்மீக ஞானம் ஏற்பட)

# ஆறுவிதமான ஐக்ய த்யானம்.

27. ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

எல்லாம் உனக்கே அர்ப்பணித்தேன் — தாயே!
நல்லாசி தந்தெனக்கு நல்லருள் புரிவாயே!

அநுபல்லவி

சொல்லான பேச்சுனக்கு ஸோபிக்கும் மந்த்ரஜெபம்
வல்லுடல் ஆசையெல்லாம் நின் ஹஸ்த முத்திரைகள்

சரணம்

பிரதக்ஷிண மாகஎன் நடைகளும் அமையட்டும்
புசிப்பதெல்லாம் உனக்கு ஹோமமாக இருக்கட்டும்
தரையில் சயனமுந்தன் நமஸ்கார மாகட்டும்
பரைஉந்தன் பூஜைநான் பண்ணுவ தாகட்டும்

கமலாம் பிகையே துணை கன்னகா பரமேஸ்வரி
திகழ்இணை வைப்பதித் தலவட்டு வினித்தேவீ!
புகழ்மலி தர்மஸாஸ்தா குருகுல வாஸினி
இகமதில் காயத்ரி பீடநி வாஸினி.

ஸ்ரீ ஜநந்யை நம :

( அபமிருத்துக்கள் நீங்க )

# ஸ்ரீ தேவியின் காதணியின் மஹிமை.

28. ராகம்: மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

தாடங்கக் கர்ணாபரணம் தரித்தவளே! — ஜநநீ!
வேதங்கள் போற்றும்பரம பதிவிர தாதேவீ!

அநுபல்லவி

மாதவஞ்செய் இந்திராதி
தேவர் பிரமன் அமுத
பானகம்ப ருகினாலும்
ப்ரளயத்தில் அழிவரன்றோ!

சரணம்

பதிவிர தையுன்செவித்
தாடங்க மஹிமையினால்
பரமன்நஞ் சுண்டாலும்
ப்ரளயத் திலுமழியான்
பதிஇனு வைவட்டு
வினிக்காயத் திரிபீடம்
வதியும் கண்ணகாபர
மேஸ்வரியே தாயே!

ஸ்ரீ வரதாபயகராயை நம :

( முரட்டுத்தன்மை நீங்க )

# ஸ்ரீ பரமசிவன் ப்ரபாவம்.

29. ராகம்: ஹிந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

ஐயன்பரமனும் வந்தான் அம்மைப்ரை எழுந்துநின்றாள்
துய்யனை வரவேற்றனள் தூயசிவன் மஹிமைபெற்றான்

அநுபல்லவி

செய்யசெம்பொன் முடிதரித்த ஸ்ரீதரன் இந்திரன்அயன்
பெய்தமுடி இடறுமெனப் பேணும்பெண்கள் அஞ்சிட

சரணம்

பகவதித் தேவியுன்னை பிரமன்விஷ்ணு ருத்ரன்
அகமதில் அன்பால்நிதம் அடிபணிந்திட வருவர்
புகலரும் பொன்முடிகள் பதமலர் இடறிடுமோ ?
அகல்அணி முடியென அரிவையர் கூறும்போது

தாடங்க மஹிமையினால் தண்முடிப் பதம்புரள
ஸ்ரீரங்கனிந் திரனயன் சிற்பரையைத் துதித்துநின்றார்
வேதங்கள் போற்றிடும்தேவி! கண்ணகாப ரமேஸ்வரி
பூதலஇனுவை வட்டு வினிக்காயத் ரிபீடத்தில்

ஸ்ரீ நித்யாயை நம :

( அஷ்ட சித்தி பெற )

# ஸ்ரீ தேவியுடன் ஒன்றிவிடுதலின் பலன்

30. ராகம்: கௌரிமனோஹரி தாளம்: ஆதி

பல்லவி

அணிமா மஹிமா ஐஸ்வரிய கிரணங்கள்
மணிமா மலரடி மஹிமையே! — தேவீ!

அநுபல்லவி

பணிவேன் நின்னையே
அஷ்டஐஸ் வரியங்கள்
இணைவேனென் ஆத்மாநீயே
என்றே த்யானம்செய்வேன்

சரணம்

ப்ரளயகா லாக்னி
மங்கள ஹாா ரதிசெய்யும்
பரமனஷ் டைஸ்வரியங்கள்
பரையருள்க் கிணையாமோ ?
பரமேஸ்வரி கண்ணகா
பாலித்தருள் தருவாய்
பதிஇனைக் காயத்
திரிபீடத் தேவி!செல்வ

ஸ்ரீ அகில புருஷார்த்தைக சுடாயை நம:

(ராஜவசியம் ஏற்பட)

# ஸ்ரீ தேவியின் பஞ்சதசி எனும் ஸாஸ்திரம்.

31. ராகம்: ரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

பஞ்சதசி மந்த்ரம் பரமனும் தந்தருள
ரஞ்ஜனியே மிஞ்சும்அருள் தந்தனைஎன் நமஸ்காரம்

அநுபல்லவி

அஞ்சலென நீஅருளி அறுபத்தினான்கு தந்த்ரம்
நெஞ்சமதில் பிறவிப்பயன் நிறை உபாஸனைநெறி

சரணம்

ஸர்வஸித்தி அருளும்மந்த்ரம் அறுபத்தினான்கு தந்த்ரம்
ஸர்வேஸ்வரன் தந்தருள சக்தியேநீ நிர்ப்பந்தித்தாய்!
தர்மஸம்வர்த் தனிசிவன் தந்திரம் அருளச்செய்தாய்!
கர்மபாபம் நீக்கும்மாயே **கண்ணகா பரமேஸ்வரி**

பூவுலகில் பஞ்சதசி புண்ணிய உபாஸனைகள்
மேவுமுறை யாவும்பரன் நாவிலெமக் கருளச்செய்தாய்!
**தேவிஇனுவைப் பதியின்** திருத்தல **வட்டுவினி**
**காயத்ரி பீடம்வளர் கண்ணகாப ரமேஸ்வரி**

ஸ்ரீ ஜநந்யை நம :

(தங்கம் செய்யும் வழி அறிய)

# ஸ்ரீ தேவியைக் குறிக்கும் மந்த்ரம்.

32. ராகம்: ஸ்ரீரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

பஞ்ச தசாக்ஷரி மஹாமந்த்ரம் ஸ்ரீ
ரஞ்ஜனி த்ரிபுர ஸௌந்தரிதேவி மந்த்ரம்

அநுபல்லவி

செஞ்சிவன் சக்திகாமன்
சேர்ந்திடும் தத்துவம்
ரஞ்ஜக அக்ஷர
ரகஸிய வித்தகம்

சரணம்

ககாரம் சிவனையும் ஏகாரம் சக்தியையும்
காமன் ஈகாரமும் க்ஷிதில காரமும்
ஹகாரம் ரவியையும் சீதகிரணன் லகாரம்
ககாரம் ஸ்மரனையும் ஹம்ஸம் ஹகாரமும்

மத்யம காலம்

ஸகலமுக் ஹருல லேகைகள் யாவும்
புகல்மூன்று ஹ்ரீம்கார பராமார ஹரய
அகம்பஞ்ச தசாக்ஷரம் பதினைந் தானதே
இகஇனு வைகண்ண காபர மேஸ்வரி.

ஸ்ரீ நித்யாயை நம:

(செல்வம் கொழிக்க)

# ஸ்ரீ தேவியைப்பற்றிய மந்திரம்.

38. ராகம்: வசந்தா  தாளம்: ஆதி

பல்லவி

சௌபாக்யப் பஞ்சதசீ மந்த்ரம் — ஸகல
சௌபாக்யம் தந்திடுமே சுபீக்ஷம் நிரந்தரம்

அநுபல்லவி

கௌமாரி பீஜாக்ஷர மந்த்ரம் — சேர்த்தே
கிலீம் ஹ்ரீம் ஹ்லீம் எனும்
காமயோனி லக்ஷ்மீ மந்த்ரம்

சரணம்

கஞ்சபுஷ்ப ஹாரமணி கையிலேந்தும் யோகிகளும்
பஞ்சதசீ மந்த்ரம்சேர் பீஜாக்ஷரங்கள் ஜெபித்தே
தஞ்சமெனத் திரிகோண சிதக்னியில் நெய்யாஹுதி
மிஞ்சுபக்தி ஹோமம்செய்து நித்யானந் தம்பெறுவர்

மத்யம காலம்

பஞ்சத சாக்ஷரியே பதியாம் இணுவைநகர்
பீடக் காயத்ரியின் வட்டுவினித் தலத்தேவீ!
ரஞ்ஜக மந்திர கோஷப்ரியே தேவீ!
கண்ணகாப ரமேஸ்வரி கஞ்சமலர்ப் பதம்துணை.

ஸ்ரீ பகவத்யை நம :

(ஐயம் நீங்க)

# சக்தி சிவ ஸமத்துவம்.

34. ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஸமரஸ பாவஸ்வ ரூபிணி — அம்ப !
ஸதானந்த பைரவ பைரவி சித்சக்தி

அநுபல்லவி

ஸமத்துவ சேஷசேஷிச்
ஸரீர ஆத்மாவுமாகி
ஸமமாகச் சிவனோடு
சாரும் ஆனந்தபைரவி

சரணம்

ஆனந்த பைரவனின்
மோனந்தவழ் உருவாய்
ஞானந் திகழும்சக்தி
ஞான்றும் நிலைபெறுவாய்
கானந்தனைப் பாடுவேன்
கண்ணகா பரமேஸ்வரி
தேனமுத இணைவைவட்டு
விளிக்காயத்ரி பீடச்

ஸ்ரீ சிவயுவத்யை நம :

( ஹ்ருதய நோய் நீங்க )

# ஸகல தத்வ ரூபிணி.

35. ராகம்: ஹிந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

சிவபத்னியே தாயே — தேவீ !
சித்சக்தி ஆனந்த பைரவரூபியே !

அநுபல்லவி

தவமனம் ஆகாச வாயுஅக்னி ஜலம்
புவனியான பூமி தத்துவங்கள் யாவும்நீயே!

சரணம்

ஆக்ஞா தத்வ மனஸ்தத்வம் நீயானாய்!
ஆகாசதத் துவமானாய் விசுத்திசக் ரத்தில்நீயே!
அநாஹத சக்ரத்தில் வாயுதத்துவ மானாய்!
அக்னிதத்வ ஸ்வாதிஷ் டானத்தில் இருக்கும்நீயே!

மத்யம காலம்

மணிபூ ரகத்தின் ஜலதத்வம்நீயே!
மூலாதாரப் பிருதுவி நீயே !
அணிநகர் இணுவை காயத்ரி பீடம்
அமரும் கண்ணகா பரமேஸ்வரி நீயே !

ஸ்ரீ தேவ்யை நம :

( கடும் வியாதிகள் தீர )

# ஸ்ரீ தேவியின் ஆஜ்ஞாசக்ர பிரபாவம்.

36. ராகம்: துர்க்கா தாளம்: ஆதி

**பல்லவி**

நமஸ்காரம் செய்வேன் தாயே! — ஸ்ரீதேவ்யை
கமழுமுன் ஆஜ்ஞாசக்ரக் காமேஸ்வரனை நானும்

**அநுபல்லவி**

தவகோடி ரவிமதி
தரித்தகாந்தி யுடைய
சுகுண நிர்க்குணசக்தி
சாருமிடப் பாகத்தானை

**சரணம்**

சூரியச்சந் திரஅக்னி
சூழும்ஒளி பரவிடாத
தேவி பரஞ்ஜோதிமய
ஸாயுஜ்ஜப் பதவிஅருள்
ஊரின் இனு வைப்பதியின்
உயர்வட்டு விளித்தலத்
தேவி கண்ணகாபர
மேஸ்வரி நின்னையும்

ஸ்ரீ தேவ்யை நம :

( பீடைகள் நீங்க )

# விசுத்தி சக்ரத்தின் மஹிமை.

37. ராகம்: ஹம்ஸநாதம் தாளம்: ஆதி

பல்லவி

சக்கர விசுத்தியிலே ஸ்படிக நிர்மலரூப!
தத்வஆ காசமூல சிவாஸமதேவீ நமோ!

அநுபல்லவி

சந்த்ரகி ரணஸமான
சக்திமிகும் காந்தியினால்
இந்தப்புவி இருள்நீக்கும்
இறைஇறை வியருளால்

சரணம்

இருள்நீங்கி சகோரபக்ஷி
இணைவதைப் போலவே
அருளொளி யாலஞ்ஞானம்
அகன்றுலகும் ஒளிரும்
திருதிகழ் இணுவையில்
திருத்தல வட்டுவினிக்
குருக்காயத் திரிபீடக்
கண்ணகா பரமேஸ்வரி -

ஸ்ரீ கீர்த்தேவ்யை நம :

(பாலர் நோய் நீங்க)

# அநாஹத சக்ர மஹிமை.

38. ராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

பல்லவி

ஞானத் தாமரையில் மோனத்தேன் பருகியே
ஞானியர் மனத்தடத்தில் சஞ்சரிக்கும் அன்னங்களே!

அநுபல்லவி

கானஹம் ஸத்வனியில்
கலைபதினெண் கள்தோன்றும்
மானஸதோஷம் நீக்கி
மனோஹரம் மாந்தும்ஹம்ஸ்

சரணம்

அன்னத்தம் பதிகளே!
ஆராதனை செய்திடுவேன்
வன்னப்பசும் பால்ஜலம்
வகைபிரித் தருந்திடுவீர்
நன்னகர் இணுவையின்
நற்றல வட்டுவினி
அன்னமேகா யத்ரிபீடக்
கண்ணகர் பரமேஸ்வரி.

ஸ்ரீ ஆநந்தயை நம :

( துர்ஸ்வப்பன தோஷம் நீங்க )

# ஸ்வாதிஷ்டான சக்ர மஹிமை.

39. ராகம்: ஸாவேரி                தாளம்: ஆதி

### பல்லவி

"மஹத்" எனும் சக்தியையும்
"மய" அக்னிக் காமேஸ்வனை
நிதம் நினைந்தே என்றும்
நெஞ்சாரத் துதிசெய்வேன்

### அநுபல்லவி

தஹம் செய்யும் காலாக்னி
தரணிப்ர ளயமாக்க
அகம் குளிர்ந்தநின் பார்வை
இகம்தனைக் குளிர வைக்கும்

### சரணம்

சக்கரஸ் வாதிஷ்டான அக்கினித் தத்துவத்தின்
மிக்கப் ப்ரளயகால அக்னியைத் துதித்திடுவேன்
உக்ரப் ப்ரளயகால அக்னிஜுவாலை மேவ
தக்க கருணையினால் லோகக்ஷேமம் தந்தாய்!

### மத்யம காலம்

கருணை பொழிகின்ற கண்ணகா பரமேஸ்வரி
திருவட்டு வினிக்காயத் திரிபீடம் வளர்தாயே!
அருள்நிறைந் திடும்ஜகத் காரணி நீயல்லவோ?
திருவடி தந்தருள் ஒருவரு மில்லையம்மா!

ஸ்ரீ அத்ரிநராயை நம :

( எதிர்காலம் அறிய )

# மணிபூரக சக்ர மஹிமை.

40. ராகம்: அமிர்தவர்ஷணி                தாளம் : ஆதி
( திஸ்ரகதி)

பல்லவி

நீலமேக ரூபிஉந்தன் சதாசிவத் தத்துவம்
கோலச்சக்ர மணிபூரகக் கோலாகல வாசஸ்தலம்

அநுபல்லவி

காலஅக்னி ருத்திரனும் தஹிக்கும்மூவு லகங்களை
பாலமிர்த மழைபொழிந்து மூவுலகைக் குளிரச்செய்யும்

சரணம்

இருளகற்றும் சக்தியே இனியமின் னல்ஒளியே
தரிக்கும்ரத் னாபரண வர்ணவான வில்ஜோதியே !
திரிபுரப்ர ளயசூர்ய ருத்ரன்அன்று தஹித்தபோது
கருணைமழைபொழிமுகிலேஅமிர்தவர்ஷிணிபணிந்தேன்

மத்யம காலம்

பகவ திகண்ண காபர மேஸ்வரி
இகம தில்இனு ஷைப்பதித் தேவீ!
ஜகம தில்நர்ம ஸாஸ்தாகு ரூகுல
புகல ரும்காயத் ரிபீட வாஸினி.

ஸ்ரீ ஹரஸஹஸர்யை நம:

( வயிற்றுவலி நீங்க )

# மூலாதாரச் சக்ர மஹிமை.

41. ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

ஆதாரச் சக்ரத்தில் ஆனந்த லாஸ்யம்
ஆடும்ஸம யாதேவியோ டாடிடும் தாண்டவனே!

அநுபல்லவி

வேதாகமம் போற்றும்மஹா பைரவ ரூபனே!
பாதாரவிந் தம்பணிந்தேன் பரதேவி யின்மூல

சரணம்

நவரஸ நாயகி ஸமயா தேவியொடு
தவநிறை ஸ்ருங்காராதித் தாண்டவமூர்த்தி நீயும்
பவப்ரள யகாலத்தில் மூவுல கழியும்போது
பைரவி பைரவராய்ப் பாலிக்கும்மா தாபிதாவே!

ஆதி மூலாதார அருட்சக்தி ரூபிணியே!
மேதினியில் இணுவைத்தல வட்டுவினி வாஸினி
மாதவக்கா யத்திரிபீடம் அமரும் ஸ்ரீதேவி!
பாதம்தொழு தேன்கண்ணகா பரமேஸ்வரி தாயே!

ஸ்ரீ ஹிமகிரிஸுதாயை நம :

( மஹோதரம் நீங்க )

" ஸௌந்தர்யலஹரி "

# ஸ்ரீ தேவியின் கிரீட வர்ணனை.

42. ராகம்: ஹேமவதி தாளம்: ஆதி

பல்லவி

மாணிக்கக் ரீடகாந்தி மயக்கந்தந் திடுதடி
ஆணிப்பொன் க்ரீடரத்னம் ஆதித்யர்ப்ர காசமோடி?

அநுபல்லவி

பேணிக்ரீடத் தில்பொதித்த ப்ரகாச ரத்னங்களின்
ஜோதிக்காந்தி வானவில்லின் ஒளிப்ர வாஹமோடி?

சரணம்

இந்திர தநுஸோ அந்தச் சந்திரரே சொல்லடி!
எந்தன் மனச்சந்தேகம் எடுத்துரைத்தே நில்லடி!
பந்தம் மிகுந்தபன்னிரு பகலவர் ஒளியோடி?
உந்தன் கிரீடம் வர்ணிக்க ஊகம்பல தோன்றுதடி!

கார்குழற் கேஸியே கண்ணகாபர மேஸ்வரி
பார்புகழ் இணுவையூரின் பதிவட்டு வினித்தேவீ!
சீர்மிகும் தர்மஸாஸ்தா குருகுல நிவாஸினி
பூர்ணிமா காயத்ரி பீடம்அமரும் தாயே!

ஸ்ரீ சிவாலய நம:

( ஜெயம் - புகழ் பெறவும் வியாதி நீங்கவும் )

# ஸ்ரீ தேவியின் கேச வர்ணனை.

43. ராகம்: ஸாருகேஸி தாளம்: ஆதி

பல்லவி

கருநெய்தல் மலர்க் கூந்தலோ? — தேவியுன்
கருங்குழல் கமழ்ந்தெங்கள்
இருள்வினை அகற்றுமே!

அநுபல்லவி

பெருமணம் கமழுமுன் கருநிறக் கேசமும்
தருகற்ப கமலரில் பெறஇந்திரன் போஷித்தான்

சரணம்

கேசக் கலாபக்குழல் வாசனையும் இயற்கையே!
வாசவனும் கற்பகத்தை வாஸனைபெற வளர்த்தான்
பூசனை மலர்களுந்தன் கேசவாஸ னையும்பெறும்
தேகமலர் வாஸனையும் கூசுமிடர் அகற்றிவிடும்

கூந்தலழ கியேகண்ணகா பரமேஸ்வரித் தாயே!
சாந்த தர்மஸாஸ்தா குருகுல ஈஸ்வரி
பூந்தல இணுவையூர் வெட்டுவினி வாஸினி
காந்தமிகு காயத்ரி பீட நிவாஸினி.

ஸ்ரீ வைதாத்ர களத்ராயை நம :

( ஜனங்களின் மனத்தைக் கவர )

# ஸ்ரீ தேவியின் வகிட்டின் வர்ணனை.

44. ராகம்: லதாங்கி தாளம்: ஆதி

**பல்லவி**

குங்குமத்தால் குளித்த வகிடு! — தேவியுன்
மங்கள க்ஷேமத்தைப் பொங்கிட அருளட்டும்!

**அநுபல்லவி**

பங்கஜஸௌந் தர்யமுக
மங்களம் பெருகிவந்தே
பொங்கி வழிந்தோடும்
பெருவழி யுன்வகிடு

**சரணம்**

உதய சூரியன்போல
ஒளிர்கின்ற நின்வகிடு
கரிய கேசப்பகைவர்
கடுஞ்சிறை கொள்வகிடு
இதயம் போற்றும்பதி
இணுவையூர் வட்டுவினி
நிதமமர்ந்த கண்ணகா
பரமேஸ்வரி நுதலில்.

ஸ்ரீ தேவ்யை நம :

( வருங்காலத்தை உணர )

# ஸ்ரீ தேவியின் முன்நெற்றி மயிர்கள்.

45. ராகம்: ஷண்முகப்ரிய தாளம்: ஆதி

பல்லவி

பூமுகம் தாமரைப் பூவைப் பரிகஸிக்கும்
தேவியுந்தன் தந்தவொளி
கேஸரங்களாய் ஒளிரும்

அநுபல்லவி

காமனை எரித்தசிவன்
கண்களும்வண் டுகளாகி
தேமதுர நின்வதனத்
தாமரையைச் சுற்றிவரும்

சரணம்

நெற்றியின் சிறுரோமங்கள்
சுற்றும்சிறு தேன்வண்டுகள்
கொற்றவன் பரமேஸ்வரன்
முக்கண்வண்டுன் முகம்சுற்றும்
இற்றரையில் இனுவை வட்டு
விளிக்காயத் திரிபீடம்
சிற்பரை கண்ணனுகாபர
மேஸ்வரியே உந்தன்

ஸ்ரீ விமலலாடாயை நம :

( ஸந்தான பாக்யம் உண்டாக )

# ஸ்ரீ தேவியின் நெற்றி.

46. ராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

### பல்லவி

அணிந்த க்ரீடத்தின் கீழுள் நெற்றியிலே — தேவீ !
மணிச்சந்த்ர கலையொன்று தோன்றுதம்மா !

### அநுபல்லவி

புனைந்த க்ரீடச்சந்த்ர
கலையினொடு – நுதல்
வனைந்தநின் சந்த்ரகலை
வடிவப்பூ ரணையன்றோ !

### சரணம்

நெற்றியின் சந்த்ரகலை
நின்க்ரீடத்தின் கீழேஒளிர்
பொற்றிருச் சந்த்ரகலை
பூரண மதியன்றோ !
கற்றைக் குழலழகி!
கண்ணகாப ரமேஸ்வரி!
பொற்புறுகா யத்ரிபீடப்
பூர்ணிமா நமஸ்காரம்.

ஸ்ரீ உமாயை நம ।

( தெய்வ பிரீதி பெற )

# ஸ்ரீ தேவியின் புருவங்கள்.

47 ராகம்: ஆபேரி தாளம்: ஆதி

பல்லவி

மதன்வில்லோ உந்தன் புருவங்கள்? — தேவீ
நிதம்பக்தர் அச்சமதை நீக்கும் உமையேதாயே!

அநுபல்லவி

இதமான நின் அழகுக் கருவண்டுக் கண்களும்
மதன்கையின் வில்லதன் நாண்கயி றானதோ?

சரணம்

வலக்கரம் மதன்பிடித்த வில்லது விரற்பிடி
உலவிய முழங்கையும் மணிக்கட்டும் மத்யவில்
நிலவிய பகுதியை மறைத்திட விற்புருவ
அழகினைக் கொண்டனை அன்னையே பராசக்தி!

அபயஹஸ்தம் காட்டி அச்சம் தவிர்ப்பவளே!
தபஜெப தர்மஸாஸ்தா குருகுலக் காயத்ரிபீட
உபய இணைவைபட்டு னிர்த்தல முறைபவளே!
கவலைகள் தீர்த்திடும் கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ விசாலாயை நம :

( க்ரஹதோஷம் நீங்க )

# ஸ்ரீ தேவியின் கண்கள்.

48. ராகம்: ஸிந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

வலக்கண் பகலவனோ ஸ்ரீதேவீ ? — என்றும்
பகல்பொழுதையே தோற்றிப்
பார்க்கவப்ர காசம்நல்கும்

அநுபல்லவி

இடக்கண் சந்திரனோ தேவீ ? — தாயே !
இனிய குளிர் நிலவால்
இரவு மலரும் உந்தன்

சரணம்

காலைமாலை சந்த்யா
காலங்களை உனது
கோலமூன்றாம் விழியும்
குலவில் புலரச்செய்யும்
ஆலய வட்டுவினி
அழகுக்கா யத்ரிபீடம்
சாலஅமரும் கண்ணகா
பரமேஸ்வரி அபயம்.

ஸ்ரீ விசாலாயை நம :

( நிதி லாபம் பெற )

# ஸ்ரீ தேவியின் பார்வை.

49. ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

மங்களக் கல்யாண லோசனம்! — தேவீ!
பொங்கிடும் விசாலசு லோசனம்த்ரி நயனம்

அநுபல்லவி

அங்கநேத் திரங்களுக்கு ஈடாகுமோ பங்கஜம்?
தங்கும் கருணையோடுன் விழிகள் ஸங்கமம்.

சரணம்

எங்கணும்பக் தரைக்காக்கும்
விழியெழில் சொல்லப்போமோ?
தங்கநகர் போலொளிரும்
தாயேநின் விசாலக்கண்கள்!
இந்திவரப் புஷ்பங்களும்
எழில்விழிக் கிணையாமோ?
புந்திமகிழ் பக்திசெய்யப்
புரியும்கா ருண்யம்கண்கள்

மத்யம காலம்

கல்யாணி விசாலா அயோத்யா தாரா
நல்ல அவந்தி மதுரா நகரென
வல்லகண் ணகாபர மேஸ்வரி நாமம்
சொல்லிட அருள்வாள் காயத்ரி பீடத்தேவீ.

ஸ்ரீ கல்யாண்யை நம :

( அம்மை நோய் நீங்க )

# ஸ்ரீ தேவியின் கடைக்கண் நோக்கு.

50. ராகம்: மாண்டு தாளம்: ரூபகம்

பல்லவி

செக்கச் சிவந்ததுமேனோ ? — தேவீ!
முக்கண்ணாம் நெற்றியில்
முகிழ்த்திடும் நின்விழி

அநுபல்லவி

பக்கம் வளர்ந்திடு
செவிகளும் கவிஞரின்
மிக்கிடு காவிய
மலர்மது மாந்திடச்

சரணம்

ஸ்ருங்கா ராதிநவ
ரஸங்களைப் பருகிடும்
சுரும்பு விழிகளும்
ஸாஹாநந்தம் கொண்டிட
பெரும் பொறாமைகொள்
நுதல்விழி சிவந்ததோ ?
திருக்காயத் திரிகண்ண
காபர மேஸ்வரி.

ஸ்ரீ ஜநந்யை நம:

( கீர்த்தி பெற )

# ஸ்ரீ தேவியின் ரஸப்பார்வை.

51. ராகம்: பிருந்தாவனஸாரங்க தாளம்: ஆதி

பல்லவி

ரஸபாவ நாயகியே — தேவீ !
இசைவான பதிசிவனுக் கினியசிருங் காரமூட்டும்

அநுபல்லவி

அசையாதமாற்றாருக்கே அன்னைபீபத்ஸம் காட்டுவாய்
ஸபத்னிகங் கைக்குஉந்தன் ரௌத்ரரஸம் கூட்டுவாய்

சரணம்

திரிபுரச் சிவலீலை அற்புதரஸத்தை யூட்டும்
பரமசி வன்அணியும் பாம்புப யத்தைமூட்டும்
ஸகியருடன் ஹாஸ்யம் நுதல்விழி வீரரஸம்
மஹிமைக் கருணைப்பார்வை மனத்தில்எ னக்குஊட்டும்

மத்யம காலம்

பாவர ஸங்களைப் பார்வையி னால்ஊட்டும்
தேவியே கன்னகா பரமேஸ்வரித் தாயே!
பூவில் இனுவைவட்டு வினிகாயத்ரி பீடம்
மேவிய ருள்பவளே மிளிர்அருள் விழியாளே,

ஸ்ரீ கோத்ராதரபதிகுலோத்தம்ஸகலிகாயை நம :

( கண், காது நோய் நீங்க )

# ஸ்ரீ தேவியின் கண்கள்.

52. ராகம்: மதுவந்தி தாளம்: ஆதி

பல்லவி

பஞ்சபாணனின் கணையோ நின்விழிகள்? — தேவி!
மிஞ்சுசெவி வரை வளர்ந்து
அம்பிறகு ரோமம் கொண்ட

அநுபல்லவி

ரஞ்ஜனியுன் பதிசிவனின்
நெஞ்சம் ஸாந்தியைக் கலைத்தே
கஞ்சவிழி யம்பினாலே
காமஸ்ருங் காரமீந்தாய் !

சரணம்

நீள்செவி வரைவளர்ந்த
நின்விழிமலர் அம்புகள்
வேள்மதனின் வில்லில்பூட்டும்
பாணங்களைப் போலிருக்கும் !
கோள்பரவித் துதிசெய்யும்
கண்ணகா பரமேஸ்வரி
நாளும்வட்டு வினிப்பதிக்
காயத்திரி பீடத்தேவி !

ஸ்ரீ ஈசாநந்தபிதாயை நம :

(சகுனம் பார்க்க)

# ஸ்ரீ தேவியின் முக்கண்களும் முக்குணங்களும்.

53. ராகம்: பேகட தாளம்: ஆதி

**பல்லவி**

அஞ்சனம் தீட்டிய அழகு விழியழகி!
செஞ்சிவப்பும் வெண்கறுப்பும்
விழிகளில் சேர்ந்ததென்ன?

**அநுபல்லவி**

வெஞ்சமர்ப் பிரளயத்தில் வேதன்அரி அரன்மூவர்
தஞ்சமடைந்தே நின்னிடம் தாயேவந் தடங்கினரோ?

**சரணம்**

ரவிமதி அக்னியெனும் ரஞ்ஜக விழிகளில்
ரஜஸ்ஸத்வ தமோகுணம் தாங்கியுன் கண்ஒளிரும்
அவிழ்விழித் திருஷ்டியினால் அயன்அரி ருத்ரனும்
பவித்ர ஸ்ருஷ்டிஸ்திதி சங்காரம்செய் விக்கும்எழில்

வண்ணக் கண்ணழகி கண்ணகா பரமேஸ்வரி!
மண்ணில் இணுவைநகர் மகிழ்வட்டு வினித்தேவீ!
நண்ணும் தர்மஸாஸ்தா குருகுல நிவாஸினி!
எண்ணும் காயத்திரிபீட எழிற்கருணை லோசனி!

ஸ்ரீ பசுபதி பராதீத ஹ்ருதாயை நம :

( துஷ்ட ரோகங்கள் நீங்க )

# முக்கண்களும் முந்நதிகளும்.

54. ராகம்: ஹிந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

பரனிடம் அர்ப்பணித்த பரதேவி நின்விழிகள்
அரிபடர்ந் திருப்பதேன ? நதிகளோ சொல்லடி ?

அநுபல்லவி

அரியசிவப்பு வெண்மை கரியரேகைகள் உந்தன்
திரிநய னங்களிலே தோன்றும் நதிகளோடி ?

சரணம்

செவ்வரி படர்ந்தே சீராய்மேற் றிசைசெல்லும்
அவ்வரிய நதி சோணாநதி யானதோ ?
கவ்விய வெண்ரேகை கீழ்த்திசைக் கங்கையில்
வவ்விய கிழக்கிலே வரும்நதி யமுனையோ ?

மத்யம காலம்

தாயே நின் நயன ரேகைந திகள்மூன்றும்
சேயேனைப் புனிதனாய்ச் செகத்தினில் வாழவைக்கும்
மாயே காயத்ரிபீடக் கண்ணகா பரமேஸ்வரி
ஸோபன இணுவையின் வட்டுவினி வாஸினி.

ஸ்ரீ தரணிதர ராஜந்ய தநயாயை நம :

( சத்ரு மரிக்க )

# ஸ்ரீ தேவியின் கண்ணிமை கொட்டுதல்.

55. ராகம்: பூர்விகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணிமை கொட்டாத காரணம் ஏனோ?
கண்ணகாப ரமேஸ்வரி கருணைபொழியும் உந்தன்

அநுபல்லவி

கண்ணிமை நீமூடினால்
காசினி அழியுமே!
வண்ண இமை திறந்தால்
வையகம் தோன்றுமே!

சரணம்

பர்வத ராஜகு
மாரியே ஈஸ்வரி
கர்மப்ரள யத்தில்நின்றும்
காப்பதற் காகவோ?
சர்மக்கண் ணிமைகளைச்
சாயாது நிறுத்தினை!
தர்மஸாஸ்தா குருகுல
காயத்திரி பீடத்தேவி!

ஸ்ரீ அபர்ணாயை நம :

( சிறைவாசம் நீங்க )

# ஸ்ரீ தேவியின் கண்களின் பெருமை.

56. ராகம்: கேதாரகௌளை தாளம்: ஆதி

பல்லவி

காதருகே வளர்ந்தகண்கள் கதைஎன்ன சொல்லுதம்மா?
கோதைநின்கண் கண்டுமீன்கள் குளநீரில் ஒளியுதம்மா!

அநுபல்லவி

சீலநீலோற் பலஇதழுள்
ஸ்ரீதேவியுன் நயனகாந்தி
காலைமலர் இதழ்கதவு
மூடிட மறைந்திடுமே!

சரணம்

தேவியுன்ந யனஒளி
மாலைநீலோற் பலத்தினுள்ளே
தாவிலக்ஷ்மி யாகவந்தே
கோவில்கொண் டருளுகின்றாள்
பூவில்இணு வைப்பதியில்
புண்யத்தல வட்டுனி
காயத்ரி பீடம்வளர்
கண்ணகா பரமேஸ்வரி.

ஸ்ரீ சிவாயை நம:

( ஸுபிக்ஷம் ஏற்பட )

# ஸ்ரீ தேவியின் கடைக்கண் பெருமை.

57. ராகம்: ஸாருமதி தாளம்: ஆதி

பல்லவி

மங்கள ரூபிணி சிவாயையே — தேவி!
பங்கஜ நேத்திரிநீ பாலித்திடுவாய் அம்மா!

அநுபல்லவி

பொங்கும் கடைக்கண்ணருள்
பொலிந்திடும் பார்வையால்
எங்கள்குறை தீர்த்திடுவாய்!
ஏழையெனைப் பார்த்திடுவாய்!

சரணம்

குளிர்நிறைந்த பார்வையால் குளிப்பாட்டி வைப்பாய்!
எழில்நிறை புண்யம்என்றும் செல்வம்நான் பெறுவேன்
அளிசூழும் அரண்மனையும் அடர்வனத்திலும் சந்த்ரன்
குளிர் நிலவெறித்தல்போலக்கோதைநீஅருள்சொரிவாய்!

பாரபக்ஷ மின்றியே பாலிக்கும் சிவாயையே!
ஊரதில் இணுவைவட்டு வினிக்காயத் திரிபீடம்
சேரும் தர்மஸாஸ்தா குருகுல நிவாஸினி
ஸாரமதி கண்ணகா பரமேஸ்வ ரிதாயே!

ஸ்ரீ அகராஜந்ய தநயாயை நம :

( புகழ் பெற — நோய் நீங்க )

# ஸ்ரீ தேவியின் கன்னங்கள்.

58. ராகம்: பெலஹரி தாளம்: ஆதி

பல்லவி

வண்ண ஒளிப்ரகாசக்கன் னங்கள்! — தேவியுன்
கண்களுக்கும் காதுகட்கும் இடையே வளைந்து தோன்றும்

அநுபல்லவி

மன்மதனின் வில்லதுவோ
மாமதுரக் கன்னங்கள் ?
நின்கடாக்ஷக் கன்னங்களே
நீள்காதிலும் மிகுந்தொளிரும்.

சரணம்

நீண்டவுன் கடைக்கண்பார்வை
நின்செவிக ளினருகே
பூண்டமத னின்பாணப்
பொலிவினைத் தோற்றுதம்மா !
வேண்டிய வரங்கள் நல்கும்
வட்டுவினிக் காயத்ரி
காண்டிடும் பீடத்தேவீ
கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ தேவ்யை நம!

(பத்னியின் ப்ரீதியைப் பெற)

# ஸ்ரீ தேவியின் திருமுகம்.

59. ராகம்: ஆபோஹி தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீசக்ரத் தாடங்க வைரம் — ஜொலித்தே
ஸ்ரீதேவி கன்னங்களில் ஒளிருதே ப்ரதிபிம்பம்

அநுபல்லவி

நாற்சக்கரம் பூட்டிய காமனின் ரதம்போல
தோட்டுச்சக்ரம் பூட்டியநின் திருமுகம் ரதமன்றோ!

சரணம்

தாடங்கச் சக்கரங்கள் தரும்பிம்பச் சக்கரங்கள்
காமன்தன் ரதமாக்கிக் கபாலிப்போர் புரிந்தனன்
சோமன் பூமிசக்ரம் செலுத்திய பூமிரதம்
காமன்தன் ரதமாக்கிக் கடும்சமரிட்ட ரதம்

திரிபுர மெரிசெய்த பரமசிவ னுடனே
புவிரத மேறிக்காமன் பொருதிடச் செய்தது
பெருமைக் கண்ணகாபர மேஸ்வரித் திருமுகம்
இணுவை வட்டுவினிஸ்ரீ காயத்திரி பீடத்தேவீ!

ஸ்ரீ லாவாண்யை நம:

(கல்வி அறிவு பெற)

# ஸ்ரீ தேவியின் பேச்சு.

60. ராகம்: அமிர்தவர்ஷணி தாளம்: ஆதி

பல்லவி

அமிர்தவர் ஷணியோ இனிமை! — தேவீ!
அதனிலும் இனிமைஉன் பேச்சின் கனிமை

அநுபல்லவி

கமழும்உன் இனியசொல்
நவரஸம் பருகியே
ஸரஸ்வதி வியப்புடன்
சிரமசைத் திடுவளே!

சரணம்

கர்ணகுண் டலமசைந்து
கணகண எனஒலித்தே
வர்ணரஸம் மலிந்த
வார்த்தைகள் ஆமோதிக்கும்
தர்மஸாஸ்தா குருகுல
வட்டுவினி க்ஷேத்திரத்தின்
கண்ணகா பரமேஸ்வரி
காயத்ரி பீடத்தேவி!

ஸ்ரீ நஹிநகிரிவம்ஸ த்வஜபட்யை நம:

( விரும்பியதைப் பெற )

# ஸ்ரீ தேவியின் நாசி.

61. ராகம்: நாஸிகாபூஷணி தாளம்: ஆதி

பல்லவி

பனிமலை அரசனின் குலக்கொடியே! — உந்தன்
கனிவுறும் பேரருளை இனிதெமக் கருளுவாய்!

அநுபல்லவி

நனிமுத்து மூங்கிலைப்போல் நாசிமுக்தா மணித்தேவீ!
மணிமுத்து மூங்கில்நாசி மல்கிடுமே பேரருளை.

சரணம்

தாயே! முக்தா மணிநாசி தண்டுமுத்து மூங்கிலைப்போல்
சூலமுத்துத் தாங்கிநிற்கும் வாமச்சந்த்ர நாடிவரும்
ஜீவக்காற்று முத்தலம்ப நாஸிகாபூ ஷணமாகும்
வேயின்நாசி எமக்கெல்லாம் விமோசனம் அளித்திடும்

முத்துமூக் குத்தியலங் காரியே தேவியே!
சக்தி இறுவைப்பதியின் தர்மஸாஸ்தா குருகுல
சித்திக்ஷேத்ர வட்டுவினிக் காயத்திரி பீடத்தேவீ!
முத்தியே கண்ணகாபர மேஸ்வரியே அபயம்.

ஸ்ரீ ஸுதத்யை நம :

( ஸுகமான நித்ரை பெற )

# ஸ்ரீ தேவியின் உதடுகள்.

62. ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

செவ்விதழ்ச் சிரிப்பழகி சேர்முத்துப் பல்வழகி
கொவ்வைப்பழத் திற்குச்செம்மை
கூற்றில் பங்கு கொடுத்தவளே !

அநுபல்லவி

செம்பவளக் கொடிபழுக்கும்
செம்பழமோ இல்லையம்மா !
அம்பவளச் செம்மைமிகும்
அதரமும் கொண்டவளே !

சரணம்

கோவைப்பழம் நாணமுறும்
கோலச் செவ்விதழழகி!
பூவில் இணை வைப்பதியில்
பொலிவட்டு விளித்தலம்
மேவும்காயத் திரிபீடக்
கண்ணகாப ரமேஸ்வரி
தூவும் அருள் நகைஎமக்கு
தூயஸுகம் தந்திடுமே.

—※—

ஸ்ரீ ஸ்புடகுசயே நம:

( அதிகாரம் பெற )

# ஸ்ரீ தேவியின் முகமே சந்திரன்.

63. ராகம்: ஸாருகேசி தாளம்: ஆதி

### பல்லவி

சந்திர வதனம் சுந்தர நகைநிலவு
சந்திரிகை பருகும் சகோர பக்ஷியுணவு

### அநுபல்லவி

பந்தநில வுன்புன்னகை பக்ஷிசகோரம் அருந்தும்
புந்திமகிழக் குடித்துப் புளிப்பை நாடித்திரியும்

### சரணம்

அதிமதுரப் புன்னகை அம்புலி நிலவுதனை
மதியொளி யினும்இனிக்க மாந்தும்சகோ ரப்பக்ஷிகள்
அதிகம் பருகியதால் ஆனபுளிப்பே வேண்டி
மதியொளி நிலவினை மாந்தும்சகோ ரப்பக்ஷிகள்

வண்ண நிலவு பூக்கும் வதன எழிலழகி!
கண்ணகா பரமேஸ்வரி காயத்ரி பீடத்தேவி!
நண்ணும் தர்மஸாஸ்தா குருகுல வட்டுவினி
தன்னில் உறைபவளே! தண்ணருள் தருபவளே!

ஸ்ரீ அயோத்யாயை நம :

( ஸ்திரீகளின் வியாதி நீங்க )

# ஸ்ரீ தேவியின் நாக்கு.

64. ராகம்: பேகட   தாளம்: ஆதி

பல்லவி

பதிபரம னின்திரி புரவிஜய லீலைகள்
அதிமதுரச் சொல்லில் அம்மையுன் நாக்குசொல்லும்

அநுபல்லவி

ஸதம் ஜெபித்திடும்நாக்கு ஸதாசிவத் திருநாமம்
பதிவிரதை நாவுச்செம் பருத்திப்பூ வண்ணமாகும்

சரணம்

மங்களச் சிவகதைகள் மந்திரஜெபம்செய் நாக்கு
எங்கணும் ஜெபித்திட எழிற்செவ் வண்ணம்சேர்க்கும்
பங்கஜச் ஸரஸ்வதியும் பரிந்துநாவில் உறைவாள்
அங்கவள் ஸ்படிகமேனி பொங்கும் மாணிக்கமுமாகும்

செம்மையுறு நாக்கினாலே ஜெகத்திற்கே ஆசிநல்கும்
அம்மை கண்ணகாபர மேஸ்வரியே நமஸ்காரம்
எம்மைக்காக்கும் தாயல்லவோ? எழில்வட்டு வினித்தேவி!
நம்மையெல்லாம் ரக்ஷித்தருள் நாயகிகா யத்திரிபீடப்

ஸ்ரீ மாத்ரே நம :

( அனைத்திலும் வெற்றி கொள்ள )

# ஸ்ரீ தேவியின் நிர்மால்யச் சிறப்பு.

65. ராகம்: ரேவதி தாளம்: ஆதி

பல்லவி

சிரமகுடம் எடுத்துத் தேவியுனைத் துதிப்பார்
கவசமணி விசாகன் இந்திரன் உபேந்திரனும்

அநுபல்லவி

கரமலர் வாங்கிநின் கபளத்தாம் பூலம்மென்று
சிவநிர்மா லியத்திலே சிறிதும்ஆசை கொள்ளார்

சரணம்

அரக்கர் குலத்தைவென்ற அரிஇந்திரன் குஹனும்
புரக்கும்வெண் மதியைப்போல் புனிதப்பச் சைக்கற்பூரம்
சிறக்கும்தாம் பூலத்தைநீ சுவைத்தகபளம் பெற்றே
பெறற்கரும் பேறதாய்ப் பேணிஉண்டு மகிழ்வர்

தாம்பூலம் அலங்கரிக்கும் கண்ணகா பரமேஸ்வரி
பூப்பதி இணுவையில் புகழ்காயத் திரிபீடம்
நாம்பரவித் துதிக்கும் நாயகியே தாயே!
பாம்பணிந் திடும்ஆதி பராசக்தி நீகதியே!

66

ஸ்ரீ ஸாதுவசநாயை நம :

( ஸர்வ ரோக நிவாரணம் )

# ஸ்ரீ தேவியின் வாக்கு வன்மை.

66. ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

வீணைகானத் திலும்இனிக்கும் வாக்கு — வாணியின்
வீணையிசை மாந்தித்தேவி "ஆஹா" எனச் சொல்வது

அநுபல்லவி

கானாமிர்த வீணையிலே கபாலியின் புகழ்கேட்டு
தேனாமிர்த இசைபருகும் தேவியின் ரஸனைவார்த்தை

சரணம்

பரமனின் புகழ்பாடி பாட்டொலி வாணிசெய்தே
விரல்தடவி மீட்டும் விபஞ்சியும் நாணம்கொள்ள
ஸரஸ்வதி வீணையை உறையினால் மூடினாள்
பரதேவி உன்வாக்கு அதிமதுரம் அன்றோ !

கானப் ரியாதேவி கண்ணகா பரமேஸ்வரி
மோன இறைவைவட்டு வினிக்காயத் திரிபீட
ஞான தர்மஸாஸ்தா குருகுல நிவாஸினி
ஆனந்த ரூபியே அம்புஜப் பதம்சரணம்.

ஸ்ரீ கிரிஸுதாயை நம:

(ராஜப்ரீதி உண்டாக.)

# ஸ்ரீ தேவியின் முகவாய்.

67. ராகம்: பாகேஶ்ரீ தாளம்: ஆதி

பல்லவி

எப்படி நான்வர்ணித்துப் பாடுவேன்? — தேவீ!
ஒப்புவமை இல்லாத உன் அழகு முகவாயை

அநுபல்லவி

அப்பன் பர்வதராஜன் அன்புடன் நுனிவிரலால்
எப்போதும் பாசம்கொண்டே எழிலாய்வருடும் மோவாய்

சரணம்

அதரபானம் பருகப் பரமசிவனார் தூக்கி
இதமாகப் பிடித்துயர்த்தும் இனியவுந்தன் முகவாய்
உபமானம் சொல்லவொணா உந்திரு முகக்கண்ணாடிப்
பிடியெனச் சொல்லலாமோ? பரதேவி நீசொல்லடி!

கண்ணாடி போல்முகத்தில் கருணை பொழியுதம்மா!
கண்ணகாப ரமேஸ்வரி காயத்ரி பீடத்தேவீ!
தண்ணார் பதிஇனுவை தலவட்டுவினி வாழும்
பண்ணார்அமு தைப்பருகும் பரதேவி அருள்வாயே!

ஸ்ரீ க்ருபாதாயை நம:

( ராஜப்ரீதி உண்டாக )

# ஸ்ரீ தேவியின் கழுத்து.

68. ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

இழுத்தா லிங்கனம் செய்வான் பரமன் — தேவியுன்
கழுத்துப் பொடிசிலிர்த்துக் கஞ்சத்தண்டு போலிருக்கும்

அநுபல்லவி

வெளுத்த முத்தாரமும் வீசும்கருஞ் சந்தனத்தால்
பளுப்பேறித் தாமரை படர்கொடி போலிருக்கும்

சரணம்

தாமரைப் பூமுகத்தின் தண்டுபோல் கழுத்திருக்கும்
தண்டுக் கழுத்துப்பொடி சிலிர்த்திடும் முள்ளிருக்கும்
வாமமுத்து வெண்மாலை அருகுச் சந்தனச்சேற்றால்
தாமரைக் கொடிபோலத் தண்ணிய காட்சிதரும்

பூமலர் முகத்தழகி புல்லரிக்கும் கழுத்தழகி
வாமக்கருஞ் சந்தனத்தால் வடித்திடும் முகத்தழகி
காமனெழிற் கண்ணழகி கண்ணகாப ரமேஸ்வரி
பூமகிழும் இணுவைநகர் பீடக்காயத் திரித்தேவி.

ஸ்ரீ கதிகமக கீதைக நிபுணாய நம :

( எடுத்த காரியம் நிறைவேற )

# ஸ்ரீதேவியின் கழுத்தின் மும்மடிப்புகள்

69. ராகம்: கௌரிமனோஹரி தாளம் : ஆதி

பல்லவி

மங்கள சூத்திரத்தின் மஹிமையை நினைவூட்டும்
தங்கும் கழுத்தின் மடிப்பும் தாலிச்சரடாகும்

அநுபல்லவி

ஸங்கீத கதிகமகம் கீதவித்யா வல்லவளே !
பொங்குமுன்மங் களச்சரடு பொலிகண்ட மும்மடிப்பு

சரணம்

ஆதாரஷட்ஜ மத்யம காந்தாரக் ராமங்களே
கீதாநு ராகோற்பத்தி ரேகைகள்போல் காட்சிதரும்
நாதாந்தப் பரனுமுன்னை நல்விவாஹம் செய்தபோது
போதகீத கதிகமக பொலிக்ராமங் களேதோன்றும்

மங்கள மாங்கல்ய சரடணியும் தேவீ !
அங்கஷட் ஜமத்யம காந்தாரக்கண் டத்தவளே!
பங்கஜக் கண்ணகா பரமேஸ்வரி காயத்ரி
பொங்கும் பீடத்தமரும் ஸங்கீத கானப்ரியே.

ஸ்ரீ தாராயை நம :

( எடுத்த காரியம் நிறைவேற )

# ஸ்ரீ தேவியின் நான்கு புஜங்கள்.

70. ராகம்: ஸாமா தாளம்: ஆதி

பல்லவி

அபயம் அபயம்என்றே அயன்ஸ்தோத் திரங்கள்செய்ய
உபயபதங்கள் தரும்உமையே பரதேவீ !

அநுபல்லவி

பரமசிவனார் அன்று
பிரமன் தலையைக் கொய்தார்
பிரமனும் பயந்து நான்கு
வாய்களால் நின்னைப் போற்ற

சரணம்

தாமரைக்கொ டிபோலநின்
தண்ணருட்கை மென்மைதரும்
கோமளக் கரங்கள்நான்கு
ஏககால வரங்கொடுக்கும்
பூமியிலே இணைவைவட்டு
விளிக்காயத் திரிபிட
நாமக்கண் ணகாபர
மேஸ்வரியே நின்னிடம்

ஸ்ரீ உமாயை நம:

(தேவதைகளை வசப்படுத்த)

# ஸ்ரீ தேவியின் கைவிரல் நகங்கள்.

71. ராகம்: பீம்பிளாஸ் தாளம்: ஆதி

பல்லவி

நின்விரலின் நகக் காந்திரூபம் — தேவீ !
செவ்விதழ்ச் செந்தாமரையைச் சேரவைத்திடுமே நாணம்

அநுபல்லவி

செல்விமஹாலக்ஷ்மிபாதச்செங்குழம்பின் ஒளிப்ரவாஹம்
செங்கமலம் கொண்டபோதும் சேரும்சோ பைலேசம்

சரணம்

அன்றலர்ந்த தாமரையின் நின்றசெவ் வண்ணம்நாளும்
நின்ற பூமகளின்பாதம் நிறைமருதாணி வண்ணம்
என்றும்நகச் சோபைஈரெண் கூற்று ஒன்றேயன்றோ!
நன்புனிதத் தாமரையும் நாடும்வண்ணம் பெற்றிடுமே!

கைவிரல் நகத்தின்காந்திக் கண்ணகாப ரமேஸ்வரி
வையகத்தில் இணுவைப்பதி வளர்காயத் திரிபீட
ஐயன்பர மன்மகிழும் அம்பிகே நின்னருளால்
செய்யும்பணி செம்மையுறச் செய்திடநீ அருள்வாய்.

ஸ்ரீ தேவ்யை நம :

( யாத்திரையில் பயம் நீங்க )

# ஸ்ரீ தேவியின் ஸ்தனங்கள்.

72. ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

**பல்லவி**

கும்பஸ் தனங்களைத் தொட்டுப் பார்க்கிறான்-குஞ்சரன்
அம்பநின் பாசத்தோடு அமுதப்பால் ஊட்டும்போது

**அநுபல்லவி**

செம்பவள இதழ்களினால் சேந்தன்பால கணபதியும்
கும்பமுலைப் பாலருந்தும் போதுகணபதியும் தன்

**சரணம்**

ஏககாலத்தில் கந்தனும் ஹேரம்பனும் பாலருந்தித்
தாகத்தைத் தீர்த்திடத் தாய்ப்பால்நீ ஊட்டும்போது
பாலவிநா யகனும்ஸ்தன பாரமோகும் பமோஎனக்
கோலக்கரத்தால்தொடவே கோதைசிவனும்நகைத்தார்

துயர்நீக்கும் ஸ்தனத் தேவியே நமஸ்காரம்
உயர் இனுவைப்பதி காயத்திரி பீடத்தேவி
தயைபுரி ஈஸ்வரி தர்மஸாஸ்தா குருகுலம்
வளர் கண்ணகாபர மேஸ்வரியே சரணம்.

ஸ்ரீ நகபதி பகாகயை நம:

( பால் வளம் பெருக )

# ஸ்ரீ தேவியின் ஸ்தனங்கள்.

73. ராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

குமாரனும் கஜானனும் குழந்தைகளே! — அவர்
கோதையர் ஸங்கமத்தில் கொள்ளும்ரஸம் அறியாத

அநுபல்லவி

இமாலய ராஜன்பெற்ற புதல்வியே பார்வதி
அமிர்தரஸ மாணிக்கக் குடுவைஸ் தனத்தவளே!

சரணம்

அன்னைநின் ஸ்தனங்களும் அமிர்தமா ணிக்கக்கடம்
நின்ஸ்தனம் பொழிவது பாலல்ல அமிர்தரஸம்
கன்னல்பால் அருந்தினால் கடந்திடுவார் பால்யம்
கன்னியர் ஸங்கமரஸம் கண்டிடாத உந்தன்

கடஸ்தனக் கன்னிகா பரமேஸ்வரி தேவி!
இடர்நீக் கிடும்தாயே இணுவைநகர் வாஸினி
உயர் வட்டுவிலித்தல காயத்ரி பீடம்
அமர்பவளே மாதா அம்புஜப் பதம்கதியே!

ஸ்ரீ அம்பாளை நம:

(புகழ் உண்டாக)

# ஸ்ரீ தேவியின் இரு ஸ்தனங்களின் நடுப்பகுதி.

74. ராகம்: ஷண்முகப்ரிய தாளம்: ஆதி

பல்லவி

ஸ்தனங்களினது மத்யப் ரதேசம் — தேவீ!
கஜஸுர கும்பம் சேரும் முக்தாஹாரம்

அநுபல்லவி

வனக்கொடிக் கோவைப்பழம் வண்ண அதரக் காந்தி
இனச்சிற்ப வர்ணங்கூட்டும் இனியமுத்துக்கள் காட்டும்

சரணம்

திரிபுர மெரிசெய்த பரமசி வனார்புகழ்
பராக்கிர மத்திணொடு சங்கமித்திடும் கீர்த்தி
பிரதாப சாலியான பரமசி வன்புகழ்போல்
தனப்ர தேசமது தாங்கிடும் முக்தாஹாரம்

வண்ணமுத்து மாலையணி வடிவழகி தேவீ!
கண்ணகாப ரமேஸ்வரி காயத்ரி பீடத்தாயே
பண்ணமுத இணுவையில் பாலிக்கும் வட்டுவினி
நண்ணிடும் க்ஷேத்திரம்வளர் நாயகியே அபயம்.

ஸ்ரீ தரணிதர கந்யாயை நம ।

( கவிதா சக்தி உண்டாக )

# ஸ்ரீ தேவியின் தாய்ப்பால்.

75. ராகம்: ஸரஸ்வதி தாளம்: ஆதி

பல்லவி

ஸாரஸ்வத ப்ரவாஹம் தாயே — நின்பால்
பாரதத்ராவிடப் பாலகன் மாந்திய தாஹம்

அநுபல்லவி

க்ஷீரஸாகர ஹ்ருதய ஸ்தான மூலம்
காருண்ய புத்ரபாசம் சேரும்உன் தாய்ப்பால்

சரணம்

செவிக்கினிய பாடல் செப்பிடப்பா லகனுக்கு
கவித்துவம் நிறைந்தபால் கருணையோ டூட்டினை!
கவிஞர்ஆச் சர்யமுறும் காவியம் படைத்தனன்
கவினுறத் திராவிடச் சிசுமாந்திடும் தாய்ப்பால்

கருணையருள் சுரக்கும் கன்னகா பரமேஸ்வரி
திருவிளங்கும் இனுவைத் தர்மஸாஸ்தா குருகுல
அருள்மலி காயத்திரி பீடம்அமரும் தாயே!
திருவடியே கதி தீன தயாபரி.

76

ஸ்ரீ அசலதநயாயை நம :

( ஸர்வ வல்லமை பெற )

# ஸ்ரீ தேவியின் நாபி.

76. ராகம்: மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

நாபித் தடாகத்தில் குதித்தான் — மதன்
கோபாக்கினி சிவனும் கொண்டெரிக்கத் தேவிஉந்தன்

அநுபல்லவி

தாவிஅனலுடன் மதன்
நீரில் குதிக்கும்போது
மேவும் மெல்லியபுகை
மேலெழுந்ததே அந்த

சரணம்

மடுவான நாபியுள்ளே
மதன்குதித்தான் பாய்ந்தே
உருவான மென்புகைபோல்
உந்தன் ரோமாவளியே!
திருவாழும் இணையிலே
திகழ்காயத் திரிபீடம்
அருளும் கண்ணகாபர
மேஸ்வரியே உந்தன்

ஸ்ரீ சிவாயை நம :

( வெற்றி பெற )

# ஸ்ரீ தேவியின் ரோமாவளி.

77. ராகம்: யமுனாகல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

யமுனை நதியலையின் ரோமாவளி ! — தேவியுன்
அமுதக் கலசத்தூடே நாபிக்குகை வந்துசேரும்

அநுபல்லவி

கமழ்ஸ்தன பாரமத்தி
காணும் ஆகாயம்தானோ ?
ஸ்தன நெருக்கத்தினாலே
தாவிநாபி சேர்ந்ததுவோ ?

சரணம்

நாபிக்கூபத் துள்ளேவானம்
நாடிப்பயந் தொளிக்குமே
தேவியுந்தன் ரோமாவளி
காண்பர் சாமுத்ரிகாஞானி
பூவில் இணுவைவட்டு
விளிக்காயத் திரிபீடம்
மேவியுறை ஸ்ரீகண்ணகா
பரமேஸ்வ ரியேஅருள்.

ஸ்ரீ கிரிஸுதாயை நம :

( ராஜப்ரீதி ஏற்பட )

# ஸ்ரீ தேவியின் நாபி.

78. ராகம்: கரஹரப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

பர்வத ராஜகுமாரி ! — நின்நாபி
ஸர்வகங்கை நீர்ச்சுழிபோல் ஸ்திரமான் காட்சிதரும்

அநுபல்லவி

ஸர்வநாயகியுன்ஸ்தனம் ஸரஸிஜ மொட்டுத்தானோ?
ஸர்மரோமாவளிக்கொடி ஸரஸத்தண்டின் வேர்ப்பாத்தி

சரணம்

மன்மதன் ஒளியாக்னி வளர்ஹோம குண்டந்தானோ?
இன்ரதி விளையாடிடும் இனியகிருஹம் தானோ?
மன்பரமன் கண்களுக்கு தடஸ்சித்தித் வாரம்தானோ?
என்பலவும் பேசிஎன்ன! எடுத்துரைக்க முடியாத

தாமரைமொட்டுத்தனங்கள் தாங்கிய தேவியே!
பூமலர் இனுவைப்புர கண்ணகா பரமேஸ்வரி
க்ஷேமமிகு காயத்திரி பீடம்வளரும் தாயே!
ராஜப்ரீதி தரும் ராஜரா ஜேஸ்வரி.

ஸ்ரீ ஸைலதநாயை நம :

( இந்திரஜால சக்திபெற )

# ஸ்ரீ தேவியின் இடுப்பு.

79. ராகம்: வலஜி                தாளம்: ஆதி

பல்லவி

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க — தேவியே !
மெல்லிய சிற்றிடை மேவும்நீடு க்ஷேமமாகப்

அநுபல்லவி

வல்லான ஸ்தனங்களின் வளர்பாரத்தைத் தாங்கும்
மெல்லாளே நின்இடை மெலிந்துபோகாம லென்றும்

சரணம்

ஆற்றங்க ரைமரம்போல் ஆடியே வீழாமல்
போற்றும் நின்சிற்றிடை பேணிஸ்தன பாரம்
ஆற்றல் பெற்றேதாங்கி ஆனந்த க்ஷேமமாக
வீற்றிருப்பாய் தாயே ஸைலத நாயைநமோ

வண்ணத் தனபாரத்தால் வளையும் இடையுடையோய்!
கண்ணகா பரமேஸ்வரி கழலடிநான் துதித்தேன்
நண்ணும் வட்டுவினித் தலக்காயத் திரிபீடப்
பண்ணவளே உந்தன் பதமலரே சரணம்.

80

ஸ்ரீ தேவ்யை நம:

( மஹேந்த்ரஜால வல்லமை ஏற்பட )

# ஸ்ரீ தேவியின் இடுப்பிலுள்ள மும்மடிப்புகள்.

80. ராகம்: ஸிம்மேந்த்ரமத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

வள்ளிக் கொடியால் மதன்வரைந்த முப்புரிபோல
தெள்ளத் தெளிவாய்உந்தன் திரீவளீ தோன்றுதம்மா!

அநுபல்லவி

உள்ளமதில் ப்ராணபதி பரமேசனை நினைத்தால்
வெள்ளமாய் வேர்வைகொட்டி வியர்வைஅங்கி கிழிக்கும்

சரணம்

தங்கக் கலசஸ்தனம் தளராது பொங்கிவிம்மும்
அங்கஇடை தனபாரத்தைத் தாங்கிடவே மறுக்கும்
பொங்கும் வடிவமர்ந்து பொலிநிறை ஸ்தனங்களும்
தங்கக் கலசம்காக்க தந்தமதன் உத்தியிதே

த்ரீவளீ ஜொலித்திடும் திரிபுர ஸுந்தரி
திருவளர் இறுவையின் திகழ்வட்டுவினி காயத்
திரிபீடம் வளர்ந்திடும் தீனத யாபரி
பெருமைக் கண்ணகாபர மேஸ்வரியே சரணம்.

ஸ்ரீ பார்வத்யாயை நம:

( அக்னி ஸ்தம்பன சக்தி பெற )

## ஸ்ரீ தேவியின் பின்பாகம்.

81. ராகம்: மாயாமாளவகௌள தாளம்: ஆதி

பல்லவி

பூமியை மறைக்குமுந்தன் நிதம்பம் — தேவீ !
நாம ஹிமவானுனக்கு நல்கிய ஸ்திரீதனம்

அநுபல்லவி

மாமஹா கனபொடு
மட்டிலா விசாலமும்
தாள்வரையி லிருந்துன்
தந்தையும் தந்தனன்

சரணம்

தேவிநின் பின்பாகம்
பூமிஸர்வ பாகத்தையும்
மாவிசாலம் கனத்தால்
மறைத்துவிடும் அன்றோ !
பூவில் இனுவைப்பதி
பொலிநிறை வட்டுவினி
மேவும காயத்திரிபீடக்
கண்ணகா பரமேஸ்வரி.

82

ஸ்ரீ விதிஜ்ஞாயாஸ்ய நம:

( ஜலமேல் நடக்கும் சக்தி பெற )

# ஸ்ரீ தேவியின் தொடையும் முழங்கால்களும்.

82. *ராகம்:* கீர்வாணி *தாளம்:* ஆதி

பல்லவி

மாதங்கத் துதிக்கையும் மரத்தங்க வாழையையும்
ஜெயங்கொண்ட நின்தொடைகள்
நிகரில்லாச் சோபைதரும்

அநுபல்லவி

நிதம்உந்தன் ப்ராணபதி
நிமலன் பரமேசனின்
பதங்கள் பணிவதனால்
முழங்கால் கடினமாச்சோ ?

சரணம்

பதிவிரதை நின்கணவர்
பரமனுக்கே பணிந்து
பஞ்சாங்க நமஸ்காரம்
பண்ணிட முழங்காலும்
அதிகடினம் கொண்டதாய்
ஆனைக்கும்பங் களைஜெயித்தாய்
கதிநீயே வட்டுவினிக்
கண்ணகா பரமேஸ்வரி.

ஸ்ரீ கிரிஸு தாயை நம:

( சேனையை அடக்க )

# ஸ்ரீ தேவியின் முழங்காலுக்குக் கீழ்ப்பகுதி.

83. ராகம்: ஹமீர்கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

பரமனை ஜெயித்திட மதன்மலர் அம்பீனொடு
விரல்களாம் நின்பத்துக் கணைகளைத் தொடுத்தனன்

அநுபல்லவி

சரமெனத் தேவர்மணிச்
சாணைமுடி தீட்டிட
விரல்நகக் கணையின்கூர்
வீறுடன் மிளிர்ந்ததே!

சரணம்

கணைக்கால்கள் அம்பராத்
தூணிபோல் தோன்றுமே!
கணைக்கூர் விரல்நகக்
கூர்போல் ஆகுமே!
இணையிலாப் புரமான
இணுவை வட்டுவினியில்
அணைத்திடும் கண்ணகா
பரமேஸ்வரி அருள்வாய்.

84

ஸ்ரீ மாத்ரே நம :

( பரகாய ப்ரவேச சக்தி பெற )

# ஸ்ரீ தேவியின் பாதங்கள்.

84. ராகம்: ஸாரங்கா தாளம்: ஆதி

பல்லவி

வேதாந்த ச்ரோபூஷணம் — தேவியுன்
பாதாரம் சூடிடும் பதமலர் எனக்கருள்வாய்

அநுபல்லவி

நாதாந்த உபநிஷதம்
நாடிஉன் பதம்சுமக்கும்
பாதோதக ஜலமது
பரன்சிரக் கங்கையாகும்

சரணம்

செம்பஞ்சுக் குழம்பினால்
சேரும்நின் பதவண்ணம்
அம்பதுமத் திருமால்
அணிசூடா மணிக்காந்தி
அம்பாஏழை என்மீதில்
அடிமல ரணிஅருள்
எம்புனித இணுவையூர்க்
கண்ணகா பரமேஸ்வரி.

—

ஸ்ரீ மதுராயை நம:

(பூதப்பிசாசங்களை அகற்ற)

# ஸ்ரீ தேவியின் பாதங்கள்.

85. ராகம்: பாகேஸ்ரீ தாளம்: ஆதி

பல்லவி

பரவச மாகுதம்மா! — தேவியுன்
திருவடி மருதாணி சேர்ந்தவுன் பதந்துதித்தால்

அநுபல்லவி

மரவுத்யா னஅசோகம்
பதவுதைக் காசைகொள்ளும்
பரமசிவ னார்கண்டு
பொறாமைகொண்டார் காணப்

சரணம்

நின்பதத்தால் உத்யான
வனத்தில் அசோகமரம்
உன்உதை வாங்க
ஆசைகொண்டதைப் பரமன்கண்டு
வன்மமான பொறாமை
கொண்டான் பசுபதி
இன்இனு வைப்பதிக்
கண்ணகாப ரமேஸ்வரி.

86

ஸ்ரீ ஆபோக வதிகாயை நம :

( பிசாசுகளை விரட்ட )

# ஸ்ரீ தேவியின் திருவடி மஹிமை.

86. ராகம்: ஆபோஹி தாளம்: ஆதி

பல்லவி

ஜெயகோஷமும் செய்தான்! — மதனுமுன்
கிலிகிலித் தண்டைப்பதம் கிளர்சிவனை ஸ்பர்ஸிக்க

அநுபல்லவி

வயமான நெற்றிக்கண்ணால் வதையுண்ட பகைமதன்
சிவநுதலில் நின்பத ஸ்பரிஸத்தைக் கண்டபோது

சரணம்

பதஸ்பரிஸம் வேண்டிப் பரமனும் அயல்ஸ்திரீயின்
இதமான காதல்நாமம் இயம்பி நடித்துநிற்க
மிதமான கோபங்கொண்டு மேவுசிவன் நுதல்தனிலே
பதஸ்பரிஸமும் தந்தாய் பகைப்பாணம் நீக்கிமதன்

பரமனே வேண்டிநிற்கும் பதஸ்பரிஸ மஹிமை
புரஇறுவை நகரில் தலவட்டு விளிப்பதி
அருள்தரும் கன்னகா பரமேஸ்வ ரியேகொண்டாய்!
பெரும்காயத்ரி மந்த்ர பீடம் அமர்பவளே!

ஸ்ரீ ஜநந்யை நம :

( பாம்புப் பயம் நீங்க )

# ஸ்ரீ தேவியின் சரணார விந்தங்கள்.

87. ராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

பல்லவி

தாமரைப் பூவைவெல்லும் தாளிணைகள்! — தாயே!
பூமகள் நாடிவந்தே பொலிவுற உறைந்திடுசெந்

அநுபல்லவி

பூமியில் காலைமாலை பொழுதுசந் தியாவேளை
மேவும் மலர்கருகி மிக்கபனியால் உலரும்

சரணம்

பதுமநின் மலர்ப்பாதம் பனியால் உலராது
நிதமும் மலரும்காலை மாலைசந்தி யாப்பொழுதும்
இதமான பக்திசெய்ய இறைஞ்சும் லக்ஷ்மிசெல்வம்
வதியும் கமலமலா மலர்ந்து உலர்ந்திடுமே!

கமலத்தை வெல்லும்பதக் கண்ணகாப ரமேஸ்வரி
கமழும்பூம் பதத்தவளே அருளேதரும் ஈஸ்வரி
திகழ்இணைவை காயத் திரிபீடத் தேவியே!
புகழ்மிகு வட்டுவினி க்ஷேத்ர நிவாஸினி.

88

ஸ்ரீ தேவ்யை நம :

( மிருகங்களை ஆகர்ஷிக்க )

# ஸ்ரீ தேவியின் பாதங்களின் நுனி.

88. ராகம்: ஸஹானா தாளம்: ஆதி

**பல்லவி**

கவிஞருக் கேனிந்தத் தடுமாற்றம்? — தேவியுன்
அவிழ்பூம் பதநுனிக்கு ஆமைஒடு உவமையோ?

**அநுபல்லவி**

நவிலரும் புகழுக்கே
உறைவிடம் பதநுனி
அவலமிலாத இடம்
அம்மையேநின் உள்ளங்கால்

சரணம்

திருமண நாளன்று
பெருமான் சிவனும்உந்தன்
திருவடி தூக்கியே
திகழஅம்மியில் வைத்தான்
பெரும்பதி இணுவையூர்க்
கண்ணகாப ரமேஸ்வரி
அருங்கவிஞரு முந்தன்
அடிக்கிணை சொல்லப்போமோ?

ஸ்ரீ சண்டிகையை நம:

( நோய்கள் நீங்க )

# ஸ்ரீ தேவியின் பாதங்களின் நுனி.

89. ராகம்: கீர்வாணி    தாளம்: ஆதி

பல்லவி

கற்பக தருதேவர் கேட்டதைக் கொடுக்கும் — நின்
பொற்பத விரல்நுனியோ பக்தர்க்கு அருள்கூட்டும்

அநுபல்லவி

அற்புதமாய் ஏழைகட்கும்
ஐஸ்வரியம் பதம்கொடுக்கும்
நற்புகழால் கற்பகத்தை
நகக்காந்தம் பரிகஸிக்கும்

சரணம்

தேவசசிக் கன்னிகரத்
தாமரை குவியவைக்கும்
ஆவலாய் அதிவிரைவாய்
அருள்அள்ளி நிதம்கொடுக்கும்
பூவைசண்டி கேஸ்வரியே
கண்ணகாப ரமேஸ்வரி
தேவதருக் கற்பகத்தை
தேவிப்பத நுனிபழிக்கும்.

ஸ்ரீ கிரிஸுதாயை நம :

( பில்லி சூனியம் ஏவல் நீங்க )

## ஸ்ரீ தேவியின் திருவடிகள்.

90. *ராகம்:* ஸாவேரி *தாளம்:* ஆதி

பல்லவி

பதுமபாதம் செல்வம் எமக்களிக்கும் — தேவிபதம்
மதுப்ரவா ஹம்செய்யும் கற்பகத ருப்பூங்கொத்து

அநுபல்லவி

அதிமது ரப்பதும
அழகு மலர்த்தேனை
இதமாய்என் ஆத்மவண்டு
இனிதாகப் பருகுமே.

சரணம்

பஞ்சேந்தி ரியங்களும்
பாங்குறு மனம்சேர்ந்து
நெஞ்சாரஆ றுகால்வண்டாய்
ஆத்மாவும் மாறுமே!
கஞ்சானந்தப் பதத்தேவீ!
கண்ணகா பரமேஸ்வரி
பஞ்சாமிர்த காயத்திரி
பீடத்தேவி ஊந்தன்

ஸாருஸ்ரிதாயை நம:

( ஸ்தாவர ஸொத்துகள் பெற )

# ஸ்ரீ தேவியின் நடையழகு.

91. ராகம்: ஹம்ஸநாதம் தாளம்: ஆதி

**பல்லவி**

பாதசர மணியின்ஒலி நடைபயிற்றும் — தேவீ!
சீதவுன் நடைபயிலச் சேர்ந்துஅன்னங்கள் தவிக்கும்

**அநுபல்லவி**

கோதையுன் நடையழகை
ஹம்சம் பயிலத்துடிக்கும்
பேதைஅன்னங்கள் உன்னைப்
பின்தொடர்ந்து நடைகுழறும்

சரணம்

பாதச்சரக் கிண்கிணிகள்
பக்குவமாய் ஒலிஒலித்தே
ஆதரவாய் அன்னநடை
ஆசிரியராய்ப் பயிற்றும்
பூதலத்தில் இணுவைவளர்
புனிதகாயத்ரி பீடம்
காதலுடன் அமர்பவளே
கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ விஜயாயை நம :

( ராஜாங்கத் தலைமை பெற )

# ஸ்ரீ தேவியின் முழு உருவம்.

92. ராகம்: ஹமீர்கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ருங்கார ரஸஉரு எடுத்தான் — தேவியுன்
செங்காந்தி ஒளியால்சிவன் செந்நிறப் பிரதிபலிப்பாய்

அநுபல்லவி

பிரம்மாதி தேவரொடு
விஷ்ணுருத்ரன் ஈசானன்
பிரம்மானந்த நின்கட்டிலின்
பீடக்காலாய்ச் சேவைசெய்தார்

சரணம்

பதிசதா சிவன்வெண்மைப்
பீதாம்பரம் தரித்தான்
ஸதியான தேவியுந்தன்
சிவந்தகாந் தியும்பெற்றான்
அதிலாவண்யச் செம்மை
அழகுரு சிவன்பெற்றான்
பதிஇணைவை காயத்ரிக்
கண்ணகா பரமேஸ்வரி.

## 93

ஸ்ரீ போக்யாயை நம :

( விரும்பியது பெற )

# காமேஸ்வரனின் கருணையே பராசக்தி

93. ராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி

### பல்லவி

கருணாசக்தி நீயே! — தாயே!
கரணமன வாக்கினைக் கடந்தசெந் நிறத்தழகி

### அநுபல்லவி

தரணியை ரக்ஷிக்க
அருணவண்ணமும் கொண்டாய்!
கருணை வடிவழகி
காருண்யப் பரமனின்

### சரணம்

சுரிகுழல் சுபநகை
ஸ்வாபமலர் மணமும்
கரியகல் போலஸ்தனக்
கடினமும் மத்யமென்மை
விரிஸ்தனங்கள் நிதம்பம்
சிவந்த வண்ணமும்பெறும்
புரீஇணைவைக் காயத்ரி
கண்ணகா பரமேஸ்வரி.

ஶ்ரீ ஸஹிதேவ்யை நம :

( பிதரால் போற்றப்பட )

# ஸ்ரீ தேவியின் ஸ்நானம்.

94\. ராகம்: ஷண்முகப்ரிய தாளம்: ஆதி

**பல்லவி**

பரதேவி ஸ்நானதீர்த்தம் பிம்பச்சந்த்ர பன்னீர்ஜலம்
மரகதரத்ன பாத்ரம் மண்டலச்சந்த்ர கரண்டம்

**அநுபல்லவி**

கரகஸ்தூரிச் சந்த்ர
களங்கம் பச்சைக்கற்பூரம்
கலைகள் பொடியாகும்
கவின்ஸ்நானத் திரவியங்கள்

சரணம்

நிதம்தேவி ஸ்நானம்செய்ய
நித்தம்ஸ்நானத் ரவ்வியங்கள்
சதமாகக் குறைந்திடவே
பிரமன் நிரப்பிடுவான்
இதமாய் இணுவைப்பதி
காயத்ரி பீடத்தில்
பதம்மேவும் கண்ணகா
பரமேஸ்வரி அருள்வாய்.

—❦—

ஸ்ரீ கருணாயை நம:

( ரணங்கள், புண் ஆற )

# ஸ்ரீ தேவியை ஆராதிக்கும் தகுதி.

95 ராகம்: ஸாமா தாளம்: ஆதி

பல்லவி

திரிபுர ஸம்ஹாரி பரமசிவ ராஜன்
அரவணைத் திடும்ராஜி நீயல்லவோ ?

அநுபல்லவி

விரிகமலவுன் பதம்
பூஜிக்கும் தகைமையோ
துரிய புலனடக்கும்
தூயவருக்கே உண்டு

சரணம்

சபலம்கொண்ட இந்திரன்
புலனடக் காததால்
உபயபதம் அணுகான்
உன்வாச விலேநின்றே
தவஅணி மாதியரும்
தந்திடும் அஷ்டசித்தி
தனையே பெற்றானன்றோ !

கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ ஸதீநாம் அசரமாயை நம :

( நல்ல அறிவு பெற )

# ஸ்ரீ தேவியின் பதிவிரதத்தன்மை.

பல்லவி

96. ராகம்: ஸாரங்கா தாளம்: ஆதி

பரமனுடன் சேரும் பரதேவியே! — உந்தன்
பதிவ்ரதா சக்தியைப்போல் பாரதிலக்ஷ்மிக்கு முண்டோ?

அநுபல்லவி

ஸரஸ்வதி கவிஞரின்
ஹ்ருதயங்களைச் சேர்ந்தாள்!
வரலக்ஷ்மி தனவான்கள்
கரங்களிலே சேர்ந்தாள்!

சரணம்

பெருமான் நின்பதம்
மருவிடும் ஒரேநெஞ்சன்
மருதாணி மரம்மருவா
மார்பகம் கொண்டவளே!
பெருமைசே ரும்சிறந்த
பதிவ்ரதை நீயல்லவோ?
மஹிமை இணுவைநகர்க்
கண்ண காபரமேஸ்வரி.

ஸ்ரீ பாரப்ரம்ம மஹிஷ்யை நம:

(வாக்குவன்மை – உடல் உறுதி பெற)

# ஸ்ரீ தேவியின் ஸ்வரூபம்.

97. ராகம்: நாதநாமக்ரிய தாளம்: ஆதி

பல்லவி

வேதர ஹஸ்யம் அறிந்தார் — மனத்தில்
மாதவ வாணிலக்ஷ்மி பார்வதி யானாய்தேவீ!

அநுபல்லவி

ஆதி பரப்ரம்ம
ஸதாசிவ நாயகியே!
பூதல மனம்வாக்குக்
கெட்டாத தத்துவம்நீ!

சரணம்

மஹாமாயஸ்வரூபிணி
ஸர்வப்ர பஞ்சத்தை
மோஹிக்கச் செய்பவளே
மஹிமை கடந்தவளே!
மஹாவிஷ்ணு ப்ரம்மாஹரன்
பத்நீகளாய் நீயானாய்!
மாதல இணைவைப்பதிக்
கண்ணகா பரமேஸ்வரீ.

ஸ்ரீ மாத்ரே நம :

( ஸந்தான பாக்யம் பெற )

# ஸ்ரீ தேவியின் கருணை.

98. ராகம் : சுபபந்துவராளி தாளம் : ஆதி

**பல்லவி**

ப்ரஹ்ஞான தாஹம் தீர்ப்பாயோ ? — நின்பத
ப்ரக்ஷாளன தீர்த்தம் தாராயோ ? தேவீ !

**அநுபல்லவி**

லாக்ஷர வித்யாரஸம்
லாவண்யப் பதம்அலம்பும்
தீர்த்தமும் நான்பருகத்
திருவருள் புரியாயோ ?

**சரணம்**

ஸரஸ்வதி தேவிமெல்லும்
தாம்பூல தாரணத்தின்
ஸாரரஸம் போலுந்தன்
லாக்ஷர ரஸமிருக்கும்
குருடுமை யானாலும்
ரஸம்கவித் துவம்அருளும்
திருவளர் இணுவையின்
கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ புராராதே-ரந்த: புராயை நம :

( ஆரோக்கியம் - ஸகல ஸௌகம் பெற )

# ஸ்ரீ தேவி உபாசனையின் பலன்.

99. ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

நின்னை உபாஸனை செய்திடும் பக்தனுடன்
வன்னவாணி லக்ஷ்மி பார்வதி வந்தருள்வாள்

அநுபல்லவி

அன்னவாறை னன் அயன்
அரியோனும் பகைத்திட
இன்னருளாம் கல்வியும்
செல்வமும் மிகப்பெறுவான்

சரணம்

வரஞ்செய்யும் வசீகரணம்
ரதியும் மயங்கிடுவாள்
நிரந்தர மாகப்பசு
பாசம்அ கற்றிடுவாள்
சிரஞ்சீவியாக வாழ்வான்
சிறந்தபே ரின்பங்கொள்வான்
புரஇனுவைக் காயத்ரிக்
கண்ணகாப ரமேஸ்வரி.

ஸ்ரீ ஜநந்யை நம :

(ஸகல கார்ய ஸித்தி பெற)

# ஸகல காரிய சித்திகள் பெற.

100. ராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

நீதந்த வாக்கல்லவோ ஸதகம்! — வாக்தேவீ
நான்உந்தன் கவிஉனக்கே நல்கிஅருள்பெறுவ தெல்லாம்

அநுபல்லவி

ஆனந்த வாக்குத்தந்தாய்! அழகிய அலைச்சதகம்
ஞானந்தவழ் நின்ஸ்தோத்ரம் நான்புனைய வந்திடுமோ?

சரணம்

பானுச்சூரி யர்க்குத்தீப ஹாரதிசெய் வதைப்போலும்
வானசந்த்ர காந்தக்கல்நீர் மதிக்குக் கொடுத்தல்போலும்
ஆன ஆழிக் கேஅதன் நீரைஅர்ப்ப ணித்தல்போலும்
மோனச்சதகக் கீர்த்தனம் நானும்நல் குவதை யொக்கும்

ஸகலகார்ய ஸித்தி தரும்ஜநநீ சக்தீ!
இகமதில் இணுவையூர்க் கண்ணகா பரமேஸ்வரி
புகலரும் தர்மஸாஸ்தா குருகுல நிவாஸினி
ஜெகமதில் வட்டுவினிக் காயத்ரிபீடத் தேவீ!

" சுபமஸ்து ".

— ❦ —

ஸ்ரீ :

இணுவில் — வட்டுவினி

தர்மஸாஸ்தா குருகுலம்

காயத்ரி பீடம்

# ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள்

# ஸௌந்தர்யலஹரீக் கீர்த்தனாஸதகம்

" ஸமாப்தா ".

" சுபமஸ்து ".